# ஆண்டு அறிக்கை
# 2013

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை

நிர்மானத்துறை, பொறியியல் சேவை, வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சு

**உள்ளடக்கம்** **பக்கம்**


| | | |
|---|---|---|
| **அ.** | **பொது** | |
| | எமது தொலைநோக்கு, எமது செயற்பணி, எமது குறிக்கோள்கள் | 3 |
| | பொதுமுகாமையாளரின் கூற்று | 4-5 |
| | கூட்டிணைத்தல் தகவல்கள் | 6 |
| | பணிப்பாளர் சபை | 7 |
| | கூட்டிணைத்தல் முகாமைத்துவம் | 8 |
| | எமது பிரதானமான செயற்பாடுகள் | 9-11 |
| **ஆ.** | **கூட்டிணைக்கப்பட்ட நிர்வாகம்** | |
| | பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் | 12 |
| | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் | 12 |
| | உள்ளக நிர்வாகம் | 12 |
| | நிறைவேற்று முகாமைத்துவம் | 13 |
| | திரவத்தன்மை அபாயம் | 13-14 |
| | சுற்றாடல் பிரச்சினைகள் | 15 |
| **இ.** | **தொழிற்பாட்டு செயலாற்றுகை அறிக்கையிடல்** | |
| | வீடமைப்பு அபிவிருத்தி | 16-21 |
| | ஆதன முகாமை | 22 |
| | காணி சுவீகரிப்பு மற்றும் விற்பனைப் பிரிவு | 22-24 |
| | பொறியியல் சேவைகள் | 24-34 |
| | மனித வள முகாமை | 35-41 |
| | சட்டங்கள் | 41-42 |
| | திட்டமிடல் மற்றும் முன்னேற்றம் | 43 |
| **ஈ.** | **தொழிற்படுத்தல் பெறுபேறுகளின் மீளாய்வு** | |
| | கடன் அறவிடல் செயலாற்றுகை 2013 - கிராம வீடமைப்பு | 44-46 |
| | நகர வீடமைப்பு சாப்புகள்/கடன் தவணைகள் மற்றும் வாடகை அறவிடுதல் - 2013 செயலாற்றுகை | 47 |
| | தகவல் மற்றும் பிரசாரப்பிரிவு | 48-51 |
| | தகவல் தொழில்நுட்பம் | 51-53 |
| | ஓசன் வீவ் டிவலொப்மன்ற் கம்பனி | 54-55 |
| **உ.** | **நிதிக் கூற்றுக்கள்** | |
| | ஐந்தொகை | 56 |
| | வருமானச் செலவு அறிக்கை | 57 |
| | கணக்கீட்டுக்கொள்கைகள் | 58-62 |
| | நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் | 63-90 |
| **ஊ.** | **மாவட்ட அலுவலகங்களின் விபரம்** | 91-93 |
| **எ.** | **கணக்காய்வாளர் அறிக்கை** | 94-120 |

## (அ) பொது

### அறிமுகம்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையானது 1979 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் மூலம் இலங்கையில் வீடமைப்பு அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்காகத் தாபிக்கப்பட்டுள்ளது.

இவ்வதிகாரசபையானது அதன் கொழும்பில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்திற்கு மேலதிகமாக 25 மாவட்ட அலுவலகங்கள் மற்றும் 02 நகர அலுவலகங்கள் மூலம் நாடளாவிய ரீதியில் செயலாற்றி வருகின்றது.

### எமது தொலைநோக்கு

இலங்கையில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அடிப்படை வசதிகளுடன் கூடிய பாதுகாப்பான வீடொன்றை உரித்தாக்கிக் கொடுத்தல்.

### எமது பணி

இலங்கை மக்களின் விஷேடமாக வீடொன்றினைப் பெற்றுக்கொள்ள ஒரு மார்க்கம் காணப்படாத குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வீட்டுத்தேவையினை நிறைவேற்றிக் கொள்வதற்காக தேசிய மட்டத்தில் ஆர்வமூட்டல், வசதியளித்தல், மற்றும் இணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல், இதன் மூலம் அவர்களது சமூக வாழ்வுக்கு நல்லுதவி புரிதல் மற்றும் பொருளாதார சுபீட்சத்தினை அடைவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

### நோக்கங்கள்

1979 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்திற்கு ஏற்ப பின்வருமாறு எமது நோக்கங்கள் காணப்படுகின்றன.

- தொடர்மாடி வீடுகள், வீடுகள் அல்லது வேறு வதிவிடங்கள் அல்லது கட்டிடங்களை நிர்மாணிக்கும் பொழுது நேரடியாக ஈடுபடல்.
- வீடமைப்பு தட்டுப்பாட்டினை குறைப்பதற்காக வீடமைப்பு அபிவிருத்தி திட்டங்களை ஏற்படுத்துவதற்காக திட்டங்களை தயாரித்தல்.
- சேரி மற்றும் குடிசைகள் கொண்ட பிரதேசங்களில் இருந்து அந்த சேரிக்குடிசைகளை அப்புறப்படுத்தல் மற்றும் அந்த பிரதேசங்களை மீள் அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபடல்.
- வீடமைப்பு அபிவிருத்திக்காக ஆர்வமூட்டல்.
- அதிகாரசபையின் நோக்கங்களினுள் ஏதேனும் ஒன்றினை செயற்படுத்துவதற்காக காணியினை அபிவிருத்தி செய்தல் அல்லது மீள அபிவிருத்தி செய்தல்.
- வீடமைப்பு நோக்கத்திற்காக ஏதேனும் ஒருவருக்கு காணியினைப் பெற்றுக்கொடுத்தல்.
- அதிகாரசபையின் நோக்கங்களில் ஏதேனும் ஒன்றுடன் ஒத்துப்போகக்கூடிய ஒரு நடவடிக்கையில் ஈடுபடும் ஒருவருக்கு நிதி அல்லது வேறு வசதிகளை வழங்கல்.
- அபிவிருத்தியுடன் சம்பந்தப்பட்ட சகல பிரிவுகளினதும் நடவடிக்கைகளை செயற்படுத்தல். விருத்தி செய்தல் மற்றும் இணைப்பினை ஏற்படுத்தல்.
- மேற்குறிப்பிட்ட சகல நோக்கங்களில் குறிப்பிட்ட அளவினை அல்லது அனைத்தையும் நிறைவேற்றிக்கொள்ள தேவையான விதத்தில் மற்றும் பொருத்தமான விதத்தில் நடவடிக்கை எடுத்தல்.

## பொதுமுகாமையாளரின் கூற்று

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, நாட்டில் காணப்பட்ட வீடமைப்பு தேவைகளை விரைவாக நிறைவேற்றும் விதத்தில் 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் 1ஆம் திகதி 1979 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்டது. இக்கால கட்டத்தில் ஒரு இலட்சம் வீடுகளை அமைக்கும் தேசிய இலக்கு வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்டது. இதனை தொடர்ந்து பத்து இலட்சம் வீடமைப்பு திட்டம், பதினைந்து இலட்சம் வீடமைப்பு திட்டம் என பல திட்டங்களையும் நாட்டு மக்களின் வீட்டுத்தேவையை நிறைவேற்றும் நோக்கில் அமுல் செய்யப்பட்டது.

2010 ஆம் ஆண்டில் புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது முதல் வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் செயற்பாடுகளை மிகவும் திட்டமிட்டபடி முன்னெடுத்து செல்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன. விஷேடமாக கௌரவ நிர்மாணத்துறை, பொறியியல் சேவை, வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சர் விமல் வீரவங்ஸ அவர்களின் வழிகாட்டலின் கீழ் இந்த அதிகாரசபை துரித வளர்ச்சி ஒன்றினை நோக்கி செயற்படுத்துவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

2010 ஆம் ஆண்டினுள் வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் எதிர்கால திட்டம் தயாரிக்கப்பட்டு 2011 ஆம் ஆண்டிலிருந்து அந்த திட்டம் அமுல்படுத்தப்பட்டது. 2011 ஆம் ஆண்டினுள் 26,277 வீடுகளை அபிவிருத்தி செய்து தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் வரலாற்றில் அதிக தொகை முதலீடு செய்த ஆண்டாக பதிவு செய்து 3402.84 மி. ரூபா வீடமைப்பு அபிவிருத்திக்காக முதலீடு செய்யப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டினுள் இந்த அபிவிருத்தி நடவடிக்கையினை மேலும் வளர்ச்சி செய்யும் விதத்தில் 30630 வீடுகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. இதற்காக 6208மி ரூபா தொகை முதலீடு செய்யப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டினுள் இந்த வேளைத்திட்டத்தினை வெற்றிகரமாக முன்னெடுத்துச் சென்று 19148 வீடுகள் அபிவிருத்தி செய்யப்பட்டன. இதற்கான முதலீடு 6370.0 மி. ரூபாவாகும். இந்த விஷேட முதலீடுகளின் மூலம் மக்களின் வீட்டுத் தேவையினை பூர்த்தி செய்வதில் பாரிய பங்களிப்பு ஒன்றினை வழங்குவதற்கு முடிந்துள்ளது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு தற்போதைய உயர் முகாமை நடவடிக்கை மேற்கொள்வதுடன், பிரதான நிறைவேற்று அதிகாரி என்றவகையில் அதற்கு பங்களிப்பு வழங்க முடிந்ததையிட்டு நான் பணிவுடன் மகிழ்ச்சியடைகிறேன். சேவை வழங்கும் ஒரு நிறுவனம் என்றவகையில் அதிகாரசபை முகம் கொடுக்க நேர்ந்த பிரதான சவாலாக வீடமைப்பு அபிவிருத்திக்கான தேவையான நிதி குறைபாடு காணப்பட்டதை குறிப்பிடலாம். 2011 ஆம் ஆண்டிலிருந்து இந்த நிலைமை மாற்றம் பெற்று நிதி முகாமை திறன் வாய்ந்ததாக காணக்கூடிய வகையில் பல்வேறு மார்க்கங்களின் ஊடாக முதலீட்டினை விருத்தி செய்து சொத்துக்களை உயர்வடையச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்படி 2010 ஆம் ஆண்டில் 10291.0 மி. ரூபாவாக காணப்பட்ட மொத்த சொத்துக்களின் பெறுமதி 2011 ஆம் ஆண்டில் 12421.0 மி. ரூபாவாகவும் 2012 ஆம் ஆண்டில் 14608.0 மி. ரூபாவாகவும் 2013 ஆம் ஆண்டில் 17869.0 மி. ரூபாவாகவும் வளர்ச்சியடையச் செய்ய முடிந்துள்ளது.

2010 ஆம் வருடத்தில் பெற்ற வருமானம் 455.709 மி. ரூபாவும் 2011 ஆம் ஆண்டில் 786.0 மி. ரூபாவாகவும், 2012 ஆம் ஆண்டில் 1431.0 மி. ரூபாவாகவும், 2013 ஆம் ஆண்டில் 1940.0 மி. ரூபாவாகவும் வளர்ச்சி பெற செய்ய முடிந்தது எமது முயற்சியின் பிரதிபலனாகும்.

அதிகாரசபையின் பிரதான வருமான மார்க்கமான கடன் அறவீட்டு நடவடிக்கையினை செயற்திறன் மிக்கதாக மேற்கொண்டதன் மூலம் திரவத்தன்மையை பேணவும், செயற்பாட்டில் இல்லாத கடன் மீதிகளை குறைத்துக் கொள்ளவும். முடிந்தமை எம்மீது கொண்ட நம்பிக்கையை மேலும் உறுதி செய்துள்ளது.

மனிதவளம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையிடம் காணப்படும் பெறுமதிமிக்க சொத்தாகும் என்பது எனது எண்ணமாகும். எமது தலைவர் உட்பட முகாமையின் விஷேட கவனம் மனிதவளத்தினை அபிவிருத்தி செய்வது தொடர்பில் ஈர்க்கப்பட்டுள்ளது. எந்தவொரு நிறுவனத்தினது அல்லது அமைப்பினது நிலைத்து நிற்றல் அல்லது வினைத்திறன் தங்கியிருப்பது அதன் ஊழியர்களின் சக்தி மற்றும் செயற்திறன் என்பவற்றிலாகும். என்பது எமது எண்ணமாகும். இந்த வகையில் 2010 ஆம் ஆண்டு ஆரம்பம் தொடக்கம் ஊழியர் பயிற்சித்திட்டங்கள் வருடந்தோரும் நடாத்தப்பட்டு தொழில் அபிவிருத்திக்கான சந்தர்ப்பங்களை வழங்குவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியில் விஷேட கவனம் செலுத்தப்பட்டது. தேசிய வீடமைப்பு

அபிவிருத்தி அதிகாரசபையின் சுமார் 2000 பேர் பல வருடங்களாக தமக்குறிய பதவி உயர்வுகள் கிடைக்காது மிகவும் சிரமத்துடன் காணப்பட்ட வேளையில், காலதாமதமின்றி நேர்முககப்பரிட்சை ஒன்றினை நடாத்தி பெருந்தொகையானோருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டதுடன், கீழ் மட்ட சேவையில் ஈடுபட்டிருந்த பட்டதாரிகளுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டதன் மூலம் உரிய பதவிகளில் அமர்த்தவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இடர் கடன் கொடுப்பனவு திட்டத்தினை மீள அமுல் செய்யப்பட்டது, தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய ஊழியர்களின் தேவைக்காக மோட்டார் சைக்கிள்கள் பெற்றுக் கொடுத்தல், மகப்பேற்று விடுமுறையினை அரச சுற்று நிருபத்திற்கு ஏற்ப பெற்றுக் கொடுத்தல், விஷேட பங்களிப்பு மற்றும் கடமை நிமிர்த்தம் வழங்கப்பட்ட ஏனைய பங்களிப்புகளையும் பாராட்டும் முகமாக விஷேட திட்டங்களை அறிமுகம் செய்தல், ஊழியர் சேமநல சங்கத்தின் நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல் மூலம் பெறுபேற்றினை அதிகரித்தல், போன்றன ஊழியர்களது நலன் கருதி மேற்கொள்ளப்பட்ட பிரதான நிகழ்ச்சித்திட்டங்களாகும்.

அதிகாரசபைக்கு சொந்தமாக கட்டிடங்கள் காணப்படாத காரியாலயங்களுக்கு, அலுவலக கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இது அதிகாரசபையின் பௌதீக சொத்தினை அபிவிருத்தி செய்வதற்கு எடுக்கப்பட்ட பிரதான நடவடிக்கையாகும். முல்லைத்தீவு, மட்டக்களப்பு, கிளிநொச்சி, மாத்தறை மாவட்ட காரியாலயங்களுக்கு புதிதாக கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டன. கண்டி மாவட்ட காரியாலயத்தினை நடாத்திச்செல்லும் மாவட்ட செயலாளர் தொகுதியினை நவீனமயப்படுத்தி அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொடுத்தது கடந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட மற்றுமொரு நடவடிக்கையாகும். அதிகாரசபியின் ஊழியர்களின் தங்குமிடமாக பாவிக்கும் சுற்றுலா விடுதிகளை நவீனமயப்படுத்தி தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. பல வருடங்களாக வாகனப் பாவனைக்கு புதிதாக வாகனங்கள் சேர்த்து கொள்ளப்படவில்லை. என்றாலும் 2012 ஆம் ஆண்டில் அரச திறைசேரியின் பங்பகளிப்புடன் 18 கெப் ரக வாகனங்கள் தற்போதைய இருப்புக்கு புதிதாக சேர்த்துக்கொள்ளப்பட்டது. இந்த வாகனங்கள் கிராமிய வீடமைப்புத்திட்டங்களை பலப்படுத்துவதற்கு மாவட்ட காரியாலயங்களுக்கு இணைத்துக் கொள்ள முடிந்தது நாம் பெற்ற ஒரு வெற்றியாகும். 2014 ஆண்டினை ஒரு வெற்றிகரமான ஆண்டாக மாற்றி கொள்ளவும் அதன் பயன்களை ஊழியர்களுக்கு வழங்கவும் மற்றும் எம் எதிரே காணப்படும். மக்களுக்கான வீட்டு பிரச்சினைகளை தீர்க்கும் சவாலுக்கும் வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கு நாம் உறுதி பூணுவோம்.

பிரிகேடியர் மகிந்த முதலிகே ஆர்.டப்ளியூ.பீ.ஆர்.எஸ்.பீ.
பொதுமுகாமையாளர்
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை

## கூட்டிணைத்தல் தகவல்கள்

| | | |
|---|---|---|
| பெயர் | : | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை |
| சட்ட நிலைமை | : | 1979 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கச் சட்டம் |
| கூட்டிணைக்கப்பட்ட ஆண்டு | : | 1979 |
| பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் | : | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை/செயலாளர் பணிமனை,<br>இல. 34, சேர் சித்தம்பலம் ஏ காடினர் மாவத்தை<br>கொழும்பு 02. |
| தொலைபேசி இலக்கம் | : | 2421606, 2431707, 2430410, 2431722<br>2421748, 2380874 |
| தொலை நகல் | : | 2434892 |
| மின் அஞ்சல் | : | dgmf@nhda.lk |
| இணையத் தளம் | | www.nhda.lk |
| கணக்காய்வாளர்கள் | : | கணக்காய்வாளர் தலைமை அதிபதி<br>கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம் |
| ஆலோசனை சட்டத்தரணிகள் | : | சட்ட மாஅதிபர்<br>சட்ட மாஅதிபர் திணைக்களம்<br>ஹல்ஸ்டோப்<br>கொழும்பு 12 |
| வங்கியாளர்கள் | : | இலங்கை வங்கி<br>தாபனக் கிளை<br>அச்சிலன் சதுக்கம்<br>கொழும்பு 01<br><br>மக்கள் வங்கி<br>தலைமை அலுவலகக் கிளை<br>சேர் சித்தம்பலம் ஏ காடினர் மாவத்தை<br>கொழும்பு 02 |

## பணிப்பாளர் சபை

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் சபையானது அமைச்சரினால் நியமிக்கப்படுகின்ற 6 அங்கத்தவர்களையும் நிதி அமைச்சின் பிரதிநிதி என்றவாறு மேலுமொரு அங்கத்தவரையும் உள்ளடக்கியுள்ளதோடு, நியமிக்கப்பட்ட அங்கத்தவர்களில் ஒருவர் தலைவராக நியமிக்கப்படுவர்.

| பெயரும் முகவரியும் | பதவி | சேவை நிலையம் |
|---|---|---|
| 1. திரு. எஸ்.ஏ. ஜயந்த சமரவீர<br>மாவல தெற்கு<br>வாத்துவை | தலைவர் | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை |
| 2. திரு. ஏ.டபிள்யூ. தயானந்த<br>இல. 639/3/ஏ,<br>குணவர்தன மாவத்தை<br>பங்கலாவ சந்தி,<br>பிட்டகோட்டே,<br>கோட்டே. | உப தலைவர் | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை |
| 3. திரு. பத்ம உதயசாந்த குணசேகர<br>தர்மோதய மாவத்தை<br>பொத்துவில் வீதி<br>மொனராகலை | செயற்பாட்டு பணிப்பாளர் | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை |
| 4. திருமதி வருனி அப்சரா வல்பிட்ட<br>இல. 121/17 பேஸ்லைன் மாவத்தை<br>கொழும்பு - 08 | அங்கத்தவர் | தேசிய திட்டமிடல் திணைக்களம் முதலாவதுமாடி மாவட்ட செயலாளர் கொழும்பு -01 |
| 5. மருத்துவர் வசந்த பண்டார<br>இல. 2/270, கொழும்பு வீதி<br>குருணாகல் | அங்கத்தவர் | நிர்மாணிப்பு, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சு |
| 6. சட்டத்தரணி ராஜா குணரத்ன<br>இல. 150/05<br>ஹைலெவல் வீதி<br>மஹரகம | அங்கத்தவர் | வீடமைப்பு ஆணையாளர் நிர்மாணிப்பு, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சு |
| 7. திரு. வீ. ரஞ்ஜித் வில்வல ஆரச்சி<br>இல. 15<br>4 வது ஒழுங்கை<br>ராஜகிரிய<br>(2012.10.15 ஆம் திகதி முதல்) | அங்கத்தவர் | நிர்மாணிப்பு, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சு |

## கூட்டிணைத்தல் முகாமைத்துவம்

**பிரிகேடியர் மஹிந்த முதலிகே ஆர்.டபிள்யூ.பீ.ஆர்.எஸ்.பீ.**
பொதுமுகாமையாளர்

**திரு. காமினீ பன்னிலவிதான**
பிரதிப் பொதுமுகாமையாளர் (இணைப்பு)

**திருமதி எம்.எஸ். வீரசிங்க**
பிரதிப் பொதுமுகாமையாளர் (பொறியியல் சேவைகள் மற்றும் நிர்மாணிப்பு)

**திரு. ஈ.ஏ.டீ.எஸ். எதிரிசிங்க**
வேலை பாற்க்கும் பிரதிப் பொதுமுகாமையாளர் (நிதி)

**திரு. டபிள்யு.ஏ.டீ. சரத் குமார**
வேலை பாற்க்கும் பிரதிப் பொதுமுகாமையாளர் (ஆதன முகாமைத்துவம் மற்றும் சந்தைப்படுத்தல்)

**திரு. லலித் எதிரிசிங்க**
பிரதி பொதுமுகாமையாளர் (மனித வள முகாமைத்துவம்)

**திரு. பீ. எம். எஸ். கே. பத்திராஜா**
பிரதிப் பொதுமுகாமையாளர் (வீடமைப்பு அபிவிருத்தி)
(2013.08.21 ஆம் திகதி வரை)

**திரு. கே. ஏ. ஜானக்க**
வேலை பாற்க்கும் பிரதிப் பொதுமுகாமையாளர் (வீடமைப்பு அபிவிருத்தி)
(2013.08.27 ஆம் திகதி முதல்)

**திரு. கே.டபிள்யு.ஏ. தர்ம ஸ்ரீ காரியவசம்**
பிரதிப் பொதுமுகாமையாளர் (தகவல், பிரசாரம்)

**திரு. டபிள்யு. தனசந்திர**
உதவிப் பொதுமுகாமையாளர் (திட்டமிடல் மற்றும் முன்னேற்றம்)

**திருமதி ஏ.கே. புஷ்பா ரோஹினீ**
உதவிப் பொதுமுகாமையாளர் (சட்டம்)

**திரு. பீ.எம்.ஆர். மாரசிங்க**
பிரதான உள்ளக கணக்காய்வாளர்

**திரு. மனுஜ கருணாரத்ன**
பணிப்பாளர் சபை செயலாளர்
(2013.06.10 ஆம் திகதி முதல்)

**சட்டத்தரணி தனுஸ்க மாலிந்த ஜயலத்**
பணிப்பாளர் சபை செயலாளர்
2013.06.11 ஆம் திகதி முதல்

# எமது பிரதானமான செயற்பாடுகள்

எமது குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டு இச்செயற்பாடுகள் செயற்படுத்தப்படுகின்றன.

## 1. கடன் மற்றும் உதவி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

குறைந்த வருமானம் பெருபவர்களுக்காக சலுகை அடிப்படையில் கடன் வசதிகளை பெற்றுக்கொடுத்தல்.
அரச மற்றும் தனியார் துறை மற்றும் நிலையான வருமானம் பெறும் குடும்பங்களுக்காக ஜனசெவண உபகார கடன் நிகழ்ச்சித்திட்டத்தினை அமுல் செய்தல்.
குறைந்த வருமானம் பெறுபவர் ஜனசெவண உபகார கடன் நிகழ்ச்சித்திட்டத்தினை அமுல் செய்தல்.
குறைந்த வருமானம் பெறுபவர்களுக்காக கடன் உதவி வீடமைப்புத்திட்டங்களை நிர்மாணித்தல்.
ஏழைக் குடும்பங்களுக்காக வீடுகளை நிர்மாணிப்பதற்கு நிதி உதவி வழங்கல்.
மீள் குடியேற்ற திட்டத்திற்காக கடன் மற்றும் உதவிகளை வழங்கல்.

## 2. அரசதுறையும் தனியார் துறையும் கூட்டாக வீடமைப்பு நிர்மாணிப்புகளை வளர்ச்சியடையச் செய்தல்

பொருத்தமான நிலங்களை இனங்காணல்.
விருப்பமுள்ள தரப்பினர்களை அழைத்தல்.
தகுதியான அபிவிருத்தியாளர்களுடன் கலந்துரையாடுதல் மற்றும் முன்மொழிவுகளைப் பெறுதல்.
முன்மொழிவுகளை மதிப்பீடு செய்தல் மற்றும் அபிவிருத்தியாளர்களை தெரிவு செய்தல்.
கருத்திட்ட வரைபடங்களை உருவாக்குதல்.
புரிந்துணர்வு உடன்படிக்கைகளை கைச்சாத்திடல்.
ஒருங்கிணைந்த கம்பனிகளை உருவாக்குதல்.
நடைமுறைப்படுத்தல், நிர்வகித்தல் மற்றும் தரச் சான்றுப்படுத்தல்.
சந்தைப்படுத்தல் மற்றும் வீடுகளை விற்பனை செய்தல்.
முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை தாபித்தல்.

## 3. வீடமைப்பு நிர்மாணிப்புகளுக்கான உதவிச் சேவைகளை வழங்கல்

வீடமைப்புத் தகுதியை ஆராய்தல்
சமுதாயத்தை விழிப்புணர்வூட்டல் மற்றும் ஒழுங்கமைத்தல்
சமுதாய அபிவிருத்தி அமைப்புகளை உருவாக்குதல்
வீடமைப்பு/குடியமர்த்தல் திட்டங்களைத் தயாரித்தல்
குறைந்த செலவின நிர்மாணிப்புத் தொழில்நுட்ப முறைகளைப் பற்றிய தகவல்களை பரப்பல்.
தேவைப்பாட்டின் அடிப்படையில் நிதி உதவிகளை வழங்கல்
நிர்மாணிப்புகளின் தரம்/இசைவாக்கத்தை சான்றுப்படுத்துவதற்காக மேற்பார்வை செய்தல்.
உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல்/தொடர்பை பேணிவருதல்.

## 4. நகர அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்

தகுதியான இடங்களை இனங்காணல்.
நில அளவைப் பணிகளை மேற்கொள்ளல்.
நிதிசார்ந்த இயலுமை மட்டத்தை தீர்மானித்தல்.

திட்டவரைபடங்களைத் தயாரித்தல் மற்றும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களைத் தாபித்தல்.
உரிமையை ஒப்படைத்தல்.

## 5. நகமு புரவர (தொடர்மாடி வீட்டு புனரமைப்பு) நிகழ்ச்சித்திட்டத்தினை செயற்படுத்தல்

பழைய வீடமைப்புத்திட்டங்களின் அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்தல்.
தொடர்மாடி வீடுகளை புதுப்பித்தல்.
தொடர்மாடி வீட்டுத்தொகுதிகளில் வசிக்கும் மக்களின் ஆண்மீக குறைநலன்களை மேம்படுத்தி, ஒரு அழகான குடியிருப்பாக மாற்றுவதற்காக, விளையாட்டுமைதானம், தேகப்பயிற்சி நிலையங்கள், தோட்ட அலங்காரம், புத்தர்சிலை மண்டபங்களை புதிதாக நிர்மாணித்தல்.

## 6. காணித் துண்டுகளைப் பெற்றுக்கொடுத்தல்

பொருத்தமான நிலத்தை இனங்காணல்.
தகுதியை ஆராய்தல்.
காணித் துண்டு வரைபடங்களைத் தயாரித்தல்.
தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கல்.
காணி பெறுனர்களை இனங்காணலும் தெரிவு செய்தலும்.
தேவைப்படின் கடன் வழங்கும் நிறுவனங்களுடன் தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளல்.
தெரிவு செய்யப்பட்ட காணி பெறுனர்களுக்கு காணித் துண்டுகளை ஒப்படைத்தல்.

## 7. கடன் அறவீட்டு நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்தல்

கடன் மற்றும் வாடகை வருமானத்தினை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்தல்.
வருடாந்த இலக்கினை ஏற்படுத்தல், இலக்கினை அடைவதற்கான தேவையான வழிகாட்டல்களை வழங்கல், அது தொடர்பான கொள்கைகளை நடைமுறைப்படுத்தல்.

## 8. வீடமைப்பு தொடர்பான மதியுரைச் சேவைகள்

மாவட்ட வீடமைப்பு மதியுரைச் சேவை நிலையங்களைத் தாபித்தல்.
தகைமை அறிக்கைகளைத் தயாரித்தல்.
தேவையான சந்தர்ப்பங்களில் திட்டவரைபடங்களை வழங்குதல்.
அளவு/பொருட்கள் பட்டியல்/செலவு மதிப்பீடுகளைத் தயாரித்தல்.
திட்டவரைபடங்களுக்கான அங்கீகாரத்தைப் பெறுதல்.
நிர்மாணிப்புகளின் மேற்பார்வை மற்றும் தரச் சான்றுப்படுத்தல்.
நிர்மாணிப்புத் தரவுத் தளமொன்றை பேணிவருதல்.

## 9. குறைந்த செலவிலான நிர்மாணிப்புத் தொழில்நுட்ப முறைகளைப் பிரபல்யப் படுத்தல்

ஏற்புடைய தனியார் மற்றும் அரச நிறுவனங்களுடன் தொடர்புகளைப் பேணிவருதல் மற்றும் தகவல் பொருட்களின் மாதிரிகள் ஆகியவற்றை சேகரித்தல்.
மதியுரை நிலையங்களின் மூலம் புதிய தொழில்நுட்ப முறைகளையும் பொருட்களையும் அறிமுகப்படுத்தல்.

## 10. வீடமைப்புத் திட்டங்களின் பொதுப் பிரதேசங்கள், அதன் உட்கட்டமைப்பு மற்றும் சேவைகளுடன் கூடியதாக மாகாண மேலாண்மைக்கு ஒப்படைத்தல்

பொதுப் பிரதேசங்கள்/திறந்த இடங்களின் எல்லைகளை அடையாளமிடல்.
நில அளவையாளர் வரைபடங்களைத் தயாரித்தல்.
மாகாண மேலாண்மையிலிருந்து இணக்கப்பாட்டைப் பெறுதல்.
உறுதியொன்றின் மூலம் ஆதனங்களை ஒப்படைத்தல்.
வீட்டு உரிமையாளர்களுக்கு அறிவித்தல்.

## 11. திறன் வளர்ச்சிக்கான பயிற்சியளிப்பு

தொழில்சார் நிறுவனங்கள் மற்றும் முகவராண்மைகளுடன் கலந்துரையாடி பயிற்சி அமர்வுகளை ஒழுங்குசெய்தல்.
தொழில் பயிற்சி வாய்ப்புகளை அமைத்துக்கொடுத்தல்.
அடிப்படை உபகரண உதவிகளை வழங்குதல்.
செயற்பாட்டைப் பரிசோதித்தல்.
அனுகூலமான தொழில்களின் பொருட்டு உதவியளிப்பதற்காக தரவுத் தளமொன்றைப் பேணிவருதல்.
திறன்களைக் கொண்ட நபர்களின் தகவல்கள் அடங்கிய பெயர்ப் பட்டியலொன்றை பேணிவருதல்.

## 12. வீட்டுக் கையிருப்புகள் தொடர்பிலான தரவுகளைப் பேணிவருதல்

கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களுடனான இணைப்பாக்கம் மற்றும் தரவுகளைச் சேகரித்தல்.
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மதியுரை நிலையங்களுடனான இணைப்பாக்கம் மற்றும் தரவுகளைச் சேகரித்தல்.
மாகாண மேலாண்மைகளுடனான இணைப்பாக்கம் மற்றும் தரவுகளைச் சேகரித்தல்
மாவட்ட வீடமைப்புக் குழுக்களுக்கு தரவுகளைச் சமர்ப்பித்தல்.
குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளை நிரல்படுத்தல்.
தரவுகளை அரை ஆண்டு ரீதியில் தரவுத் தளத்திற்குச் சமர்ப்பித்தல்.
எதிர்காலத் திட்டமிடல்களின் பொருட்டு தரவுகளைப் பயன்படுத்தல்.

## கூட்டிணைத்தல் நிர்வாகம்

நிறுவன ரீதியிலான நிர்வாகத்தின் உயர் மட்டம் வரை செல்வதற்கான தீவிர இடையறா அர்ப்பணிப்பை நாம் கொண்டுள்ளோம். இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம், பகிரங்க தொழில்முயற்சிகள் திணைக்களம், நிதி அமைச்சு ஆகிய நிறுவனங்களின் மூலம் முன்மொழியப்பட்ட மிகப் பொருத்தமான நடவடிக்கைகளைக் கடைப்பிடிப்பதற்கு எப்போதும் முயற்சியெடுக்கப்படுவதோடு எமது வகைப்படுத்தலுக்குரிய எமது அமைச்சினால் வழங்கப்படுகின்ற அளவீடுகளுக்கு இணங்க செயற்பட்டு வருகிறோம்.

### பணிப்பாளர் சபைக் கூட்டங்கள்

பணிப்பாளர் சபை ஒவ்வொரு மாதமும் கூடுகின்றது. வரவு செலவுத் திட்டத்திற்கு ஒப்பீட்டளவிலான முன்னேற்றம் ஒவ்வொரு மாதமும் அதன் மூலம் மீளாய்வு செய்யப்படுகின்றது. மாற்றங்களை அடையாளங்கண்டு கொள்கைகளை மாற்றுவதற்குப் பொருத்தமான தீர்வுகள் வழங்கப்படுகின்றன. ஆண்டினுள் 25 கூட்ட அமர்வுகள் நடத்தப்பட்டுள்ளன.

### கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்

பொதுமுகாமையாளரையும் நிறைவேற்றுத் தரமல்லாத 4 பணிப்பாளர்களையும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உள்ளடக்கியுள்ளது.

2013 ஆம் ஆண்டில் பின்வரும் உத்தியோகத்தர்கள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அங்கத்தவர்களாக சேவையாற்றியுள்ளனர்.

1. திருமதி டப்ளியூ. ஏ. வல்பிட்ட - தலைவர்
2. திரு. ஏ.டபிள்யு. தயானந்த - அங்கத்தவர்
3. சட்டத்தரணி ராஜா குணரத்ன - அங்கத்தவர்
4. திரு. கே.பீ. குணதாச - அங்கத்தவர்
5. திரு. ஈ.கே.கே.எஸ். எதிரிசிங்க - அங்கத்தவர்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் மூலம் கணக்கீட்டு மற்றும் நிதி முகாமைத்துவ முறையின் சிறந்த நிலைத்திருத்தல் உறுதிசெய்யப்படுவதோடு கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்புடையதான சட்ட விதிகளுக்கு இணங்க உள்ளக நிர்வாகத்தின் செயற்பாடு மீளாய்வு செய்யப்படும்.

2013 ஆம் ஆண்டினுள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு 8 கூட்ட அமர்வுகளை நடத்தியுள்ளது.

### மாதாந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்

கௌரவ அமைச்சரின் தலைமையில் தவிசாளர், உப தவிசாளர், செயற்பாட்டுப் பணிப்பாளர், பொது முகாமையாளர், அனைத்து பிரதி பொது முகாமையாளர்கள் மற்றும் மாவட்ட முகாமையாளர்களின் பங்கேற்புடன் மாதாந்தம் நிறுவனத்தின் அலுவல்கள் தொடர்பாக முன்னேற்றம் மீளாய்வு செய்யப்படுகின்றது. 2013 ஆம் ஆண்டினுள் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் 10 நடத்தப்பட்டுள்ளன.

### உள்ளக நிர்வாகம்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை தனது நிறுவனத்தின் சொத்துக்களின் பாதுகாப்பு மற்றும் உச்சப் பயன்பாட்டை உறுதிசெய்யும் பொருட்டு உள்ளக நிர்வாகக் கொள்கைகள் மற்றும் ஒருசில மதியுரைகளை நடைமுறைப்படுத்தியுள்ளது. அதேபோன்று மூலோபாயங்களைத் தயாரித்தலும் நடைமுறைப்படுத்தலும் சிரேஷ்ட முகாமைத்துவத்தின் ஒரு பொறுப்பாகும்.

இதற்கு சமனான விதத்தில் பணிப்பாளர் சபை சிறந்த முறையில் தயாரிக்கப்பட்ட மாதாந்த அறிக்கையிடல் முறையின் ஊடாக உள்ளக நிர்வாகத்தை உறுதிசெய்வதோடு சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளுக்கு இடையே சமநிலையைப் பேணிவருவதற்குத் தேவையான தீர்மானங்களை மேற்கொள்கின்றது.

வாராந்தம் தவிசாளரின் தலைமையில் முகாமைத்துவக் குழுக் கூட்டமொன்று நடத்தப்படுவதோடு, அனைத்து பிரதிப் பொதுமுகாமையாளர் பிரிவுகளினதும் அலுவல்கள் தொடர்பாக கலந்துரையாடப்படும். விலைக் குழுக்கள், திணைக்கள கொள்வனவு வழங்கல் குழுக்கள், ஆதன துணைக் குழுக்கள் மற்றும் மேன்முறையீட்டுக் குழுக்களை நியமிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## நிறைவேற்று முகாமைத்துவம்

தலைமை அலுவலகத்தின் ஒவ்வொரு பிரிவினதும் தலைமைத்துவத்தை பிரதி பொதுமுகாமையாளர் ஒருவர் ஏற்றுள்ளதோடு, 25 மாவட்ட அலுவலகங்களுடன் 03 நகர அலுவலகங்களின் பொறுப்பு சிரேஷ்ட மாவட்ட முகாமையாளர்/மாவட்ட முகாமையாளர் வசமுள்ளது. பிரதிப் பொதுமுகாமையாளர்கள் மற்றும் சிரேஷ்ட மாவட்ட முகாமையாளர்கள்/மாவட்ட முகாமையாளர்கள் பொதுமுகாமையாளருக்கு அறிக்கையிடுதல் வேண்டுமென்பதோடு, பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரான பொதுமுகாமையாளர் தலைவர் உள்ளிட்ட பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

## இடர் முகாமைத்துவம்

பெருந்தொகையான சேவை வழங்குனர்களுக்கு அனைத்து வசதிகளுடனும் கூடிய வீடமைப்பு வசதிகளை வழங்குகின்றதும் நாடு முழுவதிலும் பரவியுள்ள 25 பிரதேச அலுவலகங்களைக் கொண்டுள்ளதுமான இலங்கையின் ஒரேயொரு அரச நிறுவனமான தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை அதன் பல்வேறான பங்குதாரர்களின் தேவைகளைப் பேணும் பொருட்டு நிதிசார்ந்த மற்றும் நிதிசாரா பல இடர்நேர்வுகளுக்கு முகம்கொடுக்க நேரிடுவதோடு, அதனை முன்கூட்டி முகாமைத்துவம் செய்து வருகின்றது.

'தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் அனைத்து தொழில்சார் குறிக்கோள்களையும் நிறைவேற்றிக்கொள்வதற்காக, அதன் கூட்டிணைக்கப்பட்ட முகாமைத்துவத்தின் ஆலோசனைகளின் பேரில் கொள்கைகள், வழிமுறைகள் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவத்தை உறுதிசெய்யும் பொருட்டு தேவையான கட்டமைப்புகளைக் கட்டியெழுப்புதல் பணிப்பாளர் சபையின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. இதன் மூலம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் அனைத்து தொழில்சார் நோக்கங்களும் நிறைவேற்றிக்கொள்ளப்படுகின்றது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை இடர்நேர்வுகளுக்கு உள்ளாதல் தொடர்பில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற செயற்பாடுகள் மற்றும் கட்டுப்படுத்தக் கூடியதான முறைமைகளின் பலவீனங்களை இனங்காணும் பொருட்டு இடர்நேர்வு முகாமைத்துவச் செயற்பாடு அதிகார சபையின் கணக்காய்வுப் பிரிவுடன் இணைந்து செயற்படுகின்றது. வினைத்திறன் மற்றும் கட்டுப்பாட்டு நிலைமைகளின் போதுமாந்தன்மை தொடர்பிலான சுயாதீனமான கருத்துகளை காலக்கிரமத்துடன் முகாமைத்துவத்திற்கு அறிவித்தல் கணக்காய்வுப் பிரிவின் மூலம் நடைபெறுகின்றது.

## திரவத்தன்மை அபாயம்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் உடன்படிக்கைகள் தொடர்பிலான கடப்பாடுகளை உரிய காலத்தினுள் நிறைவேற்றுவதற்கு இயலாமற்போகின்றபோது இந்த இடர்நேர்வுக்கு உள்ளாகின்றது. அவற்றின் காலம் கடந்துள்ள சந்தர்ப்பங்களில் நிதிசார்ந்த பொறுப்புகளை நிறைவேற்றும் பொருட்டு நிதியங்கள் இருத்தலும் தேவைகள் எழுகின்றபோது அவற்றின் பயன்களைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நிதிசார் ஏற்பாடுகள் உள்ளதென்பதை உறுதி செய்தலும் இதில் உள்ளடங்குகின்றது.

திட்டமிடலுக்கான வழிகாட்டல், ஒழுங்குமுறையான தேவைகளின்படி செயலாற்றுதல், உடன்படிக்கைகளின் கடப்பாடுகள் மற்றும் வளர்ச்சி எதிர்பார்ப்புகளுக்கு முகம்கொடுப்பதற்குத் தேவையான போதியளவு திரவத்தன்மை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்தாயுள்ளதென்பதை உறுதிசெய்தல் ஆகிய முதன்மையான விடயங்கள் பணிப்பாளர் சபைக்கும் கூட்டிணைக்கப்பட்ட முகாமைத்துவத்தின் அங்கத்தவர்களுக்கும் முகாமைத்துவத்தின் பொருட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட முகாமைத்துவம் அதற்குரிய முதன்மையான நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டு,

- பணம் ஈட்டுவதுடன் தொடர்புடைய மாற்று வழிமுறைகளை போதியளவு உறுதி செய்தல்.
- அப்போதைக்குள்ள கடன்கள், முதலீடுகள் மற்றும் பணம் ஈட்டுகின்ற வழிமுறைகளை காலக்கிரமத்தின்படி மீண்டும் ஆராய்தல்.
- அப்போதைக்குள்ள விலைகளை மீளாய்வு செய்கின்ற அதேவேளை, போட்டியாளர்களது விலைகளைப் பற்றிய பகுப்பாய்வொன்றை மேற்கொள்ளல்.
- கூட்டிணைத்தல் அளவீடுகளுக்கு இணங்க திரவத்தன்மை வீதங்களுக்கான வழிகாட்டல்கள்.

அளிப்புகள், உள்ளக ரீதியில் ஈட்டப்படுகின்ற நிதியங்கள் மற்றும் பணமாக மாற்றக்கூடிய குறுகியகால முதலீடுகளை நிர்வகிப்பதன் ஊடாக திரவத்தன்மையைப் பேணிவருவதை நாளாந்தம் மேற்கொள்கின்றது.

## சந்தை அபாயம்

விலைக் கூருணர்வுடைய சொத்துகள் மற்றும் பொறுப்புகளைப் பேணிவருகின்றபோது எழுகின்ற நட்டங்கள் தொடர்பில் இந்த இடர்நேர்வு உருவாகின்றதோடு, பிரதானமாக வட்டி வீதங்களின் மாற்றங்கள் மற்றும் காலத்தின் போக்கில் கட்டடப் பொருட்களின் விலைகளில் ஏற்படுகின்ற அசைவுகளின் காரணமாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையில் இது தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

வீடு தேவைப்படுகின்ற அனைத்து நபர்களுக்கும் வீடொன்றைச் சொந்தமாக்கிக் கொள்வதற்கு அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற பணம் போதியதாயில்லாததன் காரணமாக சந்தை இடர்நேர்வுக்கு முகம்கொடுப்பதற்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு நேரிடுகின்றது.

கூட்டிணைத்தல் முகாமைத்துவ நோக்கங்களை ஈட்டிக்கொள்வதற்கு பங்களிப்புச் செய்கின்ற ஏனைய பிரதானமான பங்குதார நிறுவனங்களின் தேவைகளை நிறைவு செய்தல் மற்றும் சேவை வழங்குனர்களின் பணத்திற்கு ஏற்ற விதத்திலான சேவைக்கான பெறுமதியைப் பெற்றுக்கொடுத்து வீடமைப்புச் சந்தைக்கு விடுக்கப்படுகின்ற அச்சுறுத்தல்களை உச்சமட்டத்தில் கட்டுப்படுத்துதல் கூட்டிணைப்புச் சபையின் அங்கத்தவர்களால் மேற்கொள்ளப்படுகின்றது.

## தொழிற்பாட்டு அபாயம்

வெளிவாரிப் போட்டி ரீதியிலான சக்திகளுக்கு முகம்கொடுப்பதற்கு சிரமமாயுள்ள அல்லது செயற்பாடுகளுக்கு தடை ஏற்படுத்துகின்ற உள்ளகப் பலவீனங்களின் காரணமாக போதியதாயில்லாத அல்லது உள்ளக செயற்பாடுகளின் பெறுபேறாக இந்த இடர்நேர்வு உருவாகின்றது.

நிறுவனத்தினுள் சிறந்த முறையிலும் ஒழுங்காகவும் நிர்வகிக்கப்படுகின்ற செயலூக்கம்மிக்க சுற்றாடலொன்றைப் பெற்றுக்கொடுக்கும் பொருட்டு அமைக்கப்பட்டுள்ள கட்டமைப்புகள் மற்றும் விரிவான கொள்கைகளுடன் கூடிய முறைமையொன்று இடர்நேர்வுக் கட்டுப்பாட்டின் பொருட்டு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினுள் பேணிவரப்படுகின்றது.

பயனுறுதியான செயலூக்கம்மிக்க இடர்நேர்வு முகாமைத்துவத்தின் பொருட்டு ஒருசில விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- தகவல்களின் பாதுகாப்பைப் பேணிக்காத்து அனைத்து மாவட்ட அலுவலகங்களிலிருந்தும் பெறப்பட்ட காலக்கிரமமான தரவுகளின் திரட்டலை அறிக்கையிடல் மற்றும் தயாரித்தல்.
- தகவல்களைப் பாதுகாக்கின்ற கொள்கைகள் மற்றும் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள்.
- வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டங்களை தொடர்ச்சியாக மீளாய்வு செய்தல் மற்றும் மேம்படுத்தல்.
- கடனை மீள அறவிடுகின்ற நிகழ்ச்சித் திட்டங்களின் செயற்பாடுகள்.

தொழிற்பாட்டு இடர்நேர்வை கட்டுப்படுத்தல் மத்திய முகாமைத்துவத்தின் முதன்மையானதொரு பொறுப்பாகும். கட்டுப்படுத்தப்பட்ட சூழலின் தனித்துவத்தைப் பேணிவரும் பொருட்டு நிதி, கணக்காய்வு மற்றும் ஏனைய உதவிச் சேவைப் பிரிவுகளின் மூலம் பெரும் பணி ஆற்றப்படுகின்றது.

பெறுமதியான பல சொத்துக்கள் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமாயுள்ளதால் தகுந்த உபாய வழிமுறைகளைப் பயன்படுத்துதல், தொடர்ச்சியான மீளாய்வுகள் மற்றும் பணியாட்டொகுதியினரின் அர்ப்பணிப்பு ஆகியவற்றின் ஊடாக போட்டி ரீதியிலான சுற்றாடலினுள் வெற்றியடையலாம் என்பதை எதிர்பார்க்கக்கூடியதாயுள்ளது.

## சுற்றாடல் பிரச்சினைகள்

கட்டிடங்களை நிர்மாணித்தல் சுற்றாடல் முறைமையினுள் பல விதத்திலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இத்தாக்கத்தை கூட்டாட்சிக் கட்டடங்கள் மற்றும் வீடமைப்புத் திட்டங்களில் மிகத் தெளிவாகக் காணக் கூடியதாயுள்ளது. சுற்றாடல் பாதுகாப்பானது அபிவிருத்திச் செயற்பாடுகளில் முக்கியமானதொரு அம்சமாகும் என்பதைக் குறிப்பிட்டுக் காட்டக்கூடியதாயுள்ளது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மக்களுக்கு பாதுகாப்பானதும் சிறந்ததுமான சுற்றாடலொன்றை பெற்றுக்கொடுக்கின்றது. அதேநேரம், குடிநீர், போதியளவு பிரவேசப் பாதைகள், தொடர்ச்சியான மின்சார வழங்கல், மழை நீர் மற்றும் கழிவு நீர் அகற்றல் முறைமைகள், திண்மக் கழிவுப் பொருட்களை அகற்றுதல் ஆகிய உட்கட்டமைப்பு வசதிகளும் வழங்கப்படுகின்றன.

கூட்டாட்சி முகாமைத்துவ அதிகார சபையின் சட்ட விதிகளின் மூலம் கூட்டாட்சி ஆதனங்களில் வசிப்பவர்களுக்கு மிகச் சிறந்ததொரு சுற்றாடல் உறுதிப்படுத்தப்படுகின்றது.

# (இ) தொழிற்பாட்டு நடவடிக்கை தொடர்பான

## வீடமைப்பு அபிவிருத்தி
## 2013 ஆம் ஆண்டின் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்

“மஹிந்த சிந்தனை” எதிர்காலத்திற்கான தொலைநோக்கிற்கமைய “ஜனசெவன” பத்து இலட்சம் வீடுகள் மற்றும் குடியிருப்பு அபிவிருத்தித் தொழிற்பாட்டின் கீழ் இலங்கையின் பல்வேறான பிரதேசங்களிலும் வாழ்கின்ற வீடமைப்புப் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ள குடும்பங்களுக்கு வீடமைப்பு வசதிகளை வழங்கும் நோக்கத்துடன் 2013 ஆம் ஆண்டினுள் பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன.

* வீரர்கள் கிராமம் நிகழ்ச்சித்திட்டம்
* “விசிறி” வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்
* ஜனசெவண உபஹார நிகழ்ச்சித்திட்டம்
* “சசுனென் செவண” நிகழ்ச்சித்திட்டம்
* ஜனசெவண விஷேட உதவித்திட்டம்
* தெயட்ட கிருல நிகழ்ச்சித்திட்டம்
* மீளக்குடியமர்த்தல் நிகழ்ச்சித்திட்டம்
    (I) இந்திய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்
    (II) தேசிய சேமிப்பு வங்கி கடன் நிதியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வீடமைப்புத்திட்டம்
* வெளி ஓயா வீடமைப்புத்திட்டம்
* ஆதிவாசி வீடமைப்புத்திட்டம்
* சகசவிய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்

## வீரர்கள் கிராமம் வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம்

மகிந்த சிந்தனை எதிர்கால திட்டத்திற்கு ஏற்ப கௌரவ நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சர் அவர்களின் வழிகாட்டலின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட ஜனசெவண பத்து இலட்சம் வீடமைப்புக்கான வீடமைப்பு மற்றும் குடியிருப்பு அபிவிருத்தி திட்டத்தின் கீழ் தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் வீடுகளை எதிர்பார்த்துள்ள பல்வேறு மக்கள் பிரிவினருக்கும் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்ட வீடமைப்புக் கருத்திட்டங்களை இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மஹிந்த சிந்தனை எதிர்காலத்துக்கான தொலைநோக்குக்கு இணங்குகின்றவாறு நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் கௌரவ அமைச்சரின் வழிகாட்டலின் கீழ் மாவட்ட மட்டத்தில் பிரதேசத்தில் உயிர்த் தியாகம் செய்த அல்லது தற்பொழுது சேவையிலிருக்கும் பொலீஸ் அல்லது படை வீரரொருவரை நினைவுகூர்வதை முன்னிட்டு அப்பெயரில் கருத்திட்டத்தைப் பெயரிட்டு இந்நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

இதன் மூலம் 30 வருட கால கொடூர யுத்தத்தினை முடிவு செய்வதற்கு பங்களிப்பு செய்த படை வீரர்கள் கௌரவிக்கப்படுகின்றனர்.

இந்த வருடத்தினுள் 10 மாவட்டங்களில் 19 திட்டங்களின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், 701 வீடுகளுக்காக 90.185 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டது. மிகுதித் தொகை 2014 வருடத்தில் முதலாவது காலாண்டினுள் செலவு செய்து தொடர்ச்சியான வேலையில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், 2013 ஆம் ஆண்டு ஆரம்பமாகும் பொழுது தொடர்ச்சியான வேலைகள் நிகழ்ச்சித்திட்டத்தினுள் பூர்த்தி செய்யப்படவிருந்த 1875 வீடுகளுக்காக 147.902 மி. ரூபா செலவு செய்யப்பட்டு 1040 வீடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

## விசிறி வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்

மஹிந்த சிந்தனை தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நாடு முழுவதிலும் பரவியுள்ள வீடற்ற ஒவ்வொரு குடும்பத்திற்கும் வீடொன்றைக் கட்டிக்கொள்வதற்கு வாய்ப்பளிக்கும் நோக்கத்துடன் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் அளவீடுகளுக்கு இணங்குகின்றவாறு ஒட்டுமொத்தமான கிராம அலுவலர் பிரிவுகள் மட்டத்தில் சமுதாயப் பங்களிப்புடன் தேவையான நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

வீட்டுத்தேவை காணப்படும் வீடுகொள்வோருக்கு புதிய வீடுகளை நிர்மாணித்தல் மற்றும் தற்பொழுது காணப்படும் வீடுகளை சீரமைப்பது தொடர்பாக வீடமைப்பு கடன்கள் இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படுகிறது. பெரிதும் வீடொன்றிற்கான தேவை காணப்படும் வேளையில் வீடொன்றினை நிர்மாணித்துக் கொள்வதற்கு பொருள் அல்லது பணம் திரட்டியிருக்கும் நபர்களுக்கு இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முன்னுரிமை வழங்கப்படும். இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் 2013 ஆம் ஆண்டு பூர்த்தியடையும் பொழுது 3767 வீடுகளை நிர்மாணிப்பதற்கு பங்களிப்பு செய்துள்ளதுடன் இதற்காக 378.006 மி. ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. தொடர்ச்சியான நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 10.303 வீடுகள் பூரத்தி செய்யப்படவிருந்ததுடன் இதற்காக 611.244 மி. ரூபா செலவு செய்து 7778 வீடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. மிகுதி 2014 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டினுள் பூர்த்தி செய்யப்படவுள்ளது.

## ஜனசெவண உபஹார நிகழ்ச்சித் திட்டம்

அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளின் ஊழியர்கள் உள்ளிட்ட நடுத்தர வருமானம் பெறுகின்றவர்களின் வீடமைப்புத் தேவைகளை நிறைவு செய்கின்ற அணுகுமுறையொன்றாக வர்த்தக வங்கிளின் உதவியுடன் வீடமைப்புக் கடன்களை வழங்குதல் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும்.

இதில் அரச ஊழியர்களுக்கு குறைந்தபட்ச ஆவணங்களை சமர்ப்பிப்பதன் ஊடாக தனிநபர் பிணையின் கீழ் ரூபா 500,000 - வரையிலான கடன் தொகையொன்று வழங்கப்படும். இதன் கீழ் புதியதொரு வீட்டை நிர்மாணிப்பதற்கும் அப்போதைக்குள்ள வீட்டை திருத்துவதற்கும் வீடமைப்புக் கடன் வழங்கப்படும் என்பதோடு, தொடர் மாடி வீடுகளைத் திருத்துவதற்கும் கடன் வழங்கப்படும். ஜனசெவன உபஹார நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2013 ஆம் வருடத்தினுள் 11014 குடும்பங்களுக்கு வீடுகளை நிர்மாணித்துக் கொள்வதற்கு கடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் இதற்காக 2490.028 மி. ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டின் தொடர்ச்சியான வேலைத்திட்டத்தின் கீழ் 5958 வீடுகளுக்காக 2013 ஆம் ஆண்டில் செலவு செய்யப்பட்ட மொத்த தொகை 820.001 மி. ரூபாவாகும். இதன் கீழ் பூர்த்தி செய்யப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 5801 ஆகும்.

## சசுனென் செவண நிகழ்ச்சித்திட்டம்

கிராமத்திலிருந்து பன்சலைக்கும் பன்சலையிலிருந்து கிராமத்திற்கும் என்ற தொனிப்பொருளை நிறைவேற்றிக்கொள்வதை நோக்கமாகக் கொண்டு 2600 ஆம் சம்புத்த ஜயந்தி ஆண்டு விழாவை முன்னிட்டும் அதனைக் கொண்டாடும் பொருட்டும் இலங்கையினுள் காணப்படுகின்ற அண்ணளவாக 10250 பௌத்த விகாரைகள் மற்றும் புண்ணிய தலங்களைச் சார்ந்து வாழ்கின்ற மிக வறிய குடும்பங்களை இலக்காகக் கொண்டு, இந்த நிகழ்ச்சித்திட்டத்தின்படி நாடுபூராகவுமுள்ள 10210 பௌத்த விகாரைகள் உள்வாங்கப்படும் விதத்தில் வீடுகளை நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி முதல் கட்டமாக 2013 ஆம் ஆண்டில் 493 குடும்பங்களுக்கு வீடுகளை நிர்மாணித்துக் கொள்வதற்கு உதவி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக 27,359 மி. ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வருடங்களில் இருந்து 2013 வருடத்திற்கு முன் கொண்டு வந்த தொடர்ச்சியான வீடமைப்புத்திட்டங்கள் 459 வீடுகளைக் கொண்டதாகும். இவற்றில் 2013 ஆம் ஆண்டினுள் 354 வீடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இதற்காக 17.514 மி. ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

வீடமைப்புக் கடன் தொகையொன்றைப் பெற்று மீளச் செலுத்துவதற்கான ஆற்றல் இல்லாத ஆயினும் வீடொன்றைக் கட்டிக்கொள்வதற்கான தேவையுள்ளதும் அதேபோன்று வீடொன்றைக் கட்டிக் கொள்வதற்கான ஆர்வம் உள்ளதுமான மிக வறிய குடும்பங்கள் இதன் பொருட்டு தெரிவு செய்யப்படும். இது தர்மகர்த்தாக்கள் சபையின் முழுமையான மேற்பார்வையின் கீழ் உரிய கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலகங்களின் தலையீட்டின் கீழ் நடைபெறும். வீடொன்றைக் கட்டிக்கொள்வதற்கான தேவை உள்ளதும் காணியொன்றை சொந்தமாகக் கொண்டுள்ளதுமான குடும்பமாயிருத்தல் கட்டாயமாகும். குடும்பத்தைத் தெரிவு செய்கின்ற இறுதி விதப்புரையானது அக் குடும்பம் உரித்தாயுள்ள பன்சாலையின் தலைமைப் பிக்கு உள்ளிட்ட தர்மகர்த்தாக்கள் சபையினால் வழங்கப்படுதல் வேண்டும். இதில் வீடொன்றைக் கட்டிக்கொள்வதற்கான ஆரம்பத் தயார் நிலையைக் கொண்டுள்ள குடும்பங்கள் தொடர்பில் முன்னுரிமையளிக்கப்படும்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் ரூபா 100,000/- உதவித் தொகையொன்று வழங்கப்படும். எஞ்சிய நிர்மாணிப்புச் செலவுகளை தர்மகர்த்தாக்கள் சபையின் தலையீட்டில், பிரதேசத்திலுள்ள கொடை வழங்குனர்கள் மற்றும் தொண்டர் அமைப்புகளிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் வீடமைப்புத் திட்டவரைபடமொன்று வழங்கப்படும் என்பதோடு, நிர்மாணிப்புத் தொழில்நுட்ப உதவியும் வழங்கப்படும்.

- வீடு நிர்மாணிக்கப்படும் பிரதேசத்தைச் சார்ந்ததாக நிர்மாணிப்புக்குப் பொருத்தமான தொழில்நுட்ப முறையியல்கள் வீடமைப்பு அதிகார சபையினால் வழங்கப்படும் என்பதோடு, நிர்மாணிப்பு மேற்பார்வை நடவடிக்கைகள் ஒழுங்கான முறையில் மேற்கொள்ளப்படும்.
- தர்மகர்த்தாக்கள் குழு, கிராமவாசிகள் மற்றும் நலன்பெறுனர் குடும்பங்களால் பயிற்றப்பட்ட மற்றும் பயிற்றப்படாத தொழில்நுட்ப உதவி பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

## ஜனசெவண விசேட உதவி நிகழ்ச்சித் திட்டம்

வீடமைப்புக் கடன் தொகையொன்றைப் பெற்று மீளச் செலுத்துவதற்கான ஆற்றல் இல்லாத ஆயினும் வீடொன்றைக் கட்டிக்கொள்வதற்கான தேவையுள்ள வறிய குடும்பங்களுக்கு நிரந்தரமான வீடொன்றைக் கட்டிக் கொடுக்கும் நோக்கத்துடன் இந் நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதன் கீழ் ஒரு குடும்பத்திற்கு உயர்ந்தபட்சம் ரூபா ஓருலட்சம் உதவித் தொகை வழங்கப்படும். இந் நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக 2013 ஆம் ஆண்டில் 267 குடும்பங்களுக்கு வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டுள்ளன. இதற்கான செலவு 14.76 மி. ரூபாவாகும். இதில் 249 வீடுகள் 2013 ஆம் ஆண்டினுள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

## தயட்ட கிருள நிகழ்ச்சித்திட்டம்

தயட்ட கிருள 2013, கண்காட்சிக்கும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கும் அம்பாறை மாவட்டத்தினை மையமாகக் கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது அத்துடன் அதற்கு இணைந்ததாக திருகோணமலை, பொலன்னறுவை, மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலும் இந்த திட்டம் அமுல் செய்யப்பட்டிருந்தது.

தயட்ட கிருள 2013 கண்காட்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினுள் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுடன் வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினையும் நடைமுறைப்படுத்துவது இந்த வேலைத்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். இதன் கீழ் வீடுகளை அபிவிருத்தி செய்து கொள்வதற்கும் மற்றும் புதிதாக

வீடொன்றினை நிர்மாணித்துக் கொள்வதற்கும் தேவையுள்ள குடும்பங்களுக்கு தேவையான உதவிகள் வழங்கப்படுவதுடன் புதிய குடியிருப்புக்களை ஆரம்பிப்பதும் இதன் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தயட்ட கிருள நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்ட 04 மாவட்டங்களிலும் வீடமைப்புத்திட்டங்களின் வளர்ச்சியானது விருகம்மான, பரவலான கடன் திட்டம், உபகார வீடமைப்புக்கடன் திட்டம் மற்றும் ஏனைய உதவித்திட்டங்களிலும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக தயட்டகிருள வேலைத்திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் 658 வீடுகளின் நிர்மாணப்பணிகளுக்காக 66.463 மி. ரூபா செலவு செய்வதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், வீடமைப்பு நிர்மாணப்பணிகளின் வளர்ச்சிக்கு ஏற்ப 33.34 மி. ரூபா செலவு செய்யப்பட்டிருந்தது.

அனுராதபுரத்தில் நடாத்தப்பட்ட தயட்ட கிருள தொடர் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 245 வீடுகளுக்காக 8.975 மி. ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

## மீளக் குடியேற்ற வீடமைப்புத்திட்டம்

(i) இந்திய உதவி வீடமைப்புத்திட்டம்

இந்த வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 6000 வீடுகள் வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் மாத்திரம் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதில் 1495 வீடுகளின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்காக 2013ஆம் ஆண்டினுள் செலவு செய்யப்பட்ட தொகை 704.25 மி. ரூபாவாகும்.

(ii) தேசிய சேமிப்பு வங்கி கடன் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்

129 வீடுகளுக்காக 36.015 மி. ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

## வெளி ஓயா (II) கட்டம் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்

இந்த வீடமைப்பு திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தில் 364 வீடுகள் நிர்மாணிப்பதற்காக 60.050மி. ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

வெளிஓயா I கட்ட தொடர்ச்சி வீடமைப்புத்திட்டத்திற்காக 2013 ஆம் ஆண்டினுள் 494 வீடுகளின் நிர்மாணப்பணிக்காக 64.8 மி. ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

## ஆதிவாசி வீடமைப்புத்திட்டம்

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பதுளை மாவட்டத்தில் மகியங்கனை பிரதேச செயலாளர் பிரிவில் 25 வீடுகள் நிர்மாணிப்பதற்காக 2.5 மி. ரூபா மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் நிர்மாண பணிகளின் வளர்ச்சிக்கு ஏற்ப அந்த 25 வீடுகளுக்கும் 1.632 மி. ரூபா செலவு செய்யப்பட்டுள்ளதுடன் 2014 ஆம் ஆண்டினுள் மிகுதி தொகையினை செலவு செய்து தொடர் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

## சகசவிய வீடமைப்புத்திட்டம்

இந்த நிகழ்ச்சித்திட்டம் வெளிவாரியான நிதியினைக் கொண்டு செயற்படுத்தப்படுவதுடன், பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்தும் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியிலிருந்தும் 763 வீடுகளுக்காக 39,413 மி.ரூபா செலவு செய்யப்பட்டுள்ளதுடன் 124 வீடுகள் பூரத்தி செய்யப்பட்டுள்ளது.

**உபகார வீடமைப்புத்திட்டம்**

2013 ஆம் ஆண்டில் அரச வங்கிகளின் ஊடாக நன்மை பெறும் 16000 குடும்பங்களுக்கு கடன் வழங்குவதற்கு 5000.00 மி. ரூபா இலக்காக கொள்ளப்பட்டிருந்தாலும் அரச வங்கிகளினால் பின்வருமாறு நிதி வழங்குவதற்கு உடன்பாடு காணப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| ❖ மக்கள் வங்கி | 1200 மி. ரூபா |
| ❖ இலங்கை வங்கி | 1200 மி. ரூபா |
| ❖ தேசிய சேமிப்பு வங்கி | 1200 மி. ரூபா |
| ❖ அரச ஈட்டு முதலீட்டு வங்கி | 150 மி. ரூபா |
| ❖ இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி | 500 மி. ரூபா |
| மொத்த பங்களிப்பு | 4250 மி. ரூபா |

இதன்படி இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 14159 பயனாளி குடும்பங்களுக்கு கடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2011 ல் இருந்து 2012 ஆம் வருடம் வரை வங்கிகளில் இருந்து கிடைக்கப் பெற்ற நிதி உதவிகள்

| | |
|---|---|
| ❖ மக்கள் வங்கி | 1500 மி. ரூபா |
| ❖ இலங்கை வங்கி | 1550 மி. ரூபா |
| ❖ தேசிய சேமிப்பு வங்கி | 1560 மி. ரூபா |
| ❖ பிரதேச அபிவிருத்தி வங்கி | 350 மி. ரூபா |
| ❖ அரச ஈட்டு முதலீட்டு வங்கி | 220 மி. ரூபா |
| ❖ தே. வீடமைப்பு அபி. நிதி. கூட் வங்கி | 250 மி. ரூபா |

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் 16172 பயனாளி குடும்பங்களுக்கு கடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**வடமாகாணத்தில் மீளக்குடியமர்த்தல் நிகழ்ச்சித்திட்டம்**

வடமாகாணத்தில் மீளக் குடியமர்த்தல் திட்டத்திற்காக தேசிய சேமிப்பு வங்கியின் 345 மி. ரூபா நிதி உதவியுடன் 995 வீடுகளை நிர்மாணிப்பதற்காக கடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை**
**ஜனசெவண வீடமைப்பு வேலைத்திட்டம்**
**2013.12.31 இல் உள்ளவாறு முன்னேற்றம்**

| ஜனசெவண வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் | ஆண்டு இலக்கு | | | | | | | | அடைவு | | | | | | | | | பொதுத் திறைசேரியிலிருந்து கிடைத்த நிதியம் (ரூ. மி.) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பௌதீக | நிதியியல் (ரூபா மி.) | | | | | | | பௌதீக (அலகு எண்ணிக்கை) | | செலவுகள் | | | | | | | |
| | (அலகு எண்ணிக்கை) | மொத்தம் | திரண்ட நிதியம் | நிறுவன சேர்க்கைகள் | சொத்து | செவண | ஏனைய | உபகார | வேலை ஆரம்பம் | பூ. செ. அலகுகள் | மொத்தம் | C.F | I.C | சொத்து | செவண | ஏனைய | உபகார | |
| **நகர மற்றும் அறை.'. நகரப்புர திட்டம்** | | | | | | | | | | | | | | | | | | |
| 1 ஜனசெவண விருகம்மான நிகழ்ச்சித்திட்டம் | | | | | | | | | | | | | | | | | | |
| 1.1 சாதாரண | 2,593 | 517.100 | | 449.100 | 63.000 | | 5.000 | | 529 | 19 | 51.370 | 44.325 | 6.490 | | 0.555 | - | - | |
| 1.2 உபகார | 875 | 273.440 | | | | | | 273.440 | 172 | 16 | 38.815 | - | - | - | - | - | 38.815 | |
| 2 ஜனசெவண பரவலான வீடமைப்புத்திட்டம் | 13,266 | 1987.900 | 600.000 | 550.900 | 837.000 | | | | 3767 | 1034 | 378.006 | 358.084 | 15.367 | 4.555 | - | - | - | 600.000 |
| 3 ஜனசெவண உபகார | | | | | | | | | | | | | | | | | | |
| 3.1 பரவலான | 15,125 | 4726.560 | | | | | | 4726.560 | 11014 | 2310 | 2490.028 | - | - | - | - | - | 2490.028 | |
| 3.2 தொழில்பாட்டு செலவு | | 26.000 | 26.000 | | | | | | | | 23.922 | 23.922 | | | | | | 23.922 |
| 4 ஜனசெவண உதவித்திட்டம் | | | | | | | | | | | | | | | | | | 142.746 |
| 4.1 சசுனென் செவண | 1,000 | 100.000 | | | | 100.000 | | | 493 | 77 | 27.359 | | | | 27.359 | | | |
| 4.2 பரவலான உதவி | | | | | | | | | 36 | 18 | 3.260 | | | | 3.260 | | | |
| 4.3 விஷேட உதவிகள்-தலைமைக் காரியாலயம் | | | | | | | | | 231 | 231 | 11.500 | | | | 11.500 | | | |
| 5 **சகஸ்ர லங்கா வீடமைப்பு வேலைத்திட்டம்** | | | | | | | | | | | | | | | | | | |
| 5.1 நேரடி நிர்மாணம் | 20 | 150.000 | | | | | 150.000 | | | | | | | | | | | |
| 5.2 புனரமைப்பு | 40 | 100.000 | | | | | 100.000 | | | | | | | | | | | |
| 5.3 அரச/தனியார் கூட்டுத்திட்டம் 14 திட்டங்கள் கேள்வ | 3,200 | | | | | | | | 61 | | | | | | | | | |
| கோரல் மி. ரூபா (24..318) | 1,000 | 100.000 | | | | | 100.000 | | 766 | 127 | 39.673 | | | | | 39.673 | | |
| 6 **சகசவிய நிகழ்ச்சித்திட்டம்** | | | | | | | | | | | | | | | | | | |
| 6.1 வெளிஓய விரேட நிகழ்ச்சித்திட்டம் | | | | | | | | | 364 | | 60.050 | | | | | 60.050 | | |
| 7 **மீள் குடியேற்றத் திட்டம்** | | | | | | | | | | | | | | | | | | |
| 7.1 தேசிய சேமிப்பு வங்கி | 50 | 15.000 | | | | | 15.000 | | 129 | 98 | 36.015 | | | | | 36.015 | | |
| 7.2 இந்திய உதவித்திட்டம் | 3,000 | 1650.000 | | | | | 1650.000 | | 1495 | 841 | | | | | | | | |
| **உப மொத்தம்** | **40,169** | **9646.000** | **626.000** | **1000.000** | **900.000** | **100.000** | **2020.000** | **5000.000** | **19,057** | **4,771** | **3159.998** | **426.331** | **21.857** | **4.555** | **42.674** | **135.738** | **2528.843** | **766.668** |
| **வீடமைப்பு தொடர்பான நடவடிக்கைகள்** | | | | | | | | | | | | | | | | | | |
| 8 **செவண பிம்சவிய திட்டம்** | | | | | | | | | | | | | | | | | | |
| காணித்துண்டுகளை வழங்கல் | 500 | | | | | | | | | 277 | | | | | | | | |
| சொத்தின் உரிமையை உறுதி செய்தல் (உறுதிப்பத்திரம் வழங்க | 3,000 | | | | | | | | | 2581 | | | | | | | | |
| 9 **நகமு புரவர வேலைத்திட்டம்** | 7,147 | 1000.000 | 1000.000 | | | | | | | 5833 | 610.913 | 599.469 | 11.444 | | | | | 600.000 |
| 10 **காணி இழப்பீடு** | | 50.000 | 50.000 | | | | | | | | 49.778 | 49.778 | | | | | | 50.000 |
| **உப மொத்தம்** | | **1050.000** | **1050.000** | | | | | | | **8,691** | **660.691** | **649.247** | **11.444** | | | | | **650.000** |
| 11 **தொடர்ந்து வரும் திட்டங்கள்** | | | | | | | | | | | | | | | | | | |
| 11.1 ஜனசெவண விருகம்மான | 1,875 | 181.050 | | | 181.050 | | | | 104 | 1040 | 147.902 | 32.578 | 13.793 | 78.953 | 0.035 | | 22.543 | |
| 11.2 ஜனசெவண விசிரி | 10,306 | 803.430 | | | 803.430 | | | | | 7778 | 611.244 | 164.955 | 446.289 | | | | | |
| 11.3 ஜனசெவண உபகார | 5,951 | 901.900 | | | | | | 901.900 | | 5801 | 820.001 | | | | | | 820.001 | |
| 11.4 ஜனசெவண சசுனென் செவண | 459 | 23.100 | | | | 23.100 | | | | 354 | 17.514 | | | | 17.514 | | | |
| 11.5 செவண பரவலானது (உதவிகள்) | 15 | 0.450 | | | | 0.450 | | | | 15 | 0.450 | | | | 0.450 | | | |
| 11.6 மீள் குடியமர்த்தல் | 507 | 71.490 | | | | | 71.490 | | | 289 | 57.205 | | | | | 57.205 | | |
| 11.7 தயட்டகிருள சசுனென் செவண | 245 | 14.740 | | | 14.740 | | | | | 118 | 8.975 | | | 8.975 | | | | |
| 11.8 வெளிவாரி நிதி | 249 | 12.580 | | | | | 12.580 | | | 138 | 8.162 | | | | | 8.162 | | |
| 11.9 வெள்ள அனர்த்த வீடமைப்புத்திட்டம் | 344 | 10.720 | | | | | 10.720 | | | 255 | 6.490 | | | | | 6.490 | | |
| 11.10 வெளிஓயா விஷேட திட்டம் | 494 | 56.580 | | | | | 56.580 | | | 453 | 64.800 | | | | | 64.800 | | |
| 11.11 பெருந்தோட்ட வீடுகள் | 481 | 47.270 | | | | | 47.270 | | | 54 | 13.504 | | | | | 13.504 | | |
| **உப மொத்தம்** | **20,926** | **2123.310** | | | **999.220** | **23.550** | **198.640** | **901.900** | **104** | **16,295** | **1756.247** | **197.533** | **460.082** | **87.928** | **17.999** | **150.161** | **842.544** | |
| 12 **சகஸ்ர லங்கா திட்டம் தொடர்ச்சி** | | | | | | | | | | | | | | | | | | |
| 12.1 நேரடி நிர்மாணம் | 89 | 235.000 | | | 235.000 | | | | | | 59.705 | | | 59.705 | | | | |
| 12.2 புனரமைத்த வீடுகள் | 36 | 47.720 | | | 47.720 | | | | | 36 | 36.934 | | | 36.934 | | | | |
| **மொத்தம்** | **61,220** | **13,102.030** | **1,676.000** | **1,000.000** | **2,181.940** | **123.550** | **2,218.640** | **5,901.900** | **19,161** | **29,793** | **5,673.574** | **1,273.111** | **493.383** | **189.122** | **60.673** | **285.898** | **3,371.387** | **1,416.668** |

## ஆதன முகாமை

(1) 2013 ஆம் ஆண்டில் வீடு மற்றும் காணிகளுக்காக உறுதிப்பத்திரங்கள் வழங்கப்படுவது தொடர்பாக 2740 கோவைகள் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், (8.1 அனுமதியைப் பெற்றுக் கொண்டதன் பின்னர்) அவற்றுல் 2581 உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளது

2013 ஆம் ஆண்டுக்காக உறுதிப்பத்திரங்கள் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்ட இலக்கில் 91% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

(2) 2013 ஆம் ஆண்டினுள் பொதுச் சொத்துக்களை மாகாண நிறுவனங்களிடம் ஒப்படைப்பதற்காக காலி, பொலன்னறுவை, கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்கள் சம்பந்தமாக பணிப்பாளர் சபையின் தீர்மானத்தினைப் பெற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்துவதற்காக மாவட்ட முகாமையாளர்களுக்கு அறிவித்தல் வழங்கப்பட்டது.

| மாவட்டம் | காணித் துண்டுகளின் எண்ணிக்கை |
|---|---|
| 1. காலி | 01 |
| 2. பொலன்னறுவை | 01 |
| 3. கண்டி | 54 |
| 4. மாத்தளை | 01 |
| | 57 |

கூட்டாதன சொத்து சம்பந்தமாக நடைமுறையில் எழுந்துள்ள பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் மற்றும் அது சம்பந்தமாக பணிப்பாளர் சபையின் தீர்மானத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக ஆதன முகாமைப்பிரிவு பூரணமாக கால நேரத்தினை ஈடுபடுத்துகிறது. இதன்படி வெளியேற்றல் சம்பந்தமான பிரச்சினைகளை தீர்த்ததன் பின்னர் உறுதிப்பத்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

## காணி சுவீகரிப்பு மற்றும் விற்பனைப் பிரிவு

**01. காணி சுவீகரிப்பு மற்றும் விற்பனைப் பிரிவின் செயற்பாடுகள்**

I. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் வீடமைப்பு நோக்கங்களை நடைமுறைப்படுத்துவதற்காக தேவையான காணிகளை சுவீகரிக்கும் நடவடிக்கை.

II. வீடமைப்பு நோக்கங்களுக்காக காணிகளை விற்பனை செய்தல் மற்றும் வேறு தேவைகளுக்காக காணிகளை குத்தகை அடிப்படையில் வழங்குதல் மற்றும் அன்மித்த காணிகளை விற்பனை செய்தல் மற்றும் சட்ட ரீதியற்ற குடியிருப்பாளர்களை சட்ட ரீதியாக மாற்றல்.

**02. 2013 ஆண்டிற்கான இலக்கு மற்றும் நிகழ்ச்சித்திட்டம்**

i. சுவீகரிப்பு நடவடிக்கைகள் முற்றுப்பெறாத காணிகளின் சுவீகரிப்பு நடவடிக்கைகளை பூர்த்தி செய்தல்.
ii. காணி ஆய்வுகளின் படி அடையாளம் காணப்பட்ட வெற்றுக் காணித்துண்டுகளை விண்ணப் பதாரிகளுக்கு விற்பனை செய்தல்.
iii. அடையாளம் காணப்பட்ட அண்மித்த காணித்துண்டுகளை விற்பனை செய்தல்.
iv. அடையாளம் காணப்பட்ட சட்ட ரீதியற்ற குடியிருப்பாளர்களை தற்பொழுது காணப்படும் சுற்றுநிருபத்துக்கு ஏற்ப ஒழுங்கமைத்தல்.
v. வீடு விற்பனை

**03. இலக்கினை அடைதல்**

- அரச காணிகள் 05ம் மற்றும் தனியார் காணிகள் 03 னதும் சுவீகரிப்பு நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய முடிந்துள்ளது. திறைசேரியின் நிதி உதவியாக 50. மி. ரூபா கிடைத்ததுடன் பின்வரும் 05ல் குறிப்பிடப்பட்டுள்ள தனியார் காணிக்காக நட்டஈடு மற்றும் வட்டித்தொகையாக கொடுக்கப்பட்டுள்ளதுடன் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு சொந்தமான II காணிகளுக்கு பூரணமாக நட்டஈடு வழங்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

- காணி ஆய்வின் மூலம் அடையாளம் காணப்பட்ட 250 காணித்துண்டுகளை வருடத்தினுள் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அதன் பெறுமதி 332.98 மி. ரூபாவாகும்.

- மேலும் அடையாளம் காணப்பட்ட 800 சட்டரீதியற்ற குடியிருப்பாளர்களுள் 190 பேர் கள் ஒழுங்காக குடியமர்த்தப்பட்டதுடன் இதன் மூலம் கிடைக்க வேண்டிய தொகை 115,563,387/= ரூபாவாகும். மேலும் அன்டித்த காணித்துண்டுகள் 370 ல் 89னை விற்பனை செய்ய முடிந்துள்ளது. இதன் மூலம் 31,427.909 ரூபா லாபமாக கிடைத்துள்ளது.

- வருடத்தினுள் விற்பனை செய்யப்பட்ட காணித்துண்டுகளின் எண்ணிக்கை 34 ஆகும். இதன் பெறுமதி 22,429,500 ரூபாவாகும்.

**04. இலக்கினை அடைந்து கொள்வதற்கு தடையாக காணப்பட்டவைகள்**

தனிப்பட்ட காணிகள் 45கு நட்ட ஈடாகவும் மற்றும் வட்டியாகவும் 122,217,286,71 ரூபா 2013.01.01 ஆம் திகதியில் செலுத்த வேண்டியிருந்ததுடன், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு சொந்தமான 23 காணிகளுக்காக 30,619,156.31 ரூபா அத்திகதியில் செலுத்த வேண்டியிருந்தது. மேலும் தனியார் காணிகள் 9 இற்காக 20,737,385.67 ரூபா தொகையினை நட்ட ஈடாகவும் வட்டியாகவும் வருடத்தினுள் செலுத்துவதற்கு பிரதேச செயலாளர் மூலம் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. மேலும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு சொந்தமான 2 காணித்துண்டுகளுக்காக 877,236 மி. ரூபா செலுத்துமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

2013 ஆம் ஆண்டினுள் கிடைத்த திறைசேரி நிதியினைக்கொண்டு 32,995,211.27 ரூபா செலவு செய்து தனியார் காணிகளுக்காக நட்டஈடு மற்றும் வட்டியினை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்குச் சொந்தமான 18 காணித்துண்டுகளுக்காக 16,997,258.50 ரூபா செலவு செய்து சம்பூரண பெறுமதித்தொகை செலுத்தி தீர்க்கப்பட்டுள்ளது. மேலும் 4,614,400/ஸ்ரீ ரூபா செலவு செய்யப்பட்டு தனியார் காணி ஒன்றினையும் கொள்வனவு செய்வதற்கு இந்த வருடத்தினுள் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் சில காணிகளுக்கு நட்ட ஈடு வழங்குவதற்கு முன்னர் இந்த காணிகள் தொடர்பாக காணப்படும் சட்ட ரீதியிலான சிக்கல்களை தீர்க்க வேண்டியிருப்பதினால், தெரிவிக்கப்பட்டுள்ள நட்டஈட்டுத் தொகையினை வழங்குவதற்கு முடியாது காணப்பட்டதுடன், காணிகளுக்கான நட்டஈடு வழங்கிய போது பகுதி பகுதியாக வழங்கப்பட்டிருந்தது. ஏனெனில் திறைசேரியினால் வழங்கப்பட்ட தொகை முழுத்தொகையினையும் வழங்குவதற்கு போதுமானதாக காணப்பட வில்லை. அத்துடன் 2011 வருடத்திலிருந்து காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு முழுப் பெறுமதியும் செலுத்தப்பட்ட காணிகளுக்காக இன்றும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடுவதற்கு அந்த ஆணைக்குழு நடவடிக்கை எடுக்காததன் காரணமாக காணி மீட்பு நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய முடியவில்லை.

**05. வருடத்தில் பெற்றுக்கொண்ட வெற்றிகள்**

- மீட்பு செய்த காணிகளின் எண்ணிக்கை

| அரசு | தனியார் | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு | வேறு நிறுவனங்கள் | காணி கொள்வனவு செய்தல் |
|---|---|---|---|---|
| 07 | 03 | ----- | ------ | 01 |

- சட்ட ரீதியற்ற குடியிருப்புக்களை ஒழுங்கமைத்தல். -- 190
- வெற்றுக் காணி விற்பனை -- 250 துண்டுகள்
- வீடு விற்பனை -- 34 வீடுகள்

**பொறியியல் சேவைகள் மற்றும் நிர்மாணிப்புகள்**

பொறியியல் சேவைகள் மற்றும் நிர்மாணிப்புப் பிரிவு பின்வரும் பிரிவுகளை உள்ளடக்கியதாக 2012 ஆம் ஆண்டில் குடியிருப்பு அபிவிருத்தியின் பொருட்டு பங்களிப்புச் செய்தது.

1. பொறியியல் பிரிவு
2. கட்டிடக் கலைப் பிரிவு
3. தொகை மதிப்புப் பிரிவு
4. திட்டமிடல் பிரிவு
5. மின்சாரப் பிரிவு
6. பராமரிப்புப் பிரிவு

கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் சகல மக்கள் பிரிவினதும் வீடமைப்பு நோக்கம் மற்றும் அது சம்பந்தமான பிரச்சினைகளை தீர்ப்பதற்கு முடிந்துள்ளது.

**தொடர்மாடி புனரமைப்புத்திட்டம் (நகமுபுரவர)**

பழைய தொடர்மாடி வீடுகளையும் அவற்றின் சகல அடிப்படை வசதிகளையும் நவீனமயப்படுத்தி குடியிருப்பாளர்களுக்கு சிறந்ததொரு குடியிருப்பாக மாற்றியமைத்தல். முகாமை குழுக்களை தோற்றுவித்து வீடமைப்பு திட்டங்களை பராமரிக்கும் பொறுப்பினை வீட்டு உரிமையாளர்களிடம் ஒப்படைத்தல் மற்றும் பொதுவசதிகளை பராமரித்தல் நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு சட்டரீதியாக ஒப்படைத்தல் நகமுபுரவ வேளைத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

2013 ஆம் ஆண்டினுள் 25 நகமுபுரவர திட்டங்களை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டதுடன் பெறுகைகள் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டாலும், 22 திட்டங்களின் புனரமைப்பு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முடிந்தது.

கொழும்பு நகர அதிகாரப்பிரிவினுள் திட்டங்களின் கேள்வி கோரல்களுக்காக கேள்வி குறைவாக காணப்பட்டதினால் 2013 ஜூலை மாதம் 23 ஆம் திகதி அமைச்சரவையின் அனுமதியுடன் கொழும்பு நகரினுள் காணப்படும் 17 திட்டங்களின் புனரமைப்பு நடவடிக்கைகளை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

## தொடர்மாடி வீட்டு புனரமைப்புத்திட்டத்தின் வளர்ச்சி 2013

| தொடர இல. | திட்டம் | வீடுகளின் எண்ணிக்கை | ஒப்பந்த தொகை(Vat உடன்) மி. ரூபா. | 31.12.2013 ஆம் திகதியில் வளர்ச்சி | | ஏனையவை |
|---|---|---|---|---|---|---|
| 01 | குருநகர் - யாழ்ப்பாணம் | 160 | 100.0 | 90% | 53.4 | |
| 02 | சொய்சாபுர கட்டம் II | 960 | 102.00 | 65.0% | | |
| 03 | மிகிந்து மாவத்தை வீடமைப்புத்திட்டம் | 125 | 23.5 | 20% | 4.69 | |
| 04 | ஆராமய இடம் வீடமைப்புத்திட்டம் | 96 | 18.5 | 18% | 3.50 | |
| 05 | குணசிங்கபுர வீடமைப்புத் திட்டம் | 536 | 133.5 | 10% | 26.7 | |
| 06 | ஆதுருப்பு வீதி வீடமைப்புத்திட்டம் | 108 | 23.0 | 23% | 4.57 | |
| 07 | ஆப்துல் ஹமீட் வீடமைப்புத்திட்டம் | 95 | 13.5 | 10% | 2.70 | |
| 08 | ஆமர் வீதி வீடமைப்பு திட்டம் | 810 | 33.0 | 10% | 6.49 | |
| 09 | சமகிபுர வீடமைப்புத்திட்டம் | 244 | 110.5 | 18% | 21.96 | |
| 10 | சாமபுர வீடமைப்புத்திட்டம் | 136 | 46.5 | 15% | 9.30 | |
| 11. | சிரிதம்ம மாவத்தை வீடமைப்புத்திட்டம் | 72 | 13.5 | 15% | 2.62 | |
| 12. | சங்கராஜ மாவத்தை வீடமைப்புத்திட்டம் கட்டம் 1 கட்டம் 11 | 255 | 85.5 | | 17.06 | இத்திட்டங் களுக்காக ஒப்பந்தகாரர் களுடன் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டு முற்பணம் வழங்கப்பட்டுள்ளது. |
| 13 | மொஹிதின் மஸ்ஜித் வீடமைப்புத்திட்டம் | 16 | 3.5 | | 0.63 | |
| 14 | சூரிய மல்புர வீடமைப்புத்திட்டம் | 68 | 8.5 | | 1.70 | |
| 15 | சுச்சரித்த மாவத்தை வீடமைப்புத்திட்டம் | 32 | 14.0 | | 2.78 | |
| 16 | ப்லூமெண்டல் வீடமைப்புத்திட்டம் | 392 | 60.0 | | 12.00 | |
| 17 | பல்லியவத்த வீடமைப்புத்திட்டம் | 72 | 11.0 | | 2.15 | |
| 18 | காக்கைதீவு வீடமைப்புத்திட்டம் சனசமூக நிலையம் கழிவகற்றல், கால்வாய் மற்றும் சிறுவர் பூங்கா புனரமைப்பு | 353 | 5.0 | - | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 19 | சிரிமாபுர வீடமைப்புத்திட்டம் | 80 | 13.0 | | 2.60 | |
| 20 | ஜயவடனகம - பொக்குன | 705 | 5.0 | | | தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு பெறுகைகள் செலுத்தி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. |
| 21 | ராகுலபுர மலம் வெளியேறுகுழாய் புனரமைத்தல். | 100 | 2.54 | 25% | | |
| 22 | எகொடஉயன வீடமைப்புத்திட்டம் | 64 | 18.55 | 10% | | |
| 23 | நுப்பெவெல மலம்வெளியேற்று குழாய் புனரமைத்தல் | 201 | 15.5 | | | பெறுகை நடவடிக்கைகள் நடைபெற்று வருகிறது. |
| 24 | ரத்தொலுகம கேட்போர்கூடம் | - | 4.0 | | | பெறுகை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. |
| 25 | மாளிகாவத்தை கட்டம் II | 1520 | 80.0 | 100% | | |
| 26 | சகஸ்ரபுர மற்றும் சிங்ஹபுர | 731 | 75.0 | | | |
| | மொத்தம் | 7931 | 1023.59 | | | |

சகஸ்ரபுர மற்றும் சிங்ஹபுர வீடமைப்பு திட்டங்கள் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் நிதியினைக்கொண்டு நகர அபிவிருத்தி அதிகாரசபையின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மிகுதி வீடமைப்பு திட்டம் ஜனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. நூபேவெல மலம் அகற்றும் குழாய் அமைப்புக்களுக்கான பெறுகை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு ஒப்பந்தகாரர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முப்பது நாற்பது வருடங்கள் பழமை வாய்ந்த தொடர்மாடி வீட்டுத்திட்டமான மாளிகாவத்தை மற்றும் சொய்சாபுர விடமைப்புத் திட்டங்களில் காணப்படும் அனுமதியற்ற கட்டிடங்களை அகற்றும் சிக்கலான நிலைமை காரணமாக புனரமைப்பு வேளைகளை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட காலத்தினை விட அதிககாலம் எடுத்துள்ளது. இதன் காரணமாக 2011 ஆம் ஆண்டிலிருந்து பல கட்டங்களாக புனரமைப்பு வேலைகளை மேற்கொள்ள வேண்டிய நிலை காணப்பட்டது.

## மாளிகாவத்தை

இவ்வீடமைப்பு திட்டம் 1520 வீடுகளை கொண்டுள்ளதுடன் 46 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. 1 ஆவது கட்ட புனரமைப்பு பணிகள் 2013 ஜூலை மாதம் 25 ஆம் திகதியில் முடிவடைந்தது இதனை மேதகு ஜனாதிபதியும் பார்வையிட்டுள்ளார்கள். இதன் 11 ஆவது புனரமைப்பு நடவடிக்கைகள் 2013.12.31 ஆம் திகதியில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. மாளிகாவத்தை வீடமைப்புத்திட்டத்தின் கட்டிடங்கள் மற்றும் சகல அடிப்படை வசதிகளையும் புனரமைப்பு செய்வதற்காக (வேளி அடங்கலாக) 356.0 மி. ரூபா செலவாகியுள்ளது. பிரதானமாக கட்டிடங்களை புதுப்பித்தல், 3.4 கிலோ மீட்டர் தூ ரமான பாதைக்கு காபட் இடுதல், நீர் வடிந்தோடும் கால்வாய்கள், மலம் வெளியேற்றும் குழாய் அமைப்புக்கள், நீர் தாங்கி கோபுரங்கள் மற்றும் பொதுக்கட்டிடங்கள் போன்றவை புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டதுடன் மாடி வீடுகளில் குடியிருக்கும் மக்களின் ஆன்மீக

குணவியல்புகளை விருத்தி செய்து அலங்காரமான ஒரு குடியிருப்பாக விளையாட்டு மைதானம் தோட்ட அலங்காரம் மற்றும் புத்தர்சிலை மண்டபம் ஒன்றும் புதிதாக நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மாளிகாவத்தை - அன்று இன்று






- **சொய்சாபுர**

சொய்சாபுர வீடமைப்புத்திட்டத்தின் 1 ஆம் கட்ட புனரமைப்பு பணிகள் 100.0 மி.ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டு 2012.10.07 ஆம் திகதியன்று மேதகு ஜனாதிபதி அவர்களினால் பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டது.

1920 வீடுகளைக் கொண்ட சொய்சாபுர விடமைப்புத்திட்டத்தின் 462 வீடுகள் 1 ஆவது கட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்பட்டள்ளது. மிகவும் பழைமையான வீடமைப்புத்திட்டங்களான A,B,C,R,S,M, N மற்றும் C3, B34 ஆகிய தொடர்மாடி வீடுகளும் சிறுவர் பூங்கா, 1/2 கி மீட்டர் அளவு நீளமான பாதைக்கு காபட் இடுதல், சனசமூக நிலையம், வாசிகசாலை, விளையாட்டு மைதானம், மலம் வெளியேற்றும் குழாய், மலம் வெளியேறும் குழாய் அமைப்புகள் பூரணமாக புனமைப்பு செய்யப்பட்டுள்ளது. அலங்காரமான ஒரு புத்தர்சிலை மண்டபமும் நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் 2013 உலக குடியிருப்பு தின வைபவம் மேதகு ஜனாதிபதியின் பங்குபற்றுதலுடன் சொய்சாபுர விடமைப்பு திட்டத்தில் நடாத்தப்பட்டதும் ஒரு விசேடமான நிகழ்வாகும்.

சொய்சாபுர கட்டம் 11ன் கீழ் 960 வீடுகளுக்கான சகல புனரமைப்பு பணிகளும் 2014 ஏப்ரல் 30 ஆம் திகதியில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், 2013 டிசம்பர் 31 ஆம் திகதியில் 65% வளர்ச்சியினை பெற்றுள்ளதுடன் 11 ஆவது கட்ட புனரமைப்பத்திட்டத்தின் கீழ் 1.5 கி. மீட்டர் நீலமான பாதை, மலம் வெளியேற்றும் குழாய்கள், பொதுக்கால்வாய்கள் மற்றும் கட்டிடங்கள் என்பன புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

- **சொய்சாபுரம் கட்டம் 1**

அன்று இன்று






- **சொய்சாபுரம் கட்டம் 11**

அன்று இன்று





குருநகர் யாழ்ப்பாணம் - யுத்தத்தினால் பெரிதும் பாதிப்புக்கு உள்ளான குருநகர் வீடமைப்புத்திட்டம் புனரமைப்பு செய்யப்படும் விதம் பின்வருமாறு

அன்று இன்று




- **சமகிபுர வீடமைப்புத்திட்டம்**

அன்று | இன்று





- **எகொட உயன வீடமைப்புத்திட்டம்**

அன்று | இன்று





## ➢ வீடமைப்பு திட்டங்களில் அடிப்படை வசதிகளை விருத்தி செய்தல்.

ஜயவடனகம குளத்திற்கு அசுத்த நீர் வடிந்தோடும் ‘‘மேன்ஹோல்கள்’’ 07 னை திருத்தியமைப்பதற்காக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச்சபைக்கு 4.3 மி. ரூபா செலுத்தப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட புனரமைப்பு வேலைகள் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஜயவடனகம மலம் வெளியேற்று பொது குழாய் அமைப்புடன் தொடர்புபட்டுள்ள வீடுகளின் ‘‘மேன்ஹோல்கள்’’ / மலம் வெளியேற்றும் குழாய் அமைப்பு முறையினை சீரமைப்பதற்காக 8.0 மி. ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. பாய்ச்சும் உபகரணம் கொள்வனவு செய்வதற்காக கேள்வி கோரல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## ➢ மாவட்ட காரியாலங்களை புனரமைத்தல்.

- மாத்தறை மாவட்ட காரியாலயத்தின் முதலாவது மாடி புனரமைப்பு நடவடிக்கைகள் 2012/07/22 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2013.05.02 ஆம் திகதி பூர்த்தி செய்யப்பட்டதுடன் இதற்கான செலவு 16.5 மி. ரூபாவாகும்.

அன்று இன்று





- கண்டி அரசாங்க செயலாளர் பணிமனையினை நவீனமயப்படுத்தல் வேலைகள் 2013.02.01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2013.12.31 ஆம் திகதியில் வளர்ச்சி 88% ஆகக் காணப்பட்டது. நிர்மாணப்பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. 2014.01.31 ஆம் திகதியில் வேலைகள் பூர்த்தி செய்யப்படவுள்ளது.

அன்று இன்று





## ➢ கொழும்பைச் சூழவுள்ள வீடமைப்புத்திட்டங்களில் அவசர புனரமைப்புகளும் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளும்

கொழும்பு நகர் பிரதேசங்களில் 10 வருடங்களுக்கு மேல் நிர்மாணிக்கப்பட்ட அனேகமான வீடமைப்பு திட்டங்களின் சேவை வசதிகள் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை மற்றும் கொழும்பு மாநகரசபை ஆகிய நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வீடுகள் விற்பனை செய்யப்பட்டிருந்தாலும் அல்லது வாடகைக்கு விடப்பட்டிருந்தாலும் அந்த வீடுகளினுள் காணப்படும் நீர் குழாய்கள் மலம் வெளியேற்றும் குழாய்கள் மற்றும் “மேன்ஹோல்” குழிகள், பாய்ச்சும் நிலையங்களின் பராமரிப்பு நடவடிக்கைகள் யாவும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நீர் வழங்கல் குழாய் அமைப்பு முறையில் திருத்த வேலைகளுக்காக அடிக்கடி முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுவதினால், அவசர திருத்த வேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நேரடியாக ஈடுபடக்கூடிய விதத்தில் பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் பிரிவு ஒன்று தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினுள் நிறுவப்பட்டுள்ளதுடன் இப்பிரிவு 24 மணி நேரமும் செயற்பட்டு வருகிறது. இந்தப் பிரிவினால் மாதாந்தம் மேற்கொள்ளப்படும் திருத்த வேலைகளின் எண்ணிக்கை 100விட அதிகமாக காணப்படுகிறது. இதற்காக செலவாகும். தொகை 1.30 மி. ரூபாவாகும். மேலும் மலம் வெளியேற்று குழாய் அமைப்பு மற்றும் பாய்ச்சு நிலைய நடவடிக்கைகள் மற்றும் குப்பை கூழங்களை அகற்றும் நடவடிக்கைகள் யாவும் ஒப்பந்தகாரர்கள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. இதற்காக 2013 ஆம் வருடத்தினுள் 3.91 மி. ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

248 வீடுகளைக் கொண்டுள்ள முல்லேரியா வீடமைப்பு திட்டத்தின் மலம் சுத்திகரிப்பு கட்டமைப்பினை பராமரித்தல் மற்றும் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்கான செலவு 0.42 மி. ரூபாவாகும்.

## "சகஸ்ரலங்கா" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வீடமைப்பு அபிவிருத்தி திட்டம்

- "சகஸ்ரலங்கா" வேலைத்திட்டத்தின் கீழ் 117 அல்விட்டிகல ஏ கட்ட வீடமைப்புத்திட்டம் 2013.01.31 ஆம் திகதி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. 04 வீடுகளைக்கொண்ட ஒரு வீட்டின் பரப்பளவு 1300 சதுர அடியாகும். சகல வீடுகளுக்கும் வாகனம் நிறுத்துவதற்காக கராஜ் வசதி உண்டு.

- லூவிசாவத்த வீடமைப்புத்திட்டத்தில் 30 புதிய வீடுகள் 2013 ஆம் ஆண்டு ஜுலை 23 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 2013 டிசம்பர் 31 ஆம் திகதி இதன் வளர்ச்சி 43% மாகும். இதற்காக 76 மி. ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

  பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்ட மிகுதியாகவுள்ள 36 வீடுகளின் வேலைகள் 2012.07.11 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2013.12.31 ல் 56% வீத வளர்ச்சியடைந்துள்ளது. ஒப்பந்த செய்யப்பட்ட பெறுமதி 72 மி. ரூபாவாகும். தற்பொழுது 33 வீடுகள் விற்பனை செய்யப்பட்டு ஆரம்ப கட்டணம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.




- குருநாகல் மாவட்டத்தில் வெலன் கொள்ள வீடமைப்புத்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் 2012 ஜனவரி மாதம் 12 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. 1900 மற்றும் 2200 சதுர அடி பரப்புக் கொண்ட இந்த இரண்டு மாடிக்கட்டிடம் இரண்டு வகையில் அமைந்துள்ளது. இந்த வீடமைப்புத்திட்டத்தில் மொத்தம் 23 வீடுகள் காணப்படுகின்றன. 95% வீதமான வீடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இதற்கான செலவு 163 மி. ரூபாவாகும்.




## தொடர் வேலைத்திட்டங்கள்

முற்றுப் பெறாததொடர் வேலைத்திட்டத்தின்படி சொய்சாபுர கட்டம் 1 மற்றும் சுலோகித்தபுர 11 ஆம் கட்டம் என்பன ஆரம்பமாக்கப்பட்டுள்ளன. சுலோகித்தபுர 11 கட்டத்தின் கீழ் 16 வீடுகள் கொண்டுள்ள மூன்று மாடியைக் கொண்ட ஒரு கட்டிடம் 25 மி. ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. 2013.01.31 ஆம் திகதியில் 100% வீதம் வளர்ச்சியடைந்துள்ளது.

- **சுலோகித்தபுர கட்டம் 11**

அன்று இன்று





சொய்சாபுர வீடமைப்புத்திட்டம் கட்டம் 1 2012.08.23 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் 2013.10.07 ஆம் திகதி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. சொய்சாபுர மாடிவீட்டுத்தொகுதி மாடி வீடுகளைக் கொண்ட 05 கட்டிடங்களாகக் கொண்டுள்ளதுடன் சகல அடிப்படை வசதிகளையும் கொண்டுள்ளது. ஒரு கட்டிடத்தில் 20 வீடுகள் அமைந்து காணப்படுகிறது. இதன்படி இந்த திட்டத்தின் மொத்த வீடுகளின் எண்ணிக்கை 100 ஆகும். இதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட செலவு (பெ. சேர்.வரிஉட்பட) 45 மி. ரூபாவாகும்.

சொய்சாபுர வீடமைப்புத்திட்டம் 11 ஆவது கட்ட புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக 2013.10.07 ஆம் திகதி அமைச்சரவையின் அனுமதி கோரப்பட்டுள்ளது. இதற்காக 2013.11.11. ஆம் திகதி அனுமதி கிடைத்துள்ளது.

அன்று இன்று





## "ஜனசெவண சகஸ்ர லங்கா" வேலைத்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்படும் உள்நாட்டு / வெளிநாட்டு முதலீட்டு வீடமைப்புத்திட்டம்

தேசிய வீடமைப்பு மற்றும் குடியிருப்பு அபிவிருத்தி நடவடிக்கையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் "ஜனசெவண சகஸ்ரலங்கா" வீடமைப்புத்திட்டம் இதுவரையில் அமுல் செய்யப்பட்ட திட்டங்களில் ஒரு விசேட இடத்தினை வகிக்கிறது. தேசிய வீடமைப்பு அபிவருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான காணிகளில் அரச மற்றும் தனியார் பிரிவினர் கூட்டாக அமுல் செய்யும் இத்திட்டத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முதலீடுகளை மேற்கொண்டு வீடமைப்புத் திட்டங்களை நிர்மாணித்து வருகின்றனர். இந்த சகல திட்டங்களும் அமைச்சரவை அனுமதியுடன் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

வீடமைப்புத் திட்டத்திற்கு சொந்தமான தற்போதைய மதிப்பீட்டு பெறுமதியினையும் மற்றும் திட்டத்தின் இலாபததின் 10% தொகையினை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை பிரதிபலனாக கிடைக்கிறது. வீடு விற்பனை முதலீட்டாளரினால் மேற் கொள்ளப்படுவதுடன், கொள்வனவாளர்களுக்கு அவர்கள் முதலீடு செய்யும் பணத்தின் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

திட்டங்களின் நிர்மாணத்தின் வளர்ச்சி 25% வீதத்தினை அடைந்ததும் முதலீட்டாளர்களுக்கு பணத்தினைப் பெற்றுக் கொள்ளக்கூடிய விதத்தில் "எஸ்குரோ" கணக்கு ஒன்றின் மூலம் நிதி திரட்டப்படுகிறது. 2013.12.31 ஆம் திகதியில் ஆரம்பிக்கப்பட்ட வீடமைப்புத்திட்டத்தின் வளர்ச்சி பின்வருமாறு வழங்கப்பட்டுள்ளது.

- வெளிநாட்டு முதலீட்டுத் திட்டத்தின் கீழ் கிருளப்பனை மிஹிந்து புர திட்டத்திற்காக அமைச்சரவையின் அனுமதியினை பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது. மிஹிந்துபுர திட்டம் 560 வீடுகளைக் கொண்டுள்ளதுடன் அது சகல அடிப்படை வசதிகளையும் கொண்டுள்ளது. நிர்மாணச் செலவு 6.3 பில்லியன் ரூபாவாகும். அபிவிருத்திக்கான அனுமதிப் பத்திரத்தினைப் பெற்றுக் கொள்வதற்காக தேவையான ஆவணங்கள் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு 2014 ஆம் வருடத்தின் ஆரம்பத்தில் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

- கம்பஹா மாவட்டத்தின் யக்கல வெரல்லவத்த மற்றும் "லங்காலோஹ" காணிக்காக 864 வீடுகளும் ஹோமாகம மவுன்ட் கிளிபர்ட் திட்டத்தில் 1064 வீடுகளை நிர்மாணிப்பதற்கும் திட்டமிடப்பட்டு அமைச்சரவை அனுமதிக்காக 2013.01.10 ஆம் திகதி ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுள்ளது. வெளிநாட்டு முதலீட்டு கம்பனி உடன்படிக்கையின் பிரகாரம் நிதி முறிகளை வழங்குவதற்கு தவறியதன் காரணமாக யக்கல மற்றும் ஹோமாகம திட்டங்களுக்காக ஹோமாகம திட்டங்களுக்காக முறையே 51.97 மி. ரூபா மற்றும் 55.8 மி. ரூபா தொகை தண்டப்பணமாக பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

- அரசாங்கத்தின் சட்டமா அதிபர் திணைக்கள சட்டத்தரணிகள் சங்கத்தின் வேண்டுகோளின்படி 80 வீடுகள் கொண்ட 20 தொடர்மாடிக் கட்டிடங்களை நாராஹேன்பிட்ட காணி ஒன்றினுள் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அமைச்சரவை அனுமதியினைப் பெற்று 2014 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டினுள் வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. நிதி வழங்கல் சட்டத்தரணிகள் சங்கத்தின் மூலம் அரச வங்கி ஒன்றின் ஊடாக வழங்கப்பட்டுள்ளது.

### 1. யக்கல - சியனே நேச்சர் பாக் வீடமைப்புத்திட்டம்

இந்த வீடமைப்புத்திட்டத்திற்காக அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதுடன் உள்நாட்டு முதலீட்டாளர் ஒருவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். திட்டத்திற்கான முழுச்செலவு 158.80 மி. ரூபாவாகும். ஒரு வீட்டின் விற்பனை விலை 4.3 மி. ரூபாவாகும். என்பதுடன் ஒரு வீடு 884 சதுர அடிகளைக்கொண்டதாகும்.

## 2. கண்டி - பல்லேகலே ரிஜன்சி பாக் வீடமைப்புத்திட்டம்

கண்டி பல்லேகலே பிரதான பாதைக்கு முன்பாக காணப்படும் இந்த திட்டத்திற்காக அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளதுடன் உள்நாட்டு முதலீட்டாளர் ஒருவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இத்திட்டம் 21 வீடுகளையும் 28 கடைத்தொகுதிகளையும் கொண்டுள்ளது. 100 சதுர அடிகளைக் கொண்ட 18 வீடுகளும், 1940 அடிகளைக்கொண்ட 03 வீடுகளும் காணப்படுகின்றன. வீடு ஒன்றின் விற்பனை விலை 8.5 மி. ரூபா மற்றும் 14.5 மி. ரூபாவாகும்.

காணியினை துப்புரவு செய்து வரைபடங்கள் தயாரிக்கப்பட்டு நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. திட்டத்திற்கான மொத்த செலவு 240 மி. ரூபாவாகும்.

## 3. கொழும்பு கவிரத்ன பிலேஸ் வீடமைப்புத்திட்டம்

அமைச்சரவையின் அனுமதி இத்திட்டத்திற்காக பெற்றுக் கொள்ளப்பட்டிருப்பதுடன் வெளிநாட்டு கம்பனி ஒன்று முதலீடு செய்வதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளது. 28 வீடுகளைக்கொண்டுள்ள இத்திட்டத்தின் செலவு 805.6 மி. ரூபாவாகும்.

## 4. கொழும்பு - ரணால ஜல்தர வீடமைப்புத்திட்டம்

அமைச்சரவை அனுமதிக்காக சமர்பிக்கப்பட்டுள்ள இந்த திட்டத்தின் நிர்மாணத்திற்காக உள்நாட்டு முதலீட்டாளர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இந்த திட்டம் 150 வீடுகளைக் கொண்டுள்ளதுடன் திட்டத்திற்கான செலவு 855.66 மி. ரூபாவாகும்.

## 5. கொழும்பு - சய்மன் டேல் வத்த வீடமைப்புத்திட்டம்

வெளிநாட்டு முதலீட்டாளர் ஒருவர் இத்திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளார். 192 வீடுகள் கொண்ட இத்திட்டத்திட்காக 1329.65 மி. ரூபா செய்யப்பட்டுள்ளது.

## 6. கண்டி - ஹந்தான ரெசிடென்சீஸ் வீடமைப்புத்திட்டம்

உள்நாட்டு முதலீட்டாளர் ஒருவரினால் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் 126 வீடுகள் காணப்படுகிறன. திட்டத்தின் மொத்த செலவு 1459.5 மி. ரூபாவாகும். இத்திட்டத்திற்காக அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளது.

## 7. கண்டி - ஹந்தான துனுமடலாவ விலாஸ் விடமைப்புத்திட்டம்

அமைச்சரவையின் அனுமதி இத்திட்டத்திற்காக கிடைத்துள்ளது. இத்திட்டத்தில் 19 வீடுகள் காணப்படுகின்றன. திட்டத்தின் மொத்த செலவு 188.0 மி. ரூபாவாகும்.

## 8. இரத்தினபுரி - கல்கடுவத்த வீடமைப்புத்திட்டம்

அமைச்சரவையின் அனுமதி இதற்கு கிடைத்துள்ளது. இத்திட்டத்தில் 130 வீடுகள் காணப்படுகின்றன. இத்திட்டத்திற்காக 932.0 மி. ரூபாவாகும்.

## மனிதவள முகாமை
## தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் கட்டமைப்பு

பிரதான காரியாலயத்தின் ஊழியர் குழு, தலைவர்/ உப தலைவர்/ பொதுமுகாமையாளர்/ செயற்பாட்டுப்பணிப்பாளர் மற்றும் 09 பிரதிப்பொதுமுகாமையாளர் பிரிவினுள் உள்ளடக்கப்படுகிறது. இதற்கு மேலதிகமாக 25 மாவட்டக் காரியாலயங்கள் மற்றும் 03 கொழும்பு நகர காரியாலங்களுடன் கல்முனையில் ஒரு உப காரியாலயத்தினையும் கொண்டுள்ளது.

மனிதவள முகாமை மற்றும் நிர்வாகப்பிரிவு பின்வரும் உப பிரிவுகளைக் கொண்டமைந்துள்ளது.

1. மனித வளப்பிரிவு
2. நிர்வாகப்பிரிவு
3. ஒழுக்காற்றுப்பிரிவு
4. போக்குவரத்துப்பிரிவு
5. விநியோகப் பிரிவு
6. பயிற்சிப் பிரிவு
7. ஊழியர் வீடமைப்புக் கடன் பிரிவு
8. பாதுகாப்பு பிரிவு

2013.12.31 ஆம் திகதியில் நிரந்தர ஊழியர்களின் கட்டமைப்பு

| தொடர் இல. | சேவை மட்டம் | சம்பள பிரிவு | ஊழியர்களின் எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | அனுமதிக்கப் பட்டது | பௌதீக ஊழியர்களின் எண்ணிக்கை | | | |
| | | | | நிரந்தர | ஒப்பந்த | நாளாந்த | மொத்தம் |
| 1 | சிரேஷ்ட | HM 2-1 | 1 | 1 | | | 1 |
| 2 | சிரேஷ்ட | HM 1- 3 | 6 | 5 | | | 5 |
| 3 | சிரேஷ்ட | HM 1-1 | 10 | 9 | 1 | | 10 |
| 4 | சிரேஷ்ட | MM 1-1 | 97 | 87 | 3 | | 90 |
| 5 | மூன்றாம் நிலை | JM 1-1 | 143 | 127 | 2 | | 129 |
| 6 | இரண்டாம் நிலை | MA 5-2 | 16 | 153 | | | 153 |
| 7 | இரண்டாம் நிலை | MA 2-2 | 352 | 408 | 13 | 6 | 427 |
| 8 | இரண்டாம் நிலை | MA 1-2 | 545 | 677 | 4 | 341 | 1022 |
| 9 | ஆரம்ப | PL 3 | 75 | 162 | 4 | 13 | 179 |
| 10 | ஆரம்ப | PL 2 | 25 | 20 | 1 | 10 | 31 |
| 11 | ஆரம்ப | PL 1 | 105 | 140 | 14 | 106 | 260 |
| **மொத்தம்** | | | 1375 | 1789 | 42 | 476 | 2307 |

சுருக்கம்

| சேவை மட்டம் | அனுமதிக்கப்பட்டது | உண்மையானது |
|---|---|---|
| சிரேஷ்ட | 114 | 106 |
| மூன்றாம் நிலை | 143 | 129 |
| இரண்டாம் நிலை | 913 | 4602 |
| ஆரம்ப | 205 | 470 |
| மொத்தம் | **1375** | **2307** |

**31.12.2013 ஆம் திகதியில் தற்காலிக ஊழியர் பற்றிய விபரம்**

| சுருக்கம் தொ. இல. | சேவை மட்டம் | சம்பள பிரிவு | ஊழியர்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|
| | | | ஒப்பந்த (ஓய்வு பெற்றதன் பின்னர் ஆட்சேர்ப்பு) | ஒப்பந்த (நிரந்தரஆட்சேர்ப்பு) | நாளாந்த |
| 1 | சிரேஷ்ட | HM 1-1 | | 1 | |
| 2 | சிரேஷ்ட | MM 1-1 | 1 | 2 | 0 |
| 3 | முன்றாம் நிலை | JM 1-1 | 1 | 1 | 0 |
| 4 | இரண்டாம் நிலை | MA 2-2 | | 13 | 6 |
| 5 | இரண்டாம் நிலை | MA 1-2 | | 4 | 341 |
| 6 | ஆரம்ப | PL 3 | | 4 | 13 |
| 7 | ஆரம்ப | PL 2 | | 1 | 10 |
| 8 | ஆரம்ப | PL 1 | 1 | 13 | 106 |
| **மொத்தம்** | | | **3** | **39** | **476** |

## நிர்வாகப்பிரிவு

2013ல் நிருவாகப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட விடயங்கள்

1. 2013 ஆம் ஆண்டிற்காக ஊழியர்களுக்கு போனஸ் கொடுப்பனவாக 1000/- ரூபாவும் ஊக்குவிப்புக் கொடுப்பனவாக 2000/- ரூபாவும் செலுத்தப்பட்டுள்ளது.
2. கடந்த வருடத்தில் பெற்றுக் கொள்ளாத ஓய்வு விடுமுறைகளுக்காக செலுத்தல்களை மேற்கொள்ளல்.
3. பாரதூரமான அறுவை சிகிச்சைகளின் கீழ் கொடுப்பனவுகளை வழங்கும் பொழுது புற்றுநோய்களுக்கான செலுத்தல்களும் உள்வாங்கப்பட்டுள்ளன. அத்துடன் ஏனைய மருத்துவ கொடுப்பனவுகளும் சாதாரணமாக வழமை போன்று செலுத்தப்பட்டுள்ளது.
4. இடர் கடன், பிரயாணச்செலவு, கொடுப்பனவு நடவடிக்கைகளும் மாவட்ட காரியாலயங்களின் வாடகை கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டுள்ளன.

## ஊழியர் வீடமைப்பு கடன்

2013 ஆம் வருடத்திற்காக 78,600 மி. ரூபா ஊழியர் வீடமைப்புக்கான நிதியாக கிடைத்துள்ளது. தலைமை காரியாலயத்திற்காக 20,000 மி. ரூபாவும் மாவட்ட காரியாலயங்களுக்காக 58, 600/- மி. ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

02. மேற்படி நிதியினைக் கொண்டு பின்வரும் விதத்தில் வீடமைப்பு கடன்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

| தரம் | தலைமைக் காரியாலயம் | மாவட்ட காரியாலயம் | செலுத்தப்பட்ட மொத்த தொகை |
|---|---|---|---|
| I-VI | 700,000.00 | 2,300.000.00 | 3,000,000,00 |
| VII-VII A | 1,617,940.00 | 1,522,482.11 | 3,140,422.11 |
| VIII-IX | 618,800.00 | 2,690,000.00 | 3,308,800.00 |
| X | 650,000.00 | ---- | 650,000.00 |
| | 3,586,740.00 | 6,512,482.11 | 10,099,222.11 |

**ஒழுக்காற்று நடவடிக்கை**

1. அதிகாரசபையின் அனைத்து ஒழுக்காற்று நடவடிக்கைகளும் ஒழுக்காற்று பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது. 2013 ஆம் ஆண்டினுள் முறையான 23 ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இதில் 17 விசாரணைகள் முற்றுப் பெற்றுள்ளதுடன் அந்த 17 விசாரணைகளில் 09 விசாரணைகளுக்கு 2013 ஆம் ஆண்டினுள் ஒழுக்காற்று கட்டளைகள் பிரப்பிக்கப்பட்டுள்ளன.

**பாதுகாப்புச் சேவை**

**ஏற்படுத்தப்பட்ட இலக்கு**

I. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பாதுகாப்பு பிரிவு, அதிகார சபையின் நிலையான/நடமாடும் சொத்துக்களைப் பாதுகாத்தல் மற்றும் மனித வளத்தினை பாதுகாத்தல், நிறுவனத்தின் நற்பெயரினையும் மற்றும் ஊழியர்களின் ஒழுக்கத்தினை பாதுகாப்பதற்காக முழு பலத்துடன் விதிமுறைகளை கையாண்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

II. கடந்த வருடத்தினுள் பயங்கரவாத நடவடிக்கைகள் இடம்பெறாத போதும் தொடர்ந்தும் முன்னர் காணப்பட்டது போன்ற விதத்திலேயே பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

III. 2013 ஜனவரி மாதம் ஆகும் பொழுது பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் 126 பேராக குறைவடைந்துள்ளது. நிலைமை இவ்விதம் காணப்பட்ட போதும் பாதுகாப்பு சேவைகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியிருந்தது.

IV. பிரதான காரியாலயம் மற்றும் பிரதான காரியாலயத்தினால் நிருவாகம் செய்யப்படும் சேவை நிலையங்கள் சிலவற்றுக்காக உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தி பல்வேறு விதி முறைகளை கையாண்டு பாதுகாப்பினை உறுதி செய்ய வேண்டி ஏற்பட்டது.

அவ்வாறு பாதுகாப்பு உத்தியோகத்தர்களை ஈடுபடுத்திய சேவை நிலையங்கள்.

**I.** ஜல்தர அரச ஊழியர் வீடமைப்புத்திட்டம்
**II.** மாளிகாவத்தை பெரிய மற்றும் சிறிய பிரதீபா மண்டபங்கள்
**III.** மோதர மற்றும் குணசிங்கபுர பிரதீபா மண்டபம்
**IV.** நாராஹேன்பிட்ட 117 வத்த 11 கட்ட விடமைப்புத்திட்டம்.
**V.** சொய்சாபுர வலயக்காரியாலயம்
**VI.** ரத்மலான நீர் பாசன திணைக்களத்திடமிருந்து சுவீகரித்த காணி
**VII.** கொழும்பு நகர் வடக்கு காரியாலயத்திற்கு சொந்தமான முத்திரையிடப்பட்ட கடைகள்
**VIII.** மாளிகாவத்தை மாதிரி வீடு (சிதைவடைந்த கட்டிட பொருட் களஞ்சியம்.)

**இலக்கினை அடைந்து கொள்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் அதன் பெறுபேறுளும்**

01. தலைமைக் காரியாலயம் உட்பட வீடமைப்பு செயலக கட்டிடத்தில் அமைந்துள்ள அலுவலகங்களுக்காக சமூகமளிக்கும் சகல வாகனங்கள் மற்றும் ஆட்கள், பொதிகளை பரிசோதனை செய்தல் மற்றும் சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு அனுப்பிவைத்தல்.

02. பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வகுப்புக்களை நடாத்தல், மாவட்ட காரியாலயம் மற்றும் சகல வேளைத்தலங்களுக்கும் தேவையான கடமை பற்றிய ஆலோசனைகளை எழுத்து மூலமாக வெளியிடல், அந்த ஆலோசனைகள் தொடர்பாக பிரிவுத்தலைவர்கள் மற்றும் மாவட்ட முகாமையாளர்களுக்கு அறிவித்தல் வழங்கல். பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்குள்ள பொறுப்புக்கள் மற்றும் கடமைகள் சம்பந்தமாக பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு அறிவித்தல் வழங்கல்.

03. ஊழியர்கள் கடமைக்கு சமூகமளிக்கும் மற்றும் வெளியேறும் நேரம் பற்றிய குறிப்புக்களை பராமரித்தல் மற்றும் நேரத்தினை பதிவு செய்யும் இயந்திரத்தின் பாதுகாப்பு சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தல்.

04. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் நற்பெயருக்கு இழுக்கு ஏற்படும் நடவடிக்கைகளை தடுத்தல், மற்றும் வஞ்சகமான செயல்கள் மற்றும் நட்டம் ஏற்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்படும் செயல்களை கண்டறிந்து அறிக்கை சமர்ப்பித்தல் மற்றும் ஒழுக்க கட்டுப்பாடுகளை பேணுவதற்கு உதவுதல்.

05. கொம்பனித்தெரு பொலிஸ் நிலையத்தினை அடிப்படையாகக் கொண்டு செயற்படுத்தப்படும் அதிஉயர் பாதுகாப்பு பகுதியில் அமைந்துள்ள நிறுவனங்கள், பாதுகாப்பு குழு கூட்டங்களுக்கு சமூகமளித்தல் மற்றும் அங்கு எடுக்கப்படும் தீர்மானங்கள் மற்றும் வழங்கப்படும் ஆலோசனைகளின் படி செயல்படுதல் அது சம்பந்தமாக பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு அறிவித்தல் வழங்கல்.

06. நிருவாகத்தினரின் தீர்மானத்தின் படி சேவை புரியும் இடங்களுக்கு பாதுகாப்பு பிரிவினரை ஈடுபடுத்தலை குறைந்த மட்டத்தில் பேணுதல், மேலதிக நேர வேலையினை குறைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் இதன் மூலம் அதிகாரசபையின் நிதி நிலைமையை பாதுகாத்தல்.

07. வீடமைப்பு செயலாளர் பணிமனை கட்டிடத்தினை பாதுகாப்பதற்காக துப்பாக்கிகளுடன் கூடிய பாதுகாப்பு பிரிவினரை ஈடுபடுத்தல்

08. நீதிமன்ற கட்டளையினைப் பெற்று சட்ட ரீதியற்ற விதத்தில் குடியேறியுள்ளவர்கள் அகற்றுவதற்கான நடவடிக்கைக்காக பாதுகாப்பு உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தல் மற்றும் வெளியேற்றப்பட்ட குறிப்பிட்ட வீடுகளில் மீள உட்பிரவேசிப்பதை தடுப்பதற்காக தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகள் ஒழுங்கு செய்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.

**விசேட விடயங்கள்**

01. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு 2012 ஆம் ஆண்டு தொடக்கம் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்.

02. பாதுகாப்பு உத்தியோகத்தர் பயிற்சிப் பாடநெறி மற்றும் ஒழுக்க நடைமுறைகள் போன்ற பாடநெறிகளுக்கும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களை பங்குபற்றச் செய்வதற்கு பிரதி பொது முகாமையாளர் (மனித வள முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம்) நடவடிக்கையெடுத்தார். அதேபோன்று மேற்படி பாடநெறிகளைக் கற்ற பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வெற்றிகரமாக அப் பாடநெறிகளைக் கற்று தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் நற்பெயரைப் பாதுகாக்கின்ற வகையில் அனைத்துப் பாடங்களிலும் திறமைச் சித்திகளைப் பெற்றுள்ளனர்.

## பயிற்சி வேலைத்திட்டம் 2013 ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை

**பயிற்சி வேலைத்திட்டத்திற்காக ஒதுக்கிய நிதி - ரூ. 4,725,000.00**

| தொடர் இலக்கம் | பிரிவு | வேலைத்திட்ட எண்ணிக்கை | பங்குபற்றிய எண்ணிக்கை | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை | செலவாகிய தெகை (ரூபா) | எஞ்சிய நிதி ரூபா |
|---|---|---|---|---|---|---|
| 1 | உள்ளக பயிற்சி வேலைத்திட்ம் | 11 | 347 | 2,000,000.00 | 289,043.00 | 1,710,957.00 |
| 2 | வெளிவாரி பயிற்சி வேலைத்திட்டம் -உள்நாட்டு | 26 | 75 | 1,000,000.00 | 286,110.00 | 713,890.00 |
| 3 | வெளிவாரி பயிற்சி வேலைத்திட்டம் -வெளிநாடு | 2 | 4 | 1,725,000.00 | 1,231,657.00 | 493,343.00 |
| | | 39 | 427 | 4,725,000.00 | 1,806,810.00 | 2,918,190.00 |

## சுய விருப்பு பயிற்சி வேலைத்திட்டம் (கடன்)

**பயிற்சி கடனுக்காக ஒதுக்கிய நிதி - ரூ.6,500,000.00**

தலைமை காரியாலயம் **ரூ. 2,000,000.00**

மாவட்ட காரியாலயம் **ரூ. 4,500,000.00**

| தொடர் இலக்கம் | பிரிவு | வேலைத்திட்ட எண்ணிக்கை | பங்குபற்றிய எண்ணிக்கை | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை | செலவு செய்த தொகை | மீதி தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| | சுய விருப்பு பயிற்சி கடன் -த. காரியாலயம் | 12 | 15 | 2,000,000.00 | 342,500.00 | 1,657,500.00 |
| | சுய விருப்பு பயிற்சி கடன் -மா. காரியாலயம் | | 67 | 4,500,000.00 | 925,000.00 | 3,575,000.00 |
| | மொத்தம் | 12 | 82 | 6,500,000.00 | 1,267,500.00 | 5,232,500.00 |

## வழங்கப்பட்டிருக்கும் கற்கை விடுமுறை

| தொடர் இலக்கம் | பயிற்சி வேலைத்திட்டங்கள் பயிற்சிப்பாசறை/ கருத்தரங்கு | வெளிநாட்டு புலமை பரிசு மற்றும் பயிற்சி | கடன் திட்டம் | பயிற்சி மற்றும் பாடநெறி | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| **1** | **211** | **4** | **80** | **41** | **336** |

## போக்குவரத்துப்பிரிவு

### ❖ ஏற்படுத்திக்கொண்ட இலக்கு

01. தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய ஊழியர்களான 113 பேருக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கல்.

02. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு 10 டபிள் கப்களும் 02 பஸ் வண்டிகளையும் கொள்வனவு செய்தல்.

03. சாரதி நடத்துனர்களுக்காக சீருடை வழங்கல்.

04. அதிகாரசபையில் செயற்பாட்டில் இல்லாத வாகனங்களை வெளியேற்றல்.

05. போக்குவரத்து பிரிவுடன் இணைந்து காணப்படும் கராஜுக்கு தேவையான பொருட்களை வழங்கல்.

06. போக்கு வரத்து பிரிவுக்கு தேவையான ஊழியர்களை பெற்றுக்கொள்ளல்.

| | | |
|---|---|---|
| 1. | சாரதிகள் | 10 |
| 2. | மோட்டார் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் | 02 |
| 3. | உதவி தொழில்நுட்பவியலாளர்கள் | 02 |

07. நிறுவனத்தின் கராஜில் மேற்கொள்ளக்கூடிய சகல பழுதுபார்த்தல் நடவடிக்கைகளையும் மேற்கொள்வதன் மூலம் போக்குவரத்து விடயத்தில் நிறுவனத்தில் செலவினைக் குறைத்தல்.

08. நிறுவனத்தில் 09 வாகனங்களை பூரணமாக திருத்தியமைத்து ஓட்டத்திற்கு விடுவதற்காக நடவடிக்கை எடுத்தல்.

**இலக்குகளை நிறைவேற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும் பெறுபேறுகளும்.**

01. தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் ஏனைய ஊழியர்களுக்கும் மோட்டார் சைக்கிள் வழங்குவதற்காக 2012 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப் பின்பற்றி வெற்றிகரமாக 113 ஊழியர்களுக்கு தமது தேவைக்கு ஏற்ப ஆண் மற்றும் பெண்களுக்கான மோட்டார் சைக்கிள்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம்

I. ஊழியர்களுக்கு நிதிக் குத்தகைகளில் ஏற்படக்கூடிய அசௌகரியங்களை தவிர்த்து மோட்டார் சைக்கிளைப் பெற்றுக்கொள்ள முடிந்தது.

II. நிறுவனத்தின் கூட்டு காப்புறுதி திட்டத்துக்கு இந்த மோட்டார் சைக்கிள்கள் உட்படுத்தப்படுவதினால் காப்புறுதி கட்டணம் மற்றும் வருமான அனுமதிப்பத்திரம் 10,000/- ரூபாவுக்கு உட்பட்டதாக காணப்பட்டதும் 4,550/- ரூபாவுக்கு குறைந்த தவணைக்கட்டணத்தில் 48 தவணைகளில் இந்த மோட்டார் சைக்கிள்களை வழங்க முடிந்தது.

III. மோட்டார் சைக்கில்களை கொள்வனவு செய்வதற்காக 21,011,754/- ரூபா செலவு செய்யப்பட்டுள்ளதுடன் 04 வருட காலத்தினுள் ரூபா 23,399,580.96 சதம் அறவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் நிறுவனத்திற்கு ரூபா 2,387,826.96 சதம் வட்டி இலாபமாக கிடைத்துள்ளது.

02. நிறுவனத்தின் கடமைகளை மேற்கொள்வதற்காக தேவையான பஸ் வண்டி ஒன்றினை கொள்வனவு செய்வதற்கு தேவையான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

03. எரிபொருள் பாவனையை செயற்திறன் மிக்க வகையில் செயற்படுத்துவதற்கு மாவட்ட காரியாலயங்கள் மேலதிகமாக எரிபொருள்களைப்பெற்று கொள்ளும் பொழுது மாதாந்த

நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு ஓட்ட தூரத்திற்கு ஏற்ப மேலதிக எரிபொருள் பெற்றுக் கொள்வதற்கு தேவையான அறிவித்தலை வழங்கல் மற்றும் தலைமைக் காரியாலயத்தின் போக்குவரத்து பிரிவுக்கு இணக்கப்பட்டுள்ள வாகனங்களுக்கு எரிபொருள் வழங்கும் ஒவ்வொரு சமயத்திலும் ஓட்ட பதிவுகளுக்கு ஏற்ப எரிபொருள் பாவனையை பரிசோதனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

04. சாரதி மற்றும் வாகன நடத்துனருக்கு சீருடை வழங்கல்

சாரதி, நடாத்துனர்களுடன் கலந்துரையாடி அவர்களது சீருடைகளுக்கான துணிவகை பற்றி ஒரு முடிவுக்கு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2014 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டினுள் சாரதி, நடத்துனர்களுக்கு மூன்று சீருடைகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

05. ஓட்டத்தில் இருந்து ஓரம்கட்டப்பட்ட வாகனங்களை வெளியேற்றுவதற்கு சகல அனுமதிகளும் பெற்றுக்கொள்ளப்பட்டு பெறுகைகள் முறையின் கீழ் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இங்கு வெளியேற்றுவதற்கு பிரேரணை செய்யப்பட்ட 13 வாகனங்களில் 05 வாகனங்கள் வெளியேற்றப்பட்டுள்ளன. இதன்மூலம் ரூபா 14,45,963.35 சதம் வருமானம் பெறப்பட்டுள்ளது.

அதே போல் மிகுதியான 08 வாகனங்கள் மீள வெளியேற்றுவதற்கு அவசியமான அனுமதி பெற்றுக்கொள்ளபட்டு மதிப்பீடு செய்யப்பட்டு பணிப்பாளர் சபையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த வெளியேற்றல் நடவடிக்கை 2014 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டினுள் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

06. போக்குவரத்து பிரிவுக்கு இணைக்கப்பட்டுள்ள கராஜுக்கு அத்தியாவசியமாக தேவையான சில பொருட்கள் கௌ்வனவு செய்யப்பட்டுள்ளதுடன், அதன் மூலம் கராஜின் செயற்திறன் விருத்தி செய்வதற்கும் மற்றும் கராஜின் ஊழியர்களுக்கும் ஊக்கிவிப்புக்கள் செலுத்துவதன் மூலம் சிறந்த செயற்திறன் வாய்ந்த சேவையை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

07. போக்குவரத்து பிரிவுக்கு தேவையான ஊழியர் தேவையினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் புதிய சாரதிகள் 10 பேர் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளதுடன் தனிப்பட்ட காரணங்களுக்காக 05 பேர் விலகிக்கொள்வதுடன் தற்பொழுது 25 பேர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

## சட்டப் பிரிவு

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்கின்ற போது ஏனைய பிரிவுகளைப் போன்றே சட்டப் பிரிவினாலும் அதற்குத் தேவையான உதவிகள் வழங்கப்படுகின்றன.

- காணிகள் மற்றும் வீடுகளுக்கான அறுதி உறுதிகளை வழங்குதல்.
- மாடி வீடுகளின் உறுதிகளை வழங்குவதற்குத் தேவையான கூட்டாட்சிக் கூற்றுக்களைத் தயாரித்தல்.
- தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்குரிய ஆதனங்கள் தொடர்பில் பொதுவாக சமூகத்திற்கு பாதிப்புகள் ஏற்படுகின்ற முறைப்பாடுகள் தொடர்பில் செயலாற்றுதல்.
- தேவையான சந்தர்ப்பங்களில் ஆட்களுக்கும் நிறுவனங்களுக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல்
- தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான காணிகள் மற்றும் வீடுகளை அனுமதியின்றி அனுபவிக்கின்றவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்து நிர்ணய உரித்தைப் பெற்றுக்கொள்ளல்.
- வெளித் தரப்பினர்களுக்கும் இவ்வதிகாரசபைக்கும் இடையிலான அலுவல்களின்போது

ஒப்பந்த உடன்படிக்கைகளை தயாரித்தல் மற்றும் ஏனைய உடன்படிக்கைகளை தயாரித்தல்.

- அனைத்து மாவட்ட அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகத்தின் அனைத்துப் பிரிவுகளும் உள்ளடங்குகின்றவாறு தேவையான சட்ட ஆலோசனைகளைப் பெறுதல்.
- கடன் மற்றும் வாடகைத் தவணைத் தொகைகளை செலுத்தாதிருக்கின்ற நிலுவை கடன், வாடகைத் தவணை உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொண்டு அதிகார சபைக்கு வருமானத்தைப் பெற்றுக்கொள்ளல்.
- நொத்தாரிசுக் கட்டணம், சட்ட அறிவித்தல் மற்றும் வெளியேற்றல் கட்டளைகளை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் அறவீடுகளுக்கு பங்களிப்பை வழங்குதல்.

ஆகிய பல்வேறான கடமைகள் சட்டப் பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றன.

## உறுதிகளை வழங்கல்

மொத்தப் பணத்தையும் செலுத்தியுள்ள வீடமைப்புத் திட்டங்களின் வீடு பெறுனர்களுக்கு அறுதி உறுதிகளை வழங்குதல் பிரதானமாக நடைபெறுகின்ற ஒரு கடமையாகும். இதில் கூட்டாட்சி ஆதனங்கள் மற்றும் கூட்டாட்சி ஆதனங்களல்லாத வீடமைப்புத் திட்டங்களின் வீடுகளுக்கும் அதேபோன்று காணிகளுக்கும் அறுதி உறுதிகள் வழங்கப்படுகின்றன.
2013 ஆம் ஆண்டிற்கான உறுதிப்பத்திரம் வழங்கும் வருடாந்த இலக்கு 3000 ஆக காணப்பட்டாலும், உறுதிப்பத்திரம் வழங்குவதற்காக சட்டப்பிரிவுக்கு கிடைத்த கோவைகளின் எண்ணிக்கை 2581 ஆகும். இதனடிப்படையில் இந்த அளவுக்கு உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

### தலைமைக் காரியாலயத்தினால் மேற்கொள்ளப்படும் வழக்குகள்

1. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கட்டளைச் சட்டங்களுக்கு இணங்க நிலுவை வாடகையை உரியவர்கள் மற்றும் அத்துமீறிய நிர்மாணிப்புகளைச் செய்துள்ளவர்களுக்கு, அத்துமீறிய குடியிருப்பாளர்களுக்கு எதிராக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் தாக்கல் செய்யப்படுகின்ற வழக்குகள் மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு எதிராக ஏனைய தரப்பினர்களால் தாக்கல் செய்யப்படுகின்ற வழக்கு நடவடிக்கைகளை நெறிப்படுத்தல்.
2. சட்ட ஆலோசனைகளை வழங்கல்.
3. மனித உரிமை முறைப்பாடுகள் தொடர்பில் செயலாற்றுதல், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான ஆதனங்களை முறைகேடான விதத்தில் பயன்படுத்துகின்றவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் ஆகியவற்றின்போது தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சட்டப் பிரிவு உதவி வழங்குகின்றது.

2013 தலைமை அலுவலகத்தினால் நெறிப்படுத்தப்பட்ட வழக்குகள் பின்வருமாறு.

| நீதிமன்றம் | வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|
| உயர் நீதிமன்றம் | 11 |
| மேன்முறையீட்டு நீதிமன்றம் | 27 |
| மேல் நீதிமன்றம் | 13 |
| மாவட்ட நீதிமன்றம் | 43 |
| நீதவான் நீதிமன்றம் | 35 |
| தொழில் நியாய சபை | 05 |

**திட்டமிடல் மற்றும் முன்னேற்ற பிரிவு**

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் 2013 வருடத்திற்காக 40160 வீட்டு அலகுகளை அபிவிருத்தி செய்தல். பழைய வீடமைப்பு திட்டங்களை புதுப்பித்தலை அடிப்படையாகக்கொண்டு திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. இதன்படி ஆண்டுக்கான செயலாற்றுகை வருமாறு.

| வேலைத்திட்டம் | இலக்கு | | வளர்ச்சி | | செய்த வேலைகள் | |
|---|---|---|---|---|---|---|
| | பௌதீக | நிதி மி. ரூபா | பௌதீக | நிதி மி.ரூபா | பௌதீக | நிதி மி. ரூபா |
| வீடமைப்பு அபிவிருத்தி | 40169 | 9646.0 | 19161 | 3860.326 | 48% | 40% |
| காணித்துண்டுகளை வழங்கல் | 500 | - | 277 | - | 55% | - |
| உறுதிப்பத்திரம் வழங்கல் | 3000 | - | 2581 | - | 86% | - |
| நகமுபுரவர | 7146 | 1000.0 | 5833 | 610.913 | 82% | 61% |
| காணி நட்ட ஈடு | | 50 | - | 49,778 | - | 100% |
| தொடர்ச்சியான நிகழ்ச்சித்திட்டம் 1. வீடமைப்பு அபிவிருத்தி | 21051 | 2406.03 | 16331 | 1852.886 | 78% | 77% |

2013 ஆம் ஆண்டில் வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஏற்ப மகிழ்ச்சிகரமான வளர்ச்சி ஒன்றினை பெற்றுக்கொள்ள முடியவில்லை இதற்கு முக்கிய காரணங்களுள் நிதி போதுமானதாக காணப்படாமை, திட்டம் சம்பந்தமாக தாக்கத்தினை செலுத்தககூடிய காணி சம்பந்தமான பிரச்சினை மற்றும் வங்கி நிதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு தாமதமாகியது போன்ற விடயங்கள் பிரதானமானவையாகும்.

காணிகளை வழங்கல் எதிர்பார்க்கப்பட்ட இலக்கின் 55% வீதமாக காணப்படுகிறது. காணிகளை வழங்குவதன் மூலம் அறவிடப்படும் பணம் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்ளுக்காக ஈடுபடுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தாலும் அதன் வளர்ச்சி போதுமானதாக காணப்படாமையினால் நிதியிடலில் பெரிதும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. எவ்வாறாயினும் 19161 வீடுகள் அபிவிருத்தி செய்வதற்கு பங்களிப்புச் செய்வதற்கும், முன்னைய வருடங்களின் ஆரம்பிக்கப்பட்ட 16331 வீடுகளின் வேலைகளை பூர்த்தி செய்யவும் முடிந்துள்ளது.

❖ 2013 வருடத்தினுள் அடைந்து கொண்ட வெற்றிகள்

1. 4250 மி. ரூபா நிதி வீடமைப்புத்திட்டங்களுக்காக 5 அரச வங்கிகளில் இருந்து பெற்றுக்கொண்டது.
2. நகமுபுரவர திட்டத்தின் கீழ் புனரமைப்பு செய்யப்பட்ட சொய்சாபுர வீடமைப்பு திட்டத்தின் 1 ஆவது கட்டத்தினை மக்களிடம் கையளிக்க முடிந்தது.
3. செவண லொத்தர் சீட்டுக்களை விற்பனை செய்வதற்காக நேரடியாக தலையிட்டதன் மூலம் 142.7மி. ரூபா தொகை செவண நிதிக்கு பெற்றுக்கொள்ள முடிந்தது.

**அறவீட்டு பிரிவு**
**2013 ஆம் ஆண்டின் செயற்பாடுகள்**

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் வழங்கப்பட்டுள்ள கடன்கள், மற்றும் வாடகை வருமானங்களை திரட்டுவதற்கான மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தல்.

வேலைகள் இந்த பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது. இங்கு வருடாந்த இலக்குகளைப் பெற்றுக்கொடுத்தல். இலக்குகளை அடைந்து கொள்வதற்கு, தேவையான வழிகாட்டல்களை வழங்கல் அது தொடர்பான கொள்கைகள், தீர்மானங்கள் மற்றும் சுற்று நிருபங்களை வெளியிடல், பயிற்சி நடவடிக்கைகள் மற்றும் வாராந்த/மாதாந்த வளர்ச்சியினை கலந்தாய்வு செய்தல் மற்றும் அவற்றின் பலவீனங்களை அடையாளம் கண்டு சம்பந்தப்பட்ட தீர்வுகளை மேற்கொள்ளல் மற்றும் தேவையான உதவிகள் என்பன வழங்கப்படுகின்றன.

(1). **இலக்கினை அடைந்து கொள்ளல்**

| | வருடாந்த அளவீட்டு இலக்கு | அடைந்து கொள்ளல் | வீதம் மி. ரூ |
|---|---|---|---|
| வீடமைப்பு கடன் தவனைப்பணம் | 2974.181 | 2199.306 | 74 |
| வீட்டு வாடகை (கிராமிய மற்றும் நகர) | 217.336 | 186.444 | 86 |
| மொத்தம் | 3191.517 | 2385.750 | 75 |

1.2 அறவீட்டு பிரதிநிதிகளையும் மாவட்ட ஊழியர்களையும் பயிற்றுவிக்கும் திட்டங்கள், தென் மாகாணம், வடமத்திய மாகாணம், ஊவா மாகாணம், மத்திய மாகாணம், வட மாகாணம், வட மேல் மாகாணம்/ கேகாலை மாவட்டத்துடன் மற்றும் கிழக்கு மாகாணம் - மாவட்ட மட்டத்தில் பயிற்சி திட்டங்கள் 2013 ஆம் ஆண்டினுள் நடைடுமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

1.3 வருமான மேம்படுத்தல் நிகழ்சித்திட்டத்தினுள் கீழ் வழங்கும் பங்களிப்பினை பாராட்டும் விதத்தில் ஊழியர் பாராட்டு விழாவின் போது சிறந்த மூன்று அறவீட்டு பிரதிநிதிகளுக்கும் சிறந்த மாவட்ட காரியாலயங்களுக்கும் விருதுகள் வழங்குவதன் மூலம் பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

1.4 அறவீட்டு பிரிதிநிதிகளின் வளர்ச்சி மாதாந்தம் பௌதீக அடிப்படையிலும் நிதி அடிப்படையிலும் வளர்ச்சி பற்றிய கலந்தாய்வு செய்தல்.

1.5 அறவீட்டு பிரதிநிதிகள் பிரயாண மற்றும் நம்பிக்கை ரீதியிலான பிணை ஆகிய இரண்டு விதத்திலும் காப்புறுதி செய்தல்.

1.6 வருமான நடவடிக்கைக் குழுக்கூட்டம் சகல மாவட்ட காரியாலயங்களிலும் மாதாந்தம் நடாத்துதல் மற்றும் அதன் மூலம் இந்த நிகழ்ச்சித்திட்டம் பற்றிய பின் ஆய்வுகளை மேற்கொள்ளல்.

1.7 வீடமைப்பு கடன் பெற்றுக்கொண்ட அரச ஊழியர்கள் காணப்படும் பிரதான அரச நிறுவனங்களுடன் தொடர்பினை ஏற்படுத்தி சம்பந்தப்பட்ட தவணைப்பணத்தினை சம்பளத்திலிருந்து அறவிட்டு பெற்றுக்கொள்வதற்கும் மற்றும் மாவட்ட காரியாலயங்களுக்கு அந்த பணத்தினை மாற்றுதல். போன்ற விடயங்களில் ஈடுபடல்.

## தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை
## வருமான மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் (வீடமைப்பு கடன் மற்றும் வாடகை)

2013 மி. ரூபா.

| தொ. இல. | மாவட்டம் | வருடாந்த இலக்கு | அடையப் பெற்றவை | % |
|---|---|---|---|---|
| 1 | கொழும்பு நகர் வடக்கு | 29.350 | 32.756 | 112 |
| 2 | கொழும்பு நகர் தெற்கு | 30.066 | 31.213 | 104 |
| 3 | கொழும்பு மாவட்டம் | 80.715 | 75.362 | 93 |
| 4 | கம்பஹா | 78.850 | 73.553 | 93 |
| 5 | களுத்துறை | 151.001 | 135.113 | 89 |
| 6 | கண்டி | 62.171 | 55.299 | 89 |
| 7 | மாத்தளை | 66.147 | 58.395 | 88 |
| 8 | நுவரெலியா | 132.661 | 115.412 | 87 |
| 9 | காலி | 135.654 | 112.646 | 83 |
| 10 | மாத்தறை | 111.186 | 92.086 | 83 |
| 11 | அம்பாந்தோட்டை | 77.133 | 62.131 | 81 |
| 12 | குருநாகல் | 48.536 | 39.044 | 80 |
| 13 | புத்தளம் | 54.004 | 43.244 | 80 |
| 14 | அநுராதபுரம் | 33.596 | 26.234 | 78 |
| 15 | பொலன்னறுவ | 83.901 | 65.145 | 78 |
| 16 | பதுளை | 111.531 | 82.882 | 74 |
| 17 | மொனராகளை | 159.648 | 116.434 | 73 |
| 18 | இரத்தினபுரம் | 132.930 | 95.135 | 72 |
| 19 | கேகாலை | 181.362 | 129.110 | 71 |
| 20 | மட்டக்களப்பு | 77.999 | 53.753 | 69 |
| 21 | அம்பாறை | 129.309 | 88.800 | 69 |
| 22 | திருகோணமலை | 335.248 | 229.822 | 69 |
| 23 | யாழ்ப்பாணம் | 232.050 | 158.984 | 69 |
| 24 | மன்னார் | 115.444 | 74.813 | 65 |
| 25 | வவுனியா | 244.262 | 155.534 | 64 |
| 26 | முல்லைத்தீவு | 165.456 | 104.136 | 63 |
| 27 | கிளிநொச்சி | 131.306 | 78.714 | 60 |
| | மொத்தம் | 3191.516 | 2385.750 | 75 |


கடன் அறவீடு - 2013
2001
2002
2003
2004
2005
2006
2007
2008
2009
2010
2011
2012
2013
368.908
396.855
536.970
581.789
607.957
651.077
728.177
870.563
898.775
811.464
1159.882
1731.243
2199.306
0
500
1000
1500
2000
2500
Year

## நகர விடு கடைகள்/ தவணைப்பணம் மற்றும் வாடகை அறவீட்டு செயற்பாடுகள் 2013

| தொ. இல | மாவட்டம் | அறவிட்டது | | | 31.12.2013 திகதியில் நிலுவை |
|---|---|---|---|---|---|
| | | பாதீடு | அறவிடப்பட்டது | % | |
| 1 | பிரதான காரியாலயம் | 21.079 | 15.780 | 74.86 | 4.625 |
| 2 | கொழும்பு நகர் (வடக்கு) மாளிகாவத்தை | 43.553 | 21.962 | 50.43 | 38.602 |
| 3 | கொழும்பு நகர் (வடக்கு) மெனிங்டவுன் | 41.064 | 29.796 | 72.56 | 38.611 |
| 4. | கொழும்பு மாவட்டம் | 36.875 | 17.259 | 46.80 | 27.672 |
| 5. | கம்பஹா | 42.195 | 20.752 | 49.18 | 29.171 |
| 6. | கண்டி | 6.522 | 10.421 | 159.78 | 9.941 |
| 7. | மாத்தறை | 9.519 | 3.153 | 33.12 | 13.182 |
| 8. | கல்முனை/அம்பாறை வணிக கட்டிடங்கள் | 2.112 | 1.366 | 64.68 | 1.331 |
| | மொத்தம் | 202,919 | 120.489 | | 163.135 |

## தகவல் மற்றும் பிரசாரப்பிரிவு

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் வீடு கொள்வோர்களது தொடர்பாடல் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு தகவல் மற்றும் பிரசாரப்பிரிவு 2013 ஆம் ஆண்டில் பல்வகையான அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடக நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துகிறது.

தகவல் மற்றும் பிரசாரப்பிரிவு பின்வரும் பிரிவுகளைக்கொண்டு செயல்படுகிறது.

- தகவல் மற்றும் பிரசாரப்பிரிவு
- செவண ஊடக சேவை
- அச்சகப்பிரிவு
- வாசிகசாலை

## தகவல் மற்றும் பிரசாரப்பிரிவு

2013 ஆம் ஆண்டில் தகவல் மற்றும் பிரசாரப்பிரிவு பின்வரும் வேலைத்திட்டங்களை அமுல்படுத்தியது.

- தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் நடைமுறைப்படுத்தப்படும் ஜனசெவண வீடமைப்பு மற்றும் குடியிருப்பு அபிவிருத்தி நடவடிக்கையுடன் தொடர்புடைய தகவல் திரட்டல்களை அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் வாயிலாக மக்களுக்கு தெரியப்படுத்தல்.

- ஜனசெவண தேசிய வீடமைப்பு மற்றும் குடியிருப்பு அபிவிருத்தி நடவடிக்கையுடன் தொடர்புடைய, அதிகாரசபையினால் 25 மாவட்டங்களிலும் வீடமைப்பு திட்டங்களின் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டது. அதேபோல் நகமுபுரவர திட்டத்தின் கீழ் பழைய மாடிவீட்டு திட்டங்களைப்புனரமைக்கும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டன. இவற்றில் சில திறந்து வைக்கப்பட்டுள்ளன. இந்த சகல வைபவங்களுக்கும் தேவையான பின்வரும் சேவைகளையும் மற்றும் வசதிகளையும் இப்பிரிவு பெற்றுக்கொடுத்துள்ளது.

i. பிரச்சாரம் மற்றும் விழா திட்டமிடல்

ii. சகல விதமான அச்சுக்கு முந்திய சித்திரவேலைப்பாடுகள் (Art Work)

iii. பெயர் பலகைகள், பிரச்சார பதாகைகள், மேடை பின்னணி, தோரனங்கள், பென்னர்கள், கொடிகள், பெரிய கொடிக்கம்பங்கள்.

iv. மேடைகள், பொதுமக்கள் கூடாரம், கதிரைகள், ஒளி பெருக்கிகள், மல்டி மீடியா கருவிகள் மற்றும் திரைச்சீலைகள்.

v. பத்திரிகை விளம்பரங்கள் மற்றும் சுவரொட்டிகள்

vi. அழைப்பிதழ்கள், உரிமை வழங்கல் பத்திரங்கள், உரிமைச்சான்றிதழ்கள், உறுதிப்பத்திரங்களின் மேலுறைகள்.

vii. நினைவுச்சின்னங்கள், நினைவுத்தூபிகள்.

- 2013 ஆம் ஆண்டின் உலக குடியிருப்பு தின வைபவம் மொரட்டுவ சொய்சாபுர தொடர்மாடி வீட்டு தொகுதியில் 2013.10.07 ஆம் திகதியில் நடாத்தியது இதன் கீழ் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

i. பாடசாலை மாணவர்களுக்காக நாடு தழுவிய ரீதியில் சித்திரம் மற்றும் கட்டுரை போட்டியுடன் சுவரொட்டி போட்டி ஒன்றும் ஒழுங்கு செய்யப்பட்டது.

ii. சித்திரம், கட்டுரை, சுவரொட்டி போட்டிகளின் வெற்றியாளர்களுக்கு விருதுகள் மற்றும் சான்றிதழ்களை தயார் செய்தல்.

iii. உலக குடியிருப்பு தினத்தின் பிரதான வைபவத்தினை ஏற்பாடு செய்தல்.

iv. பிரதான வைபவம் நடைபெறும் மேடை, மேடை பின்னணி, உட்பிரவேச தோரணத்தின் நிர்மாணம் மற்றும் ஏனைய அலங்கார வேலைகள்.

- 2013 "தயட்ட கிருள" உட்பட தேசிய மட்டத்திலான கண்காட்சிகளில் பங்குபற்றல் மற்றும் அது தொடர்பான பிரச்சார வேலைகளில் ஈடுபடல்.

செவண ஊடக பிரிவு

- 2013 ஆம் ஆண்டில் செவண ஊடக சேவை, நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சு, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபை, இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம், கட்டிடதிணைக்களம் உட்பட நிறுவனங்களின் பல்வேறு பத்திரிகை விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.
- 2013 ஆம் ஆண்டின் ஊடக சேவையின் வருடாந்த மதிப்பீடு செய்யப்பட்ட இலாபம் 3.0மி. ரூபாவாகும். 2013 டிசம்பர் வரை கிடைத்த வருமானம் 11.91 மி. ரூபாவாகும். அத்துடன் இலாபம் 1.59மி. ரூபாவாகும்.
- செவண ஊடக சேவையின் சகல சம்பாத்தியங்களும் "தலைவர் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை" என்ற பெயரில் வேறு ஒரு கணக்கில் வரவு வைக்கப்படுவதுடன் இந்தப்பணம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஈடுபடுத்தப்படும்.

## செவண ஊடக சேவை

பத்திரிகை விளம்பரம்

2013 ஜனவரியிலிருந்து செவண ஊடக சேவையின் சகல வருமானம் மற்றும் இலாபம்

| மாதம் | வருமானம் (ரூ.) | இலாபம் (ரூபா.) |
|---|---|---|
| | | |
| ஜனவரி | 576,208.80 | 78,030.00 |
| பெப்ரவரி | 1,323,683.68 | 177,533.25 |
| மார்ச் | 901,920.20 | 121,215.00 |
| ஏப்ரல் | 1,685,490.37 | 226,835.82 |
| மே | 621,576.80 | 84,135.00 |
| ஜூன் | 1,013,452.00 | 136,882.50 |
| ஜூலை | 1,141,637.30 | 152,001.00 |
| ஆகஸ்ட் | 566,824.02 | 76,020.00 |
| செப்டெம்பர் | 2,240,994.62 | 292,487.63 |
| ஒக்டோபர் | 781,086.80 | 104,948.30 |
| நவம்பர் | 794,580.64 | 107,223.00 |
| டிசம்பர் | 262,086.20 | 35,265.00 |
| மொத்தம் | 11,909,541.43 | 1,592,576.50 |

2013 ஆம் ஆண்டிற்கான இலக்காக கொள்ளப்பட்ட வருமானம் 3.0 மி. ரூபாவாகும்.

2013 ஆம் ஆண்டின் ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான
வருமானம் மற்றும் இலாபம்.




**அச்சக அலகு**

- யப்பான் அரசாங்கத்திலிருந்து நன்கொடையாகக் கிடைத்த மேற்படி அச்சிடல் அலகு பலப்பிட்டி, பியகம மாதிரிக் கிராமத்தில் 1987 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. 1994 ஆம் ஆண்டில் இது மாளிகாவத்தை வீடமைப்புத் திட்டத்திற்கு எடுத்துவரப்பட்டது.
- 2002 ஜூன் மாதத்தில் மேற்படி அச்சிடல் அலகு தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தலைமை அலுவலகத்திற்கு இடமாற்றப்பட்டதோடு, தகவல், பிரசாரப் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்டது.
- தற்போது தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் அனைத்து அச்சிடல் நடவடிக்கைகளும் இதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. ஆயினும், அனைத்து அச்சிடல் தேவைகளையும் நிறைவேற்றுவதற்கு மேற்படி அச்சிடல் அலகின் இயலளவு போதியதாயில்லை.

**வாசிகசாலை**

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் வாசிகசாலை 1989 ஆம் வருடம் ஆரம்பிக்கபட்டதுடன் இதன்மூலம் பல்வேறு துறைகள் சம்பந்தமான தகவல்கள் பல வெளியிடப்பட்டு வருகிறது. தற்பொழுது இந்த வாசிகசாலையில் 8000கு அதிகமாக புத்தகங்கள் காணப்படுகின்றன. வீடமைப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்களை சேகரிப்பதற்காக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் உத்தியோகத்தர்களுக்கு உதவுதல் என்பதே இந்த வாசிகசாலையின் பிரதான நோக்கமாகக் காணப்படுகிறது.

இந்த வாசிகசாலை பிரதான வாசகர்களாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் ஊழியர்கள் மற்றும் பட்டப்படிப்பினை மேற்கொள்ளும் பல்கலைக்கழக மாணவர்களும் காணப்படுவதுடன், விஷேட அனுமதியினைப் பெற்று பாடசாலை மாணவர்களுக்கும் இந்த வாசிகசாலையை உபயோகிக்க முடியும்

வாசிகசாலையில் வீடமைப்பு தொடர்பான பல புத்தகங்கள் காணப்படுவதுடன் அது சம்பந்தமான பல

கைநூல்களும் காணப்படுகின்றன. விடயதானங்களுடன் தொடர்புடைய மற்றும் பொது அறிவினை விருத்தி செய்து கொள்வதற்கு வார வெளியீடுகளும் (விடயதானத்துடன் தொடர்புடைய, மற்றும் பொதுவான வாசித்தலுக்கானது) அரசாங்க பிரசுரங்கள் (சட்டங்கள் மற்றும் பாராளுமன்ற கூட்டத் தொடர் அறிக்கைகள் பாராளுமன்ற விவாதங்கள், வர்த்தமானி) இலங்கை மற்றும் பிரித்தானியா தர நியமம் பற்றிய ஒரு திரட்டும் காணப்படுகிறது.

இந்த வாசிகசாலையில் வீடமைப்புடன் தொடர்புடைய கட்டிடக்கலை, பொறியியல் விஞ்ஞானம், முகாமைத்துவம், அளவை மதிப்பீடு, வறுமை ஒழிப்பு, பொருளாதார சமூக விஞ்ஞானம் ஆகிய துறைகளுடன் சம்பந்தப்பட்ட உயர்தரமான புத்தகங்களைக் கொண்டு காணப்படுவதுடன் பொதுவான வாசிப்புக்கு மற்றும் பௌத்த மதம் பற்றிய கிரந்தங்களின் ஒரு திரட்டும் காணப்படுகிறது. மேலும் தெரிவு செய்யப்பட்ட சில விடயதானங்களில் பத்திரிகைகளில் இருந்து வெட்டியெடுக்கப்பட்ட துண்டுகளின் ஒரு திரட்டும் காணப்படுகிறது. இந்த வாசிகசாலையின் மூலம் அறிவினை தேடிச் செல்வதற்கான ஒரு அரிய சந்தர்ப்பம் காணப்படுகிறது.

## <u>தகவல் தொழில்நுட்பம்</u>

அரச நிறுவனங்களின் செயற்பாடுகளை தகவல் தொழில்நுட்பத்துடன் இணைத்து பொதுமக்களுக்கு துல்லியமானதும் வினைத்திறன் மிக்கதுமான சேவையொன்றைப் பெற்றுக்கொடுக்கின்ற ஈ-அரசு எண்ணக்கருவுக்கு அமைவாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையும் தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்பத்துடன் இணைத்து வருகின்றது. இப் பணியின் பொருட்டு எமது அதிகாரசபையின் தகவல் தொழில்நுட்பப் பிரிவு முழுமையான தொழில்நுட்ப மற்றும் கோட்பாட்டு ரீதியிலான அறிவை வழங்குகின்றது.

ஏற்கனவே தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைமை அலுவலகம் மற்றும் அனைத்து மாவட்ட அலுவலகங்களுக்கும் கனணிகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்கி இணையச் சேவை மற்றும் மின்னஞ்சல் போன்ற தொடர்பூட்டல் முறைகளை அறிமுகப்படுத்தியுள்ளதன் ஊடாக அவ்வலுவலகங்களின் பணிகளை வினைத்திறன்மிக்க வகையில் பேணி வருவதற்கு வசதிகளை ஏற்பாடு செய்துள்ளது. முகாமைத்துவத்திற்குத் தேவையான தகவல்கள் மற்றும் தரவுகளை உடனடியாகப் பெற்றுக்கொள்வதற்கும் அவர்களுக்கு உயர் முகாமைத்துவத்தின் மூலம் மேற்கொள்கின்ற தீர்மானங்கள் மற்றும் ஆலோசனைகளை அறிவிப்பதற்கு 26 மாவட்ட அலுவலகங்களுக்கும் தலைமை அலுவலகத்திற்கும் இடையே சிறந்ததொரு இணைப்பாக்கம் தகவல் தொழில்நுட்பத்தின் மூலம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக தொழில்நுட்பப் பிரிவின் மூலம் பின்வரும் சேவைகள் பேணிவரப்படுகின்றன.

### 01. <u>தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் இணையத் தளத்தை அபிவிருத்தி செய்து இற்றைப்படுத்தல்.</u>

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் இணையத் தளம் என்பது அதன் தொலைநோக்கு மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக ஊழியர்களுக்கும், இலங்கை மக்களுக்கும் அதேபோன்று வீடமைப்பு அபிவிருத்தி தொடர்பில் ஆர்வம் காட்டுகின்ற உலக மக்களுக்கும் சிறந்ததொரு புரிந்துணர்வை வழங்குகின்றதும் கனணித் துறையின் மூலம் செயற்படுத்தப்படுகின்றதுமான பலம் பொருந்தியதொரு ஊடகமாகும்.

கடந்த ஆண்டினுள் கனணித் துறையின் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற இணையத் தளத்தின் மூலம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைமை அலுவலகம், மாவட்ட அலுவலகங்கள் மற்றும் உப அலுவலகங்கள் பற்றிய தகவல்கள், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் சேவைகள் பற்றிய தகவல்கள், வீடமைப்புக் கடன் நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய தகவல்கள், வீடமைப்புக் கடன்கள் கிடைக்க வேண்டிய பிரசைகள் பற்றிய தகவல்கள், நிர்மாணிக்கப்பட்டு

வருகின்ற வீடமைப்புத் திட்டங்கள் பற்றிய தகவல்கள், விற்பனைக்குத் தயாராயுள்ள வீடுகள் பற்றிய தகவல்கள் மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் செய்திகள் உள்ளடங்கிய மிக முக்கியமான தகவல்களை சிங்களம் மற்றும் ஆங்கில மொழி மூலம் ஒழுங்கான விதத்தில் நாளாந்தம் இற்றைப்படுத்தி வழங்குவதற்குத் தேவையான பணிகள் கனணிப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளமையைக் குறிப்பிடலாம்.

எதிர்வரும் ஆண்டினுள் மேற்படி இணையத் தளத்தின் ஊடாக வழங்கப்படும் சேவைகளை விரிவாக்கவும், அதேபோன்று தமிழ் மொழி மூலம் அத்தகவல்களை வெளியிடுவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## 02. கனணிகள் மற்றும் வன்பொருட்களின் பராமரிப்பு

அதிகார சபையின் தலைமை அலுவலகத்திலும் மாவட்ட அலுவலகங்களிலும் கனணி வலையமைப்பாக்கல் அண்ணளவாக 80% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமாக 300 கனணிகளும், 115 அச்சு இயந்திரங்களும் 175 UPS களும் தற்போது பயன்பாட்டில் உள்ளன. உத்தரவாதக் காலத்தைக் கடந்துள்ள கனணி இயந்திரங்கள், அச்சு இயந்திரங்கள், ரூளூ கள் மற்றும் ஏனைய துணைப் பாகங்கள் மற்றும் வலையமைப்பாக்கல் தவறுகளைத் திருத்துதல் தொழில்நுட்பப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுவதோடு, உத்தரவாதக் காலத்தைத் தாண்டாத கனணிகள் மற்றும் உபகரணங்களைப் பராமரிக்கும் பொருட்டு ஏற்புடைய நிறுவனத்துடன் இணைப்பாக்கம் செய்யப்படுகின்றது.

இவற்றைத் தவிர கனணிகளின் தொழிற்பாட்டு முறைமையினதும் மென்பொருள்களினதும் பராமரிப்பு மற்றும் வைரஸ்களிலிருந்து கனணிகளையும் தரவுகளையும் பாதுகாப்பதற்கான வசதிகள் இப் பிரிவின் மூலம் வழங்கப்படுவதோடு, இச் சேவைகளை வெளிவாரி நிறுவனங்களிலிருந்து பெறுவதாயிருப்பின் அதற்காக ஏற்க நேரிடுகின்ற பெரும் செலவைக் குறைப்பதற்கு தகவல் தொழில்நுட்பப் பிரிவின் மூலம் வழங்கப்படுகின்ற சேவைகளின் காரணமாக இயலுமாயுள்ளது.

## 03. புதிய கனணி நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குதல் மற்றும் பராமரித்தல்

தலைமை அலுவலகத்தின் இடர் கடன் நிகழ்ச்சித்திட்டம், மேலதிக நேரக் கொடுப்பனவு நிகழ்ச்சித்திட்டம், தலைவரின் அலுவலகத்திற்குரிய பொதுமக்களின் வேண்டுகோள்கள் பற்றிய தகவல்களை கனணிமயப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம், வட்டியின்றி ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்ற சிறு கடன்கள், அதிகாரசபைக்குச் சொந்தமான ஆதனங்களின் முகாமைத்துவத்தை ஒழுங்கான விதத்தில் பேணிவரும் பொருட்டு செயற்படுத்தப்பட்ட காணித் தொழிற்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களுக்கான கனணி செய்நிரல்கள் உருவாக்கப்பட்டு அதன் மூலம் அதிகாரசபைக்கு சொந்தமான ஒட்டுமொத்த வீடுகள் மற்றும் காணிகளின் தரவுகளை உட்படுத்தி துல்லியமான தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடியவாறு கனணி செய்நிரல்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

சந்தைப்படுத்தல் பிரிவுக்குச் சொந்தமான முன்கூட்டிய விற்பனை வீடமைப்புத் திட்டங்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடியவாறும் அனைத்துத் தரவுகளையும் உட்புகுத்தக் கூடியவாறும் தயாரிக்கப்பட்டுள்ள கனணி செய்நிரலின் மூலம் விண்ணப்பதாரர்களின் அனைத்து விபரங்களையும் கனணிமயப்படுத்தி தேவையான தெரிவு செய்தல்களைத் துரிதமாக மேற்கொள்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

செவண ஊடகப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற அறிவித்தல்களை வெளியிடுதலுடன் தொடர்புடைய கனணி செய்நிரலை உருவாக்குதல் மற்றும் அதன் பணப் பெறுகைகளை கணக்குப் பிரிவுடன் இணைந்து பேணிவருவதற்கு இயலுமானவாறு இச்செய்நிரல் உருவாக்கப்பட்டுள்ளது.

மாவட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்திற்குத் தேவையான அனைத்துத் தரவுகளையும் மாவட்ட அலுவலகங்களிலிருந்து பெற்று தேவைக்கு ஏற்ப அந்தந்தத் தரவுகளைப் பயன்படுத்தி முன்னேற்ற

அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் அதன் பொருட்டு பல்வேறு துறைகளிலும் உள்ள தகவல் தொழில்நுட்பச் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களை நெறிப்படுத்தல் மற்றும் தேவையான இணைப்பாக்க நடவடிக்கைகள் தகவல் தொழில்நுட்பப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

## 04. வீடமைப்புக் கடன் கனணி செய்நிரல்

வடக்கு கிழக்கு உள்ளடங்குகின்றவாறு அனைத்து மாவட்ட அலுவலகங்களின் மூலமும் 1984 முதல் வழங்கப்பட்டுள்ள வீடமைப்புக் கடன்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுகின்ற உபஹார கடன்கள் பற்றிய தகவல்களை கனணிமயப்படுத்தலும் தகவல்களை இற்றைப்படுத்தும் பணிகளும் நாளாந்தம் மேற்கொள்ளப்படுகின்றது.

இதற்கமைய அனைத்து கடன்பட்டோர்களினதும் தகவல்கள், கடன் வழங்குதல்கள் மற்றும் கடன் கிடைப்பனவுகள் பற்றிய தகவல்கள் கனணிமயப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றின் தரவுப் பாதுகாப்பு நடவடிக்கைகள் கனணிப் பிரிவின் மூலம் நடைபெறுகின்றது.

தலைமை அலுவலகத்திற்கும் ஏனைய மாவட்ட அலுவலகங்களுக்கும் தேவையான கனணிகள் மற்றும் கனணித் துணைப் பாகங்களின் கொள்வனவுக்குத் தேவையான விபரங்கள் மற்றும் கொள்வனவு வழங்கல் நடவடிக்கைகளும் இப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுவதால் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான கனணிகள் மற்றும் துணைப் பாகங்களைக் கொள்வனவு செய்கின்ற பணிகள் உரிய தரக் கட்டுப்பாட்டுடன் கூடியதாக மேற்கொள்ளப்படுகின்றது.

## 05. அழைப்பு மத்திய நிலையத்தைத் தாபித்தல்

உபஹார கடன் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உள்ள கடன்பட்டோரிடமிருந்து கடனை அறவிடும் பொருட்டு நவீன வசதிகளைக் கொண்ட அழைப்பு மத்திய நிலையமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதோடு அதன் மூலம் கடன்பட்டோருடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தேவையான தகவல்களைப் பெற்றுக்கொடுப்பதற்கும் பின்ஆய்வுகளைச் செய்வதற்கும் தேவையான அனைத்து வசதிகளும் மேற்படி அழைப்பு மத்திய நிலையத்தின் ஊடாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதோடு அதற்குத் தேவையான தொழில்நுட்பப் பங்களிப்பை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 06. புதிய கடன் கனணி வேலைத்திட்டம் ஒன்றினை அறிமுகப்படுத்தல்

மேற்படி விடயங்களின் பிரகாரம் தகவல் தொழில்னுட்பப் பிரிவானது, அரச இ-அரசு முறையைக் கடைப்பிடித்து தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் அனைத்து சேவைகளையும் தகவல் தொழில்னுட்பத்தைப் பயன்படுத்தி பொதுமக்களுக்கு வினைத்திறன்மிக்க சேவையொன்றை வழங்குகின்ற நோக்கத்துடனேயே எப்போதும் முயற்சியெடுக்கின்றது. அண்மிய எதிர்காலத்தில் இதை விட தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்னுட்பத்தைப் பயன்படுத்தி உயர் சேவையொன்றை வழங்குகின்ற நோக்கத்துடன் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்று ஏற்கனவே தயாரிக்கப்பட்டு வருகின்றது.

## வரையறுக்கப்பட்ட ஓசன்வீவ் டிவலொப்மன்ற் தனியார் கம்பனி

**அறிமுகம்**

94/340/006 ஆம் இலக்க 1994.02.17 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் பம்பலப்பிட்டி டவர் கட்டடத்தின் முகாமைத்துவத்தின் பொருட்டும் ஆதன அபிவிருத்திப் பணிகளின் பொருட்டும் நகர அபிவிருத்தி அதிகார சபை, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையுடன் சேர்ந்து கூட்டுத் தொழில்முயற்சிக் கம்பனியொன்றாக தாபிக்கப்பட்டுள்ளது.

இதற்கிணங்க 1996 சனவரி 01 ஆம் திகதி ஓசன்விவ் டிவலொப்மன்ற் கம்பனி ஆரம்பிக்கப்பட்டது.

ஜனசெவன பத்து இலட்சம் வீடுகள் தேசிய கொள்கைக்கு துணைபுரிகின்ற ஒரு அரச நிறுவனம் என்ற வகையில் நம்பிக்கையையும், பொறுப்பையும், ஒரு தனியார் நிறுவனம் என்ற வகையில் வினைத்திறனையும் முன்னிலைப்படுத்தியுள்ள இக் கம்பனி இன்றளவில் வீடமைப்புச் சந்தையில் தெளிவானதொரு மாற்றத்தை ஏற்படுத்தி வீடமைப்புத் தேவையை நிறைவு செய்வதற்கு முன்வந்துள்ளது.

### தொலைநோக்கு

- இலங்கையின் ஆதன அபிவிருத்திச் சந்தையினுள் அரசாங்கத்துடன் இணைந்த ஆதன அபிவிருத்தி நிறுவனம் என்ற வகையில் பங்களிப்பை வழங்குதல்.

### செயற்பணி

- கொள்வனவாளர்களின் தேவையின் அடிப்படையில், போட்டி ரீதியிலான விலைகளின் கீழ், முழுமையான வசதிகளுடன் கூடிய, தனி வீட்டுக் கூறுகளையும் அதேபோன்று கூட்டாட்சி வீடுகளையும் வழங்கி உள்நாட்டு ஆதன அபிவிருத்திச் சந்தைக்கு உதவியளித்தல்.

### குறிக்கோள்கள்

- ஆதன அபிவிருத்தி
- ஆதன முகாமைத்துவம்
- நிர்மாணிப்பு மற்றும் பராமரிப்புப் பணிகள்
- ஆதனங்களைக் குத்தகைக்கு வழங்கல்
- காணிகள் மற்றும் ஆதனங்களை விற்பனை செய்தல்

### ஓசன்விவ் டிவலொப்மன்ற் தனியார் கம்பனியின் பணிப்பாளர் சபை

| | |
|---|---|
| திரு. ஜகத் பெரேரா | - தலைவர்/முகாமைத்துவப் பணிப்பாளர் |
| திரு. பிரஷாந்த டயஸ் | - பணிப்பாளர் |
| சுவாமி இத்தே கந்தே சத்தாதிஸ்ஸ | - பணிப்பாளர் |
| திரு. சிறிநிமல் பெரேரா | - பணிப்பாளர் |
| திரு. அத்துல டி சில்வா | - பணிப்பாளர் |
| திரு. நிஹால் பர்னாந்து | - பணிப்பாளர் |
| பணிப்பாளர் சபை செயலாளர் | - எக்கவுன்ற் சிஸ்டம் தனியார் கம்பனி |

### வரையறுக்கப்பட்ட ஓசன்விவ் டிவலொப்மன்ற் கம்பனியின் ஊழியர் குழு

2013 ஆம் ஆண்டில் கம்பனியின் மொத்த ஊழியர்குழு பின்வருமாறு.

| | |
|---|---|
| நிறைவேற்று உத்தியோகத்தர் | - 08 |
| நிறைவேற்றல்லாத உத்தியோகத்தர் | - 16 |
| பராமரிப்பு பிரிவின் உத்தியோகத்தர் | - 22 |
| | - 46 |

## முகாமைத்துவத்தின் கீழ் வளர்ச்சி பற்றிய மீளாய்வு

**டிரீம் ஹவுஸ் வீடமைப்புக் கருத்திட்டம்**

❖ இக் கருத்திட்டம் இலங்கை வாழ் மத்திய வகுப்பினரின் வீடமைப்புத் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு முக்கியமாக நடைமுறைப்படுத்தப்படுவதோடு, உள்நாட்டு வாடிக்கையாளர் போன்று வெளிநாட்டு வாடிக்கையாளர்களுக்கும் பொறுப்பான ஒரு சேவையை வழங்குகிறது. வீடொன்றைத் திட்டமிடல் முதல் நிர்மாணிப்பு பூர்த்தியடையும் வரை முழுமையான பொறுப்பை ஏற்பதற்கும், வங்கிக் கடன்களைப் பெறுவதற்குத் தேவையான வசதிகளை நிறைவேற்றுவதற்கும் கம்பனி முன்வருகின்றது. நிர்மாணிக்கப்படும் வீடுகள் பொறியியல் பிரிவின் திறமைவாய்ந்தவர்களின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது. இதுவரையில் கஹதுடுவ, மத்தேகொட ஆகிய நகரங்களை மையமாகக்கொண்டு இரு திட்டங்கள் அமுல் செய்யப்பட்டு வருகின்றன.

### ❖ கஹதுடுவ வீடமைப்புக் கருத்திட்டம்

இக் கருத்திட்டத்திற்குரிய 38 வீடுகளில் 2012 ஆம் ஆண்டுக்காக 11 வீடுகளின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு, இந்த வீடுகள் விற்பனைக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்கு மேலதிகமாக தெரிவு செய்யப்பட்ட 10 காணித்துண்டுகளின் விற்பனை நடவடிக்கைகள் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் கொண்ட இக் கருத்திட்டத்தை 2015 ஆம் ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

### ❖ ஜனசெவன தாபரிப்பு வீடமைப்புக் கருத்திட்டம்

அனைவருக்கும் ஒரு வீடு என்ற தொனிப்பொருளின் கீழ் குறைந்த வருமானம் பெறுகின்றவர்களுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள இக் கருத்திட்டத்தின் கீழ் 2012 ஆம் ஆண்டளவில் கொழும்பு மாவட்டத்தில் கடுவெல பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தில் 05 வீடுகளும், மொரட்டுவை, பிலியந்தல, மிரிஹான, பொலனறுவை மற்றும் பொல்பித்திகமவில் 05 வீடுகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டு இப் பெரும் உபசரிப்புப் பணிக்கு கம்பனி பங்களிப்புச் செய்துள்ளதோடு, கருத்திட்டத்திற்காக தற்போது ரூபா 15 மில்லியன் செலவாகியுள்ளது.

### ❖ மத்தெகொட ஹரித்த கெதல்ல வீடமைப்புத்திட்டம்

உயர் வகுப்பினரின் வீடமைப்புத் தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கில் இந்த வீடமைப்புத் திட்டம் அமுல் செய்யப்படுகிறது. இதன்படிஉத்தேச இரு மாடிகளைக்கொண்ட வீடுகளின் எண்ணிக்கை 5 ஆகும். ஆதற்கான 2013 ஆம் வருட இறுதியில் செலவு செய்யப்பட்ட தொகை 27.62 மி. ருபாவாகும். இந்த வீடமைப்பு திட்டம் 2014 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்படவுள்ளது.

## 2014 எதிர்காலத் திட்டமிடல்கள்

- வீடமைப்புக் கூறுகளின் உள்ளக அலங்கரிப்பு
- முன்புற விராந்தையின் நவீனமயப்படுத்தல்
- டவர் கட்டிடத்தின் அமைப்பு ரீதியிலானமறுசீரமைப்பு நடவடிக்கைகள்

❖ கஹதுடுவ வீடமைப்புக் கருத்திட்டத்தின் பூர்த்தி செய்யப்பட்ட 11 வீடுகள் விற்பனை செய்தல்.மற்றும் தெரிவு செய்யப்பட்ட 10 காணிகளை விற்பனை செய்தல்.

❖ மத்தெகொட வீடமைப்பு திட்டத்தின் வேலைகள் பூர்த்தி செய்தல்.

**தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மற்றும் உப கம்பனி 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான ஐந்தொகை**

| | குறிப்பு | 2013 தே.வீ.அ.அ.ச. ரூபா சதம் | 2013 திரட்சி ரூபா சதம் | 2012 திரட்சி ரூபா சதம் | 2013 பாதீடு தே.வீ.அ. அ ரூபா சதம் |
|---|---|---|---|---|---|
| (அ) சொத்துக்கள் | | | | | |
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் | | | | | |
| நடைமுறைச் சொத்துக்கள் | | | | | |
| காணியும் கட்டிடங்களும் | (02) | 564,790,605.63 | 564,790,605.63 | 591,086,885.10 | 604,775,000.00 |
| மோட்டார் வாகனங்கள் | (03) | 93,122,846.94 | 106,158,679.94 | 137,713,764.91 | 126,394,000.00 |
| தளபாடங்களும் பொருத்திகளும் | (03) | 15,629,484.47 | 16,900,322.47 | 16,185,067.18 | 20,258,000.00 |
| உபகரணங்கள் | (03) | 30,442,277.79 | 33,564,223.79 | 53,878,766.10 | 61,278,000.00 |
| ஆதனங்களிலான முதலீடுகள் | | | 1,939,000,000.00 | 1,847,000,000.00 | |
| | | 703,985,214.83 | 2,660,413,831.83 | 2,645,864,483.29 | 812,705,000.00 |
| **II அபிவிருத்திச் சொத்துக்கள்** | | | | | |
| காணி கொள்ளல் | | 536,058,236.06 | 536,058,236.06 | 311,616,159.27 | 361,215,000.00 |
| காணி அபிவிருத்தி | | 12,916,213.62 | 12,916,213.62 | | |
| வீடமைப்புக் கடன் திட்டங்கள் | (04-13) | 11,269,345,565.54 | 11,269,345,565.54 | 8,223,615,898.37 | 11,124,555,000.00 |
| கடன் திட்டங்கள் திணைக்களம் | | 1,554,885.05 | 1,554,885.05 | 1,554,885.05 | |
| வாடகைக் கொள்வனவு வீடமைப்புத் திட்டம் தே.வீ.அ.அ.ச. | | 253,058,391.22 | 253,058,391.22 | 267,288,345.39 | 240,560,000.00 |
| தவணை அடிப்படையிலான வீடு விற்பனை | | 926,426,136.42 | 926,426,136.42 | 1,028,106,690.28 | 1,089,606,000.00 |
| தவணை அடிப்படையிலான காணி விற்பனை | | 62,739,644.08 | 62,739,644.08 | 8,664,544.80 | 31,298,000.00 |
| வாடகைக் கொள்வனவு வீடமைப்புத் திட்டம் தே.வீ.திணைக்களம். | | 31,267.00 | 31,267.00 | 86,955.00 | |
| பதவிநிலையினர் வீடமைப்புத் கடன் | | 154,254,248.49 | 154,254,248.49 | 171,826,632.29 | 171,827,000.00 |
| | | 13,216,384,587.48 | 13,216,384,587.48 | 10,012,760,110.45 | 13,019,061,000.00 |
| **III முதலீடுகள் நீண்டகால** | (14- 1) | 455,653,703.34 | 335,133,334.34 | 335,133,334.34 | |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | |
| நேரடி நிர்மாணத் திட்டம் | (15) | 333,474,911.41 | 333,474,911.41 | 222,447,689.52 | 233,697,000.00 |
| இருப்பு | (16) | 60,857,682.17 | 241,211,253.17 | 168,528,246.50 | 127,647,000.00 |
| ஒப்பந்தகாரர்களுக்கான முற்பணம் | | 82,286,736.56 | 82,286,736.56 | 131,479,244.54 | 152,461,000.00 |
| கிடைக்க வேண்டிய வட்டி | (17) | 6,199,210.46 | 6,199,210.46 | 1,589,047.56 | 1,589,000.00 |
| கடன்பட்டோர் | (18) | 1,681,264,562.44 | 1,732,525,148.44 | 2,320,294,457.17 | 2,381,198,000.00 |
| வைப்புகளும் முற்பணங்களும் | (19) | 649,643,447.30 | 649,643,447.30 | 527,113,624.34 | 620,883,000.00 |
| முதலீடுகள் - குறுகியகால | (14-11) | 540,602,563.86 | 573,030,669.86 | 128,639,378.44 | 150,000,000.00 |
| காசு, வங்கி மீதிகள் தே.வீ.அ.அ.ச. தே.இ.உ.நி. | (20) | 139,062,008.66 | 145,985,059.66 | 133,702,530.73 | 3,276,000.00 |
| | | 3,493,391,122.86 | 3,764,356,436.86 | 3,633,794,218.80 | 3,670,751,000.00 |
| மொத்த சொத்துகள் | | **17,869,414,628.51** | **19,976,288,190.51** | **16,627,552,146.88** | **17,502,517,000.00** |
| (ஆ) உள்ளீட்டு வளங்கள் | | | | | |
| ஆரம்ப அனுமதித்த மூலதனம் | | **50,000,000.00** | **50,000,000.00** | **50,000,000.00** | **50,000,000.00** |
| ஆரம்ப மூலதனம் | | 40,000,000.00 | 40,000,000.00 | 40,000,000.00 | 40,000,000.00 |
| மூலதன ஒதுக்குகள்- வெளிநாட்டு உதவி | | 131,682,601.02 | 131,682,601.02 | 131,682,601.02 | 131,682,000.00 |
| - உள்நாட்டு உதவி | (21) | 18,358,581,851.68 | 18,358,581,851.68 | 17,241,346,343.26 | 18,350,745,000.00 |
| | | 18,530,264,452.70 | 18,530,264,452.70 | 17,413,028,944.28 | 18,522,427,000.00 |
| கூட்டு/கழி திரண்ட மிகை/குறை | | (11,602,434,872.72) | (10,507,754,547.72) | (10,329,999,147.66) | (11,531,071,000.00) |
| | | 6,927,829,579.98 | 8,022,509,904.98 | 7,083,029,796.62 | 6,991,356,000.00 |
| சிறு பங்கு உரிமையாளர்களின் உரிமைகள் | | - | 928,649,126.00 | 890,004,470.00 | |
| **நடைமுறையற்ற பொறுப்புகள்** | | | | | |
| பணிக்கொடை நிதியம் | | 34,854,162.38 | 34,854,162.38 | 13,568,131.44 | 25,568,000.00 |
| கடன் | (22) | 6,714,922,424.42 | 6,714,922,424.42 | 3,970,991,458.67 | 5,572,764,000.00 |
| | | 13,677,606,166.78 | 15,700,935,617.78 | 11,957,593,856.73 | 12,589,688,000.00 |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | | | |
| கடன்கொடுத்தோர் | (23) | 1,609,032,563.69 | 1,688,659,179.69 | 1,471,528,497.19 | 1,633,475,000.00 |
| கடன்களுக்கான நடைமுறைப் பொறுப்பு | (24) | 1,272,069,317.94 | 1,272,069,317.94 | 1,223,726,867.56 | 1,264,236,000.00 |
| வைப்புகள் | (25) | 780,832,414.77 | 780,832,414.77 | 1,474,591,401.56 | 1,524,377,000.00 |
| ஏற்பாடுகள் | (26) | 529,874,165.33 | 533,791,660.33 | 500,111,523.84 | 490,741,000.00 |
| | | 4,191,808,461.73 | 4,275,352,572.73 | 4,669,958,290.15 | 4,912,829,000.00 |
| மொத்த மூலதனமும் பொறுப்புகளும் | | **17,869,414,628.51** | **19,976,288,190.51** | **16,627,552,146.88** | **17,502,517,000.00** |

இந் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து சமர்ப்பிக்கும் பொறுப்பு அதிகார சபையின் பணிப்பாளர் சபையைச் சார்ந்ததாகும்.

| எஸ். ஏ. ஜயந்த சமரவீர | ஏ. டபிள்யூ. தயானந்த | ஈ. ஏ. டீ. எஸ். எதிரிசிங்ஹ |
|---|---|---|
| தலைவர் | உப தலைவர் | பிரதிப்பொதுமுகாமையாளர் (நிதி) |

## தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மற்றும் உப கம்பனி
## 2013 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச்செயற்பாடுகள் பற்றிய கூற்று

| | குறிப்பு | 2013 Rs. Cts. | 2013 Rs. Cts. | 2012 Rs. Cts. | 2012 Rs. Cts. | 2012 திரட்சி Rs. Cts. |
|---|---|---|---|---|---|---|
| **(அ) வருமானம்** | [27] | 325,157,009.06 | | 185,424,499.82 | | 284,677,000.00 |
| விற்பனைக் கிரயம் | [28] | 33,436,022.13 | | 13,362,872.42 | | - |
| **மொத்த இலாபம்** | | 291,720,986.93 | | 172,061,627.40 | | 284,677,000.00 |
| **ஏனைய வருமானம்** | | | | | | |
| வாடகை | [29] | 60,827,857.89 | | 51,042,511.55 | | 67,412,000.00 |
| வட்டி | [30] | 1,173,490,320.07 | | 846,251,159.18 | | 1,108,653,000.00 |
| வாகனம் வாடகைக்கு அமர்த்தல் | | 138,536.66 | | 695,626.11 | | 1,750,000.00 |
| பொறி இயந்திரம் வாடகைக்கு அமர்த்தல் | | 934,564.41 | | 672,451.88 | | |
| தண்டப்பணம் மற்றும் மேலதிக தண்டப்பணம் | | 15,950,035.90 | | 17,333,781.07 | | 13,798,000.00 |
| வாகன விற்பனை | | 1,321,000.50 | | 42,906.90 | | 8,924,000.00 |
| செவண ஊடக சேவை | | 1,265,628.83 | | - | | 1,500,000.00 |
| செவண உதவி பெற்றது | | 65,287,230.50 | | - | | 123,335,000.00 |
| நேரில் தொழிற்பாடுகள் | [31] | 84,100,991.16 | | 114,074,393.38 | | 133,781,000.00 |
| மீளப்பெற செலுத்தாத வைப்புகள் | [32] | 440,714.49 | | 165,250.00 | | 644,000.00 |
| | | - | | - | | |
| | | - | | - | | |
| உதவிகள்- கூட்டாதன சொத்து புதுப்பித்தல் | | 245,265,465.02 | | 228,669,752.01 | | 1,000,000,000.00 |
| | | | 1,940,743,332.36 | | 1,431,009,459.48 | 2,744,474,000.00 |
| **(ஆ) நேரில் அபிவிருத்திச் செலவுகள்** | | | | | | |
| பணிப்பாளர் சபைச் செலவுகள் | | 400,000.00 | | 380,000.00 | | 576,000.00 |
| ஊழியர் சம்பளம் | [33] | 959,263,877.22 | | 836,198,772.30 | | 1,029,515,000.00 |
| பிரயாணச் செலவுகள் | [34] | 30,591,032.94 | | 28,868,438.75 | | 34,004,000.00 |
| வழங்கல்கள் | [35] | 69,179,015.94 | | 72,306,839.64 | | 65,775,000.00 |
| பராமரிப்புச் செலவுகள் | [36] | 300,155,085.50 | | 311,429,082.02 | | 1,071,573,000.00 |
| ஒப்பந்த சேவைகள் | [37] | 73,160,139.56 | | 74,456,508.86 | | 93,411,000.00 |
| நிதிச் செலவுகள் | [38] | 602,228,413.36 | | 349,014,992.61 | | 494,679,000.00 |
| நேரில் தொழிற்பாட்டுச் செலவுகள் | [39] | 29,584,889.74 | | 19,367,371.51 | | 39,132,000.00 |
| நிலையான சொத்துக்களுக்கான தேய்மானம் | | 43,495,888.66 | | 41,518,198.86 | | 90,327,000.00 |
| வருமானத்தை விஞ்சிய செவண ஊடக வருமானம் | | - | | 874,715.40 | | - |
| செவண உதவி செலவுகள் | | 65,287,230.50 | | - | | 123,335,000.00 |
| | | | 2,173,345,573.42 | | 1,734,414,919.95 | 3,042,327,000.00 |
| (இ) கால கட்டத்திற்கான மிகை/குறை (யு.டீ) | | | **(232,602,241.06)** | | **(303,405,460.47)** | **(297,853,000.00)** |
| (ஈ) திரண்ட மிகை/குறை - மு. கொ. வ/து | | | (11,369,832,631.66) | | (11,066,427,171.19) | - |
| (ஈ) திரண்ட மிகை/குறை - மு. கொ. செ/து | | | **(11,602,434,872.72)** | | **(11,369,832,631.66)** | **(297,853,000.00)** |

## கணக்கீட்டுக் கொள்கைகள்

### குறிப்பு 1

2013.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

1. அங்கீகரிக்கப்பட்ட அடிப்படைக் கணக்குகள்

1.11 கணக்குகள்

அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகள் கடைப்பிடிக்கப்பட்டு கணக்குக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அத்துடன் இலங்கை கணக்கீட்டு நியமக் குழுவினால் இலங்கையின் அரச துறையில் கணக்கீட்டு நியமங்கள் கடைபிடிக்கப்பட்டுள்ளது.

1.12 ஐந்தொகை தயாரிக்கப்பட்டதன் பின்னர் நடைபெற்ற கொடுக்கல் வாங்கல்கள்

ஐந்தொகை திகதிக்கு பின்னர் நடைபெற்ற அனைத்து அளவினதான கொடுக்கல் வாங்கல்களும் கவனத்திற்கொள்ளப்பட்டிருந்ததோடு நிதிக் கூற்றுக்களில் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

1.13 தொடர்ந்து நிலைத்திருக்கின்றதான கொள்கை

நிதிக் கூற்று தொடர்ந்து நிலைத்திருக்கின்றதான கொள்கையின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்ததோடு, அதன் மூலம் பொதுவாக செயலாற்றிக்கொண்டு செல்கின்றபோது சொத்துக்களை விற்றுப் பெறுவதன் மூலம் பொறுப்புக்களைத் தீர்ப்பதற்கு அதிகார சபைக்கு இயலுமாயிருக்கும்.

2. சொத்துக்களும் அவற்றை மதிப்பிடுகின்ற அடிப்படையும்

1.1 சொத்துக்கள், இயந்திர உபகரணங்கள்

நிலையான சொத்துக்கள் குறித்த செலவிலிருந்து திரண்ட தேய்மானம் கழிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ளது. மேற்படி சொத்துக்களைப் பயன்படுத்துவதற்குப் பொருத்தமான நிலைமைக்கு கொண்டு வருவதற்காக ஏற்கப்பட்ட செலவுகளுடன் கொள்வனவுச் செலவு குறிப்பிடப்பட்டுள்ளது.

1.1.1 தேய்மானமளித்தல்

கொள்வனவு செய்யப்பட்ட, நிர்மாணிக்கப்பட்ட அல்லது கொள்ளப்பட்ட ஆண்டிலிருந்து தேய்மானமளித்தல் மேற்கொள்ளப்படுகின்றது.

2.2.2 தேய்மான ஏற்பாடுகள் செலவின் அடிப்படையில் பின்வருமாறான வீதங்களின்படி மேற்கொள்ளப் படுகின்றன. (தேய்மானமளித்தல் வருடாந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதால் அரை ஆண்டுக் கணக்குகளில் தேய்மானமளித்தல் காட்டப்படவில்லை.)

| | | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை |
|---|---|---|
| 2.2.2.1 | காணியும் கட்டடங்களும் | செலவின அடிப்படையில் 2.5% |
| 2.2.2.2 | மரத் தளபாடங்கள், பொருத்துகைகள், பகுதியளவு, நிரந்தர நிர்மாணிப்புகள் | செலவின அடிப்படையில் 20% |
| 2.2.2.3 | இயந்திரங்கள், உபகரணங்கள் | செலவின அடிப்படையில் 20% |
| 2.2.2.4 | வாகனங்கள் | செலவின அடிப்படையில் 20% |

தலைமை அலுவலகத்திலும் மாவட்ட அலுவலகங்களிலும் முழுமையாக தேய்மானமளிக்கப்பட்ட வாகனங்களுக்கு பெயரளவு பெறுமதியாக ரூபா 1000/- நிலையானதொரு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

3. கையிருப்பு

3.1 இறுதிக் கையிருப்பு பௌதீக உறுதிப்படுத்தலை அடிப்படையாகக் கொண்டுள்ளதோடு முதலாவதாகப் பெறப்பட்ட பண்டங்களை முதலாவதாக கையுதிர்க்கின்ற முறையில் மதிப்பிடப்பட்டுள்ளது.

3.2 காணாமற்போதல்கள் மற்றும் சேதங்கள் உண்மைச் செலவின் அடிப்படையில் அல்லது பதிலீட்டின் பெறுமதி ஆகிய இரண்டில் அதிக பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடப்படுகின்றது.

3.3 பூர்த்தி செய்யப்பட்ட வீடுகளின் பெறுமதி செலவு அல்லது தேறிய விற்றுப் பெற்ற பெறுமதி ஆகிய இரண்டில் குறைந்த பெறுமதியின் அடிப்படையில் கையிருப்புக்கு மாற்றப்படுகின்றது.

4. பொறுப்புகள் மற்றும் ஒதுக்குதல்கள்

4.1 ஐந்தொகையில் நடைமுறைப் பொறுப்புகளாக வகைப்படுத்தப்பட்டுள்ள பொறுப்புகள் வேண்டப்படுகின்றபோது செலுத்தப்பட வேண்டிய மற்றும் ஐந்தொகைத் திகதியிலிருந்து ஒரு ஆண்டு காலத்தினுள் செலுத்தப்பட வேண்டியவைகளாகும்.

5. எதிர்பாரா பொறுப்புகள்

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 10 இன் பிரகாரம் பின்வரும் பொறுப்புகள் வெளிப்படுத்தப்படுகின்றன.

5.1 தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு எதிராக 30 வழக்குகள் விசாரணை செய்யப்பட்டு வருவதோடு, மதிப்பிடப்பட்ட நட்டஈட்டுத் தொகை ரூபா 62.456 மில்லியனாகும்.

6. வருமான அறிக்கை

ை.1 வாடகை

வாடகை வீடமைப்புத் திட்டங்களின் மூலம் கிடைக்கின்ற வாடகை மீண்டுவரும் வருமானமாகக் கருதப்படுகின்றது. இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 18 இன் பிரகாரம் மேற்படி சொத்துக்களுக்கு தேய்மானமளிக்கப்படுகின்றது. வாடகை வீடுகளை விற்பனை செய்வதற்கு கொள்கை ரீதியிலான தீர்மானமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ை.2 அறவிடமுடியா மற்றும் ஐயக் கடன் ஒதுக்குதல்கள்

கணக்குகளில் பின்வரும் ஒதுக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

6.3 ஒதுக்குதல் சதவீதம் கடன் ஆயுள் பகுப்பாய்வுக்கமைய வழங்கப்பட்டுள்ளது.

| கடன்பட்டோர் ஆயுள் பகுப்பாய்வு | சதவீதம் |
|---|---|
| 0 - 24 மாதங்கள் | 10% |
| 24 - 36 மாதங்கள் | 20% |
| 36 - 48 மாதங்கள் | 30% |
| 48 - 60 மாதங்கள் | 50% |
| 60 மாதங்களுக்கு மேல் | 100% |

6.4 பின்வரும் கடன்பட்டோருக்காக அறவிடமுடியா மற்றும் ஐயக் கடன்களுக்கான ஒதுக்குதல்கள் கடன் தொகையின் காலத்தைக் கவனத்திற்கொள்ளாது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| தவணை அடிப்படையிலான வீடு விற்பனை | 20% |
| நகர/கிராம வீட்டு வாடகை | 20% |
| காணி கடன்பட்டோர் | 20% |
| சிறு கடன்பட்டோர் (CGR திட்டம் இல்லாமல்) | 20% |

மாளிகாவத்தை புகையிரதக் கருத்திட்டத்திலிருந்து பெறப்படும் பணத்திலிருந்து காணி நட்டஈடுகளுக்கான தீர்ப்பனவுகள் மேற்கொள்ளப்படும்.

இதன் காரணமாக இதற்கான நிதி ஏற்பாடுகள் தயார் செய்யப்படவில்லை.

1.5 வட்டிக் கொடுப்பனவுகள்

தாமதமான காணி நட்டஈட்டிற்கான வட்டிக் கொடுப்பனவுகள் மூலதனச் செலவாகக் கருதப்படும்.

1.6 மேந்தலைகளை வேறாக்கல்

நகர வீடமைப்பு நிர்மாணிப்பு நிகழ்ச்சித் திட்டத்தில் முன்கூட்டிய விற்பனை, மீள்தாபிப்பு மற்றும் கரையோரக் கருத்திட்டங்கள் தொடர்பில் செலவிடப்பட்டுள்ள நேரடி பொதுக் கருமங்களுக்கான செலவுகள் 1997 ஆம் ஆண்டு முதல் உண்மைச் செலவு அடிப்படையில் கருத்திட்டங்களில் உள்ளடக்கப்பட்டன.

1.7 அறவீட்டுச் செலவுகள்

வினைத்திறன்மிக்கதாக தொழில்முயற்சியையும் மூலதனச் சொத்துக்களையும் பேணிவரும் பொருட்டு ஈடுபடுத்தப்பட்டுள்ள அனைத்துச் செலவுகளும் ஆண்டின் இலாபத்திற்கு சீர்செய்யப்படுகின்றன.

1.8 மூலதனச் செலவுகள்

நிலையான சொத்துக்களைக் கொள்ளல், விஸ்தரித்தல் மற்றும் மேம்படுத்தலின் பொருட்டு ஏற்கப்பட்ட செலவுகள் மூலதனச் செலவுகளாகக் கருதப்படுகின்றன.

7. வரியிடல்

ஊள்நாட்டு இறைவரிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகளின் பிரகாரம் வரி கணிப்பிடப்படுகின்றது.

வருமானத்திலிருந்து மூலதனப் பெறுகைகளுக்கான சீர்செய்தல்கள் திருத்தப்பட்டதன் பின்னர் வரி செலுத்துகின்ற பொறுப்பு அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

8. வீடு விற்பனை

கணக்கீட்டு நோக்கங்களுக்காக, வீடொன்றை உடன் காசுக்கு விற்பனை செய்கின்றபோது பணம் கிடைத்த திகதி அந்த வீட்டை விற்பனை செய்த திகதியாகக் கருதப்படும். வீடு வாடகை அடிப்படையில் விற்பனை செய்யப்பட்டிருப்பின், உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்ட திகதி அந்த வீடு விற்பனை செய்யப்பட்ட திகதியாகக் கருதப்படும்.

8.1 வீடுகளின் விற்பனை விலையைத் தீர்மானித்தல் மற்றும் கணக்குப் பதிவு

8.1.1 வீட்டுக் கூறின் விற்பனை விலையானது குறைந்தபட்சம் அந்த வீட்டிற்கான செலவை உள்ளடக்கக்கூடியவாறு தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

8.1.2 ஒரு வீட்டிற்கான செலவு தீர்மானிக்கப்படுகின்றபோது, காணிக்கான செலவு, நிர்மாணிப்பு மற்றும் பொதுக் கருமங்களுக்கான செலவுகள் தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும். அதன் மொத்தச் செலவில் நிர்மாணிப்புச் செலவு மற்றும் இலாபத்தின் பொருட்டு பொருத்தமானதொரு சதவீதம் தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

8.1.3 அரச வீடமைப்புக் கொள்கைக்கு அமைய அல்லது வேறேதேனும் விசேட காரணங்களின் அடிப்படையில் செலவை விடக் குறைந்த விலையில் ஒரு வீட்டை விற்பனை செய்வதற்கு நேரிடுகின்றபோது அவ்வாறு குறைவாயுள்ள தொகையை பொதுத் திறைசேரியிலிருந்து பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

9. வாடகை அடிப்படையில் வீடு விற்பனை

வாடகை அடிப்படையில் கையுதிர்க்கப்பட்ட வீடுகளின் பெறுமதி அபிவிருத்திச் சொத்துக்களாக கணக்குகளில் காட்டப்பட்டுள்ளதோடு கிடைக்கப்பெற்ற தவணைத் தொகைகள் அபிவிருத்திச் சொத்துக்களுக்கு எதிராக சீர்செய்யப்பட்டுள்ளன.

10. வீடமைப்பு நோக்கங்களுக்காக காணி கொள்ளல்

10.1.1 வீடமைப்பு நோக்கங்களுக்காக கொள்ளப்பட்டுள்ள காணிகளுக்கு நட்டஈடு செலுத்தப்படுகின்ற சந்தர்ப்பத்தில், நட்டஈட்டுத் தொகையின் பெறுமதி மற்றும் கொள்ளலின்போது ஏற்கப்பட்ட அடிப்படைச் செலவு கணக்குகளில் காட்டப்பபடும். நட்டஈட்டுத் தொகை செலுத்தப்படாத சந்தர்ப்பங்களில் மதிப்பிடப்பட்ட அப்போதைக்குள்ள பெறுமதி மற்றும் கொள்ளலின்போது ஏற்கப்பட்ட அடிப்படைச் செலவைக் கவனத்திற்கொண்டு கணக்குகளில் காட்டப்படும்.

10.1.2 நிதி ஆண்டின் இறுதியாகின்றபோது கொள்ளல் நடவடிக்கைகள் பூர்த்தியாகாதிருந்த காணிகள் தொடர்பில், காணி கொள்ளலுக்காக ஏற்கப்பட்ட செலவு காணியின் பெறுமதியிலிருந்து பிரித்துக் காட்டப்படுகின்றது

10.1.3 2013 ஆம் ஆண்டு முதல் மேற்படி 10.1.1 ஆம் இலக்க பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள காணிகளின் மதிப்பிடப்பட்ட தற்போதைய விலை காணி கொள்ளலுக்காக உருவாக்கப்பட்ட ஒதுக்கு நிதியத்திற்கு மாற்றப்படும்.

10.2 காணி விற்பனை விலையைத் தீர்மானித்தலும் கணக்குப் பதிவும்

10.2.1 காணி கொள்ளல்/கொள்வனவுக்காக செலுத்தப்பட்ட தொகை/நட்டஈடு எதுவாக இருப்பினும், அச்சந்தர்ப்பத்தில் உள்ள விலையைக் கவனத்திற்கொண்டு காணியின் விலை தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

10.2.2 அரச கொள்கைத் தீர்மானங்களை அடிப்படையாகக் கொண்டு சலுகை அடிப்படையில் விலை தீர்மானிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில், அந் நட்டம் பொதுத் திறைசேரியினால் மீளளிப்புச் செய்யப்படும். அந் நட்டத்தை பொதுத் திறைசேரியிலிருந்து பெறுவதற்கு முடியாதிருப்பின் காணி கொள்ளலுக்கான ஒதுக்கு நிதியத்திலிருந்து தீர்க்கப்படுதல் வேண்டும்.

10.3 தவணை அடிப்படையில் வீடு/காணி விற்பனை

10.3.1 நீண்ட கால கடன் அடிப்படையில் ஒரு வீடு/காணி விற்பனை செய்யப்படுகின்றபோது உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்ட திகதி வீட்டின்/காணியின் விற்பனைத் திகதியாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதோடு, அதற்கிணங்க கணக்கில் இடுதல் வேண்டும்.

10.3.2 மேற்படி 10.3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையின் பிரகாரம் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியை சொத்துக்கள் கணக்கிலிருந்து வீடு/காணி விற்பனைக் கணக்குக்கு மாற்றுதல் வேண்டும்.

11. நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற வேலைகளின் பெறுமதியை மதிப்பிடல்

எந்தவொரு கணக்கு ஆண்டிலும், ஆண்டின் இறுதியாகின்றபோது நிர்மாணிப்புக் கருத்திட்டங்கள் தொடர்பில் தீர்க்கப்பட்ட அல்லது தீர்க்கப்படுவதற்குள்ள கட்டணப் பட்டியல்கள் ''நடைபெற்று வருகின்ற வேலைகளாக'' கருதப்படுதல் வேண்டும். ஆதலால், நிர்மாணிப்புக் கருத்திட்டக் கணக்கிலிருந்து வீட்டுக் கையிருப்புக் கணக்குக்கு மாற்றப்பட்ட பெறுமதிகளைத் தவிர எஞ்சிய பெறுமதிகள் ஆண்டின் இறுதியில் நடைபெற்று வருகின்ற வேலைகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

12. மூலதன நிதியங்கள்

மூலதன நிதியச் செலவுகள், ஏற்புடைய அபிவிருத்திப் பணியின்/கருத்திட்டத்தின் கணக்குக்கு சீர்செய்யப்படுதல் வேண்டுமென்பதோடு பொது வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளுக்காக ஏற்கப்பட்ட செலவுகள் மூலதனக் கணக்குக்கு சீர்செய்யப்பட்டு பதிவழிக்கப்படுவதோடு அவ்வாறில்லாத சந்தர்ப்பத்தில் சொத்துக்களாகக் கருதப்படும்.

13. பொது

13.1 தேசிய வீடமைப்புத் திணைக்களம்

தேசிய வீடமைப்புத் திணைக்களத்தின் வேலைகள் (1990 முதல்) 1989 செப்தெம்பர் 13 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டன.

13.2 காணாமற்போன வாகனங்கள்

கடந்த ஆண்டுகளில் பின்வரும் வாகனங்கள் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் காணாமற்போயுள்ளன.

| விடய எண்ணிக்கை | விபரம் | கொள்வனவு விலை (ரூபா) |
|---|---|---|
| 08 | மோட்டார் சைக்கிள் | 400,000.00 |
| 03 | மோட்டார் சைக்கிள் | 140,000.00 |
| 01 | கெப் வண்டி | 800,000.00 |
| 01 | கார் வண்டிகள் | 600,000.00 |
| 13 | | 1940,000.00 |

குறித்த ஆவணங்கள் இன்மையால் கணக்குகளில் கணக்கிணக்கம் செய்ய முடியாதுள்ளது.

13.3 டாலி வீதியில் 186.5 பேர்ச்சஸ் விஸ்தீரணம் கொண்ட காணி துண்டு ஒன்று L&T இன்பராஸ்ரக்ச புரொஜெக்ட் வங்கா (தனியார்) கம்பனிக்கு கலப்பு அபிவிருத்தி திட்டம் ஒன்றுக்காக விற்கப்பட்டுள்ளது.

மொத்தப் பெறுமதி 812 மி. ரூபாவில் 100 மி.ரூபா கொள்வனவாளரினால் வைப்புச் செய்யப்பட்டுள்ளது. மிகுதித் தொகையான 712 மி. ரூபா கால கெதியில் பெற்றுக்கொள்ள வேண்டும்.

13.4 கூட்டு கணக்குகள் - வரையறுக்கப்பட்ட OVDC

வரையறுக்கப்பட்ட OVDC கம்பனியின் 31 டிசம்பர் 2013 ஆம் ஆண்டுக்கான கணக்குகள் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை கணக்குகளுடன் ஒன்றினைக்கப்பட்டுள்ளன. ஏனெனில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையே பிரதான பங்குதாரராகும். வரையறுக்கப்பட்ட OVDC கம்பனியின் நிதி வருடம் 01 ஏப்ரல் தொடக்கம் 31 மார்ச் வரையிலான காலகட்டம் 2013 ஆம் ஆண்டிலிருந்து 01 ஜனவரி தொடக்கம் 31 டிசம்பர் வரையிலான கால கட்டமாக மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. வரையறுக்கப்பட்ட OVDC நிறுவனத்தின் கணக்காய்வு செய்யப்பட்ட 31 டிசம்பரில் முடிவடைந்த நிதிக்கூற்றுக்கள் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களுடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன.

13.5 துணைக் கம்பனிகள் - ரீல்

1999 ஆம் ஆண்டில் ரீல் (தனியார்) கம்பனியில் ரூபா 5 மில்லியன் முதலீடு செய்யப்பட்டது. முதலீட்டின் சதவீதம் 35.71% ஆகும். ரீல் கம்பனியின் பங்குகள் சார்பில் அதிகார சபைக்குக் கிடைக்க வேண்டிய பங்கிலாபம் கிடைத்திருக்கவில்லை.

ரீல் (தனியார்) கம்பனியை ஒழிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

குறிப்பு (02) - காணியும் கட்டிடங்களும்

| விபரம் | கிரயம் | | | | | | | பெறுமானத் தேய்வு | | | | | 2013.12.31 உள்ளவாறு பதிவழிக்கப்பட்ட பெறுமதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2013.01.01 இல் உள்ளவாறு மீதி | | ஆண்டினுள் சேகரிப்புகள் | சீராக்கல்கள் | ஆண்டினுள் நீக்கப்பட்டவை | 2013.12.31 இல் உள்ளவாறு மீதி | | 2013.01.01 உள்ளவாறு ஏற்பாடுகள் | ஆண்டுக்கான பெறுமானத் தேய்வு | நீக்கப்பட்ட விடயம் திரண்ட மீதி | சீராக்கல் | 2013.12.31 உள்ளவாறு மீதி | |
| | காணி | கட்டிடம் | | | | காணி | கட்டிடம் | | | | | | |
| பாசன்ஸ் வீதி | | 50,434,491.63 | | | | | 50,434,491.63 | 40,272,978.76 | 1,260,862.29 | | | 41,533,841.05 | 8,900,650.58 |
| கண்டி செயலகம் | | 8,509,312.85 | | | | | 8,509,312.85 | 6,965,094.70 | 212,732.82 | | | 7,177,827.53 | 1,331,485.33 |
| கண்டி சுற்றுலா விடுதி | | 3,031,169.52 | | | | | 3,031,169.52 | 2,370,267.67 | 75,779.24 | | | 2,446,046.91 | 585,122.61 |
| கல்முனை சுற்றுலா விடுதி | | 4,554,220.42 | | | | | 4,554,220.42 | 3,299,685.26 | 113,855.51 | | | 3,413,540.77 | 1,140,679.65 |
| பொலனறுவை மாவட்ட அலுவலகம் | | 419,737.99 | | | | | 419,737.99 | 229,442.38 | 10,493.45 | | | 239,935.83 | 179,802.16 |
| மொனராகலை மாவட்ட அலுவலகம் | | 4,785.00 | | | | | 4,785.00 | 3,589.03 | 119.63 | | | 3,708.65 | 1,076.35 |
| கதிர்காமம் சுற்றுலா விடுதி | | 221,602.61 | | | | | 221,602.61 | 146,178.46 | 5,540.07 | | | 151,718.52 | 69,884.09 |
| அனுராதபுரம் மாவட்ட அலுவலகம் | | 830,724.80 | | | | | 830,724.80 | 581,507.23 | 20,768.12 | | | 602,275.35 | 228,449.45 |
| கம்பஹா மாவட்ட அலுவலகம் | | 6,307,579.67 | | | | | 6,307,579.67 | 1,243,933.38 | 157,689.49 | | | 1,401,622.87 | 4,905,956.80 |
| கிளிநொச்சி மாவட்ட அலுவலகம் | | 1,381,010.66 | 4,706,278.70 | | | | 6,087,289.36 | 276,202.13 | 34,525.27 | | | 310,727.40 | 5,776,561.96 |
| இரத்தினபுரி மாவட்ட அலுவலகம் | | 274,189.92 | | | | | 274,189.92 | 54,837.98 | 6,854.75 | | | 61,692.73 | 212,497.19 |
| இரத்தினபுரி செத்சிசில இல்லம் | | 92,785.50 | | | | | 92,785.50 | 11,598.19 | 2,319.64 | | | 13,917.83 | 78,867.67 |
| ஏனைய கட்டிடங்கள் | | 614,295.90 | | | | | 614,295.90 | 240,407.40 | 15,357.40 | | | 255,764.80 | 358,531.10 |
| கட்டிடங்கள் | | 22,743,500.00 | | | | | 22,743,500.00 | 13,062,712.00 | 568,587.50 | | | 13,631,299.50 | 9,112,200.50 |
| மாத்தறை மாவட்ட அலுவலகம் | | 7,831,027.23 | | | | | 7,831,027.23 | 1,509,682.75 | 195,775.68 | | | 1,705,458.43 | 6,125,568.80 |
| மட்டக்களப்பு மாவட்ட அலுவலகம் | | 9,014,301.09 | | | | | 9,014,301.09 | - | 225,357.53 | | | 225,357.53 | 8,788,943.56 |
| திருகோணமலை மாவட்ட அலுவலகம் | | 168,773.54 | | | | | 168,773.54 | 75,948.10 | 4,219.34 | | | 80,167.44 | 88,606.10 |
| வவுனியா மாவட்ட அலுவலகம் | | 5,095,202.38 | | | | | 5,095,202.38 | 320,894.22 | 127,380.06 | | | 448,274.28 | 4,646,928.10 |
| தே.வீ.அ. திணைக்களத்தின் கட்டிடங்கள் | | 3,742,246.85 | | | | | 3,742,246.85 | 2,151,791.06 | 93,556.17 | | | 2,245,347.23 | 1,496,899.62 |
| ஹன்தானை சுற்றுலா விடுதி | 2,520.00 | 1,109,930.00 | | | | 2,520.00 | 1,109,930.00 | 638,398.96 | 27,748.25 | | | 666,147.21 | 446,302.79 |
| அம்பாறை மாவட்ட அலுவலகம் | | 366,148.50 | | | | | 366,148.50 | 146,459.39 | 9,153.71 | | | 155,613.10 | 210,535.40 |
| பசவன்குளம் சுற்றுலா விடுதி | | 240,000.00 | | | | | 240,000.00 | 84,000.00 | 6,000.00 | | | 90,000.00 | 150,000.00 |
| பதுளை அலுவலகக் கட்டிடம் | | 1,222,000.00 | | | | | 1,222,000.00 | 427,700.00 | 30,550.00 | | | 458,250.00 | 763,750.00 |
| சனசவி நிலையம் - கண்டி | | 2,465,734.09 | | | | | 2,465,734.09 | 863,007.03 | 61,643.35 | | | 924,650.38 | 1,541,083.71 |
| அம்பாந்தோட்டை மாவட்ட அலுவலகம் | | 2,040,350.74 | | | | | 2,040,350.74 | 671,297.33 | 51,008.77 | | | 722,306.10 | 1,318,044.64 |
| 5000 வீடுகள் திட்டத்தின் வாடகைக் கட்டிடம் | | 172,612,505.61 | | | | | 172,612,505.61 | 71,574,007.18 | 4,315,312.64 | | | 75,889,319.82 | 96,723,185.79 |
| பத்திலட்சம் நகர வீடுகள் திட்டத்தின் வாடகை | 55,317,190.10 | 837,824,186.87 | | | | 55,317,190.10 | 837,824,186.87 | 525,062,618.16 | 20,945,604.67 | | | 546,008,222.83 | 347,133,154.14 |
| தேசிய வீடமைப்புத் திணைக்களத்தின் வாடகை வீடுகள் | - | 13,861,809.74 | | | | - | 13,861,809.74 | 7,884,544.09 | 346,545.24 | | | 8,231,089.33 | 5,630,720.41 |
| கரையோர வாடகை வீடுகள் | - | 61,185,579.02 | | | | - | 61,185,579.02 | 22,050,371.95 | 1,529,639.48 | | | 23,580,011.42 | 37,605,567.60 |
| ஜல்தர வீடமைப்புத் திட்டத்திற்கான பொழுதுபோக்கு நிலையம் | - | 9,465,234.88 | | | | - | 9,465,234.88 | 1,183,154.36 | 236,630.87 | | | 1,419,785.23 | 8,045,449.65 |
| கேகாலை மாவட்ட அலுவலகம் | - | 12,437,889.47 | | | | - | 12,437,889.47 | 932,842.33 | 310,947.24 | | | 1,243,789.57 | 11,194,099.90 |
| **மொத்தம்** | **55,319,710.10** | **1,240,102,326.48** | **4,706,278.70** | **-** | **-** | **55,319,710.10** | **1,244,808,605.18** | **704,335,151.48** | **31,002,558.16** | **-** | **-** | **735,337,709.65** | **564,790,605.63** |

**குறிப்பு (03) - காணியும்** தளபாடங்களும் பொருத்திகளும் உபகரணங்கள்

| நிலையான சொத்துக்கள் வகை | கிரயம் | | | | பெறுமானத் தேய்வு | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2013.01.01 உள்ளவாறு மீதி | ஆண்டினுள் சேர்க்கைகள் | ஆண்டினுள் நீக்குதல்கள் சீராக்கல்கள் | 2013.12.31 உள்ளவாறு மீதி | 2013.01.01 உள்ளவாறு ஏற்பாடுகள் | ஆண்டுக்கான அறவீடுகள் | நீக்கப்பட்ட விடயங்கள் திரண்ட பெறுமானத் தேய்வு | 2013.12.31 உள்ளவாறு மீதி | 2013.12.31 உள்ளவாறு பதிவழிக்கப்பட்ட பெறுமதி |
| 01 மோட்டார் வாகனங்கள் | | | | | | | | | |
| 1 தே.வீ.அ.அ.ச. | 309,311,308.54 | - | 2,337,237.80 | 306,974,070.74 | 190,374,861.63 | 25,809,599.97 | 2,333,237.80 | 213,851,223.80 | 93,122,846.94 |
| மொத்தம் | 309,311,308.54 | - | 2,337,237.80 | 306,974,070.74 | 190,374,861.63 | 25,809,599.97 | 2,333,237.80 | 213,851,223.80 | 93,122,846.94 |
| 02 தளபாட பொருத்துகள் அரை நிலையான அமைப்புகள் | | | | | | | | | |
| 2 தே.வீ.அ.அ.ச. | 42,746,270.34 | 4,204,978.68 | 685.00 | 46,950,564.02 | 27,944,759.16 | 3,376,819.61 | 499.22 | 31,321,079.55 | 15,629,484.47 |
| மொத்தம் | 42,746,270.34 | 4,204,978.68 | 685.00 | 46,950,564.02 | 27,944,759.16 | 3,376,819.61 | 499.22 | 31,321,079.55 | 15,629,484.47 |
| 03 உபகரணங்கள் | | | | | | | | | |
| 3 தே.வீ.அ.அ.ச. | 128,282,920.95 | 13,315,244.17 | - | 141,598,165.12 | 102,060,189.85 | 9,095,697.48 | - | 111,155,887.33 | 30,442,277.79 |
| மொத்தம் | **128,282,920.95** | **13,315,244.17** | **-** | **141,598,165.12** | **102,060,189.85** | **9,095,697.48** | **-** | **111,155,887.33** | **30,442,277.79** |

## குறிப்பு (04) - பத்திலட்சம் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் கடன்கள்

ரூபா சதம்

| மாவட்டம் | மொத்த வழங்கல் 01.01.2013 | மீதி 01.01.2013 | சீராக்கல்கள் | பெற வேண்டியுள்ள அறவிட வேண்டியுள்ள தொகை | 2013.12.31 உள்ளவாறு மீதி |
|---|---|---|---|---|---|
| கொழும்பு நகரம் (வடக்கு) | 68,398,472.46 | - | - | - | - |
| கொழும்பு நகரம் (தெற்கு) | 9,299,410.99 | - | - | - | - |
| கொழும்பு மாவட்ட அலுவலகம் | 95,175,604.29 | - | - | - | - |
| கம்பஹா | 106,663,304.47 | - | - | - | - |
| களுத்துறை | 90,390,550.35 | | - | | - |
| கண்டி | 103,901,237.18 | - | - | - | - |
| மாத்தளை | 65,779,630.45 | - | - | - | - |
| நுவரெலியா | 49,737,467.53 | - | - | - | - |
| காலி | 84,230,288.68 | - | - | - | - |
| மாத்தறை | 109,863,684.80 | - | - | - | - |
| அம்பாந்தோட்டை | 75,122,124.73 | - | - | - | - |
| யாழ்ப்பாணம் | 32,954,399.04 | - | - | - | - |
| மன்னார் | 9,795,015.25 | - | - | - | - |
| மாங்குளம் | 7,285,389.27 | - | - | - | - |
| மட்டக்களப்பு | 37,495,673.40 | - | - | - | - |
| அம்பாறை | 45,589,368.50 | - | - | - | - |
| திருகோணமலை | 27,488,459.00 | - | - | - | - |
| குருணாகல் | 155,878,639.33 | - | - | - | - |
| புத்தளம் | 135,814,785.91 | - | - | - | - |
| அனுராதபுரம் | 74,464,110.15 | - | - | - | - |
| பொலனறுவை | 64,709,543.41 | - | - | - | - |
| பதுளை | 154,727,466.02 | - | - | - | - |
| மொனறாகலை | 93,395,875.47 | 8,841,444.27 | - | - | 8,841,444.27 |
| இரத்தினபுரி | 76,358,901.53 | - | - | - | - |
| கேகாலை | 9,164,107.35 | - | - | - | - |
| கிளிநொச்சி | 6,875,956.85 | - | - | - | - |
| வவுனியா | 6,747,500.00 | - | - | - | - |
| **மொத்தம்** | **1,797,306,966.41** | **8,841,444.27** | **0.00** | **0.00** | **8,841,444.27** |

குறிப்பு (05) - **பதினைந்து இலட்சம் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் கடன்கள்**

| மாவட்டம் | மொத்த வழங்கல் 01.01.2013 | மீதி 01.01.2013 | சீராக்கல்கள் | பெற வேண்டியுள்ள அறவிட வேண்டியுள்ள தொகை |
|---|---|---|---|---|
| கொழும்பு நகரம் (வடக்கு) | 35,026,841.07 | - | - | - |
| கொழும்பு நகரம் (தெற்கு) | 14,726,829.23 | - | - | - |
| கொழும்பு மாவட்ட அலுவலகம் | 25,632,720.35 | - | - | - |
| கம்பஹா | 30,666,163.80 | - | - | - |
| களுத்துறை | 22,839,394.81 | - | - | - |
| கண்டி | 59,515,113.95 | - | - | - |
| மாத்தளை | 8,579,332.36 | - | - | - |
| நுவரெலியா | 34,752,609.98 | - | - | - |
| காலி | 37,304,352.95 | | - | |
| மாத்தறை | 99,716,771.53 | - | - | - |
| அம்பாந்தோட்டை | 53,545,729.33 | - | - | - |
| யாழ்ப்பாணம் | 29,148,681.75 | - | - | - |
| மன்னார் | 16,672,374.32 | - | - | - |
| மாங்குளம் | 1,636,494.00 | 614,688.15 | - | - |
| மட்டக்களப்பு | 52,464,250.00 | - | - | - |
| அம்பாறை | 47,869,914.50 | - | - | - |
| திருகோணமலை | 32,865,329.78 | - | - | - |
| குருணாகல் | 48,946,250.00 | - | - | - |
| புத்தளம் | 33,078,871.03 | - | - | - |
| அனுராதபுரம் | 15,403,185.75 | - | - | - |
| பொலனறுவை | 17,459,832.25 | - | - | - |
| பதுளை | 27,864,115.76 | - | - | - |
| மொனறாகலை | 152,609,562.14 | 7,086,662.39 | - | - |
| இரத்தினபுரி | 21,190,512.69 | - | - | - |
| கேகாலை | 40,727,372.25 | 161,438.57 | - | 161,438.57 |
| கிளிநொச்சி | 3,618,192.70 | - | - | |
| வவுனியா | 13,064,435.15 | - | - | - |
| கல்முனை | 8,055,565.16 | - | - | - |
| **மொத்தம்** | **984,980,798.59** | **7,862,789.11** | **0.00** | **161,438.57** |

குறிப்பு (06) - <u>புதிய வீடமைப்பு நிதித் திட்ட முறைமையின் கீழான கடன்கள்</u>

ரூபா சதம்

| மாவட்டம் | மொத்த வழங்கல் 01.01.2013 | மீதி 01.01.2013 | சீராக்கல்கள் | பெற வேண்டியுள்ள அறவிட வேண்டியுள்ள தொகை | 2013.12.31 உள்ளவாறு மீதி |
|---|---|---|---|---|---|
| கொழும்பு நகரம் (வடக்கு) | 11,007,564.27 | 86,991.42 | - | 28,557.29 | 58,434.13 |
| கொழும்பு நகரம் (தெற்கு) | 3,285,537.22 | 126,443.47 | - | 42,776.31 | 83,667.16 |
| கொழும்பு மாவட்ட அலுவலகம் | 23,899,549.13 | 67,938.90 | - | 14,617.74 | 53,321.16 |
| கம்பஹா | 152,333,711.35 | 4,231,112.51 | - | 4,073,882.18 | 157,230.33 |
| களுத்துறை | 42,031,777.73 | - | - | - | - |
| கண்டி | 19,351,236.72 | - | - | - | - |
| மாத்தளை | 12,162,875.24 | 5,969.11 | - | - | 5,969.11 |
| நுவரெலியா | 13,497,658.02 | - | - | - | - |
| காலி | 12,636,532.50 | - | - | - | - |
| மாத்தறை | 11,365,330.48 | - | - | - | - |
| அம்பாந்தோட்டை | 13,763,515.75 | - | - | - | - |
| யாழ்ப்பாணம் | 2,064,946.66 | 101,459.81 | - | 3,308.95 | 98,150.86 |
| மன்னார் | 186,000.40 | - | - | - | - |
| மாங்குளம் | 1,725,238.96 | 77,233.04 | - | - | 77,233.04 |
| மட்டக்களப்பு | 3,651,404.20 | - | - | - | - |
| அம்பாறை | 16,327,070.50 | - | - | - | - |
| திருகோணமலை | 3,606,093.00 | - | - | - | - |
| குருணாகல் | 38,355,529.34 | 15,712.43 | - | 12,641.34 | 3,071.09 |
| புத்தளம் | 15,741,909.46 | - | - | - | - |
| அனுராதபுரம் | 79,074,576.43 | - | - | - | - |
| பொலனறுவை | 5,503,036.69 | - | - | - | - |
| பதுளை | 14,152,734.47 | - | - | - | - |
| மொனறாகலை | 15,733,867.96 | - | - | - | - |
| இரத்தினபுரி | 16,590,658.12 | - | - | - | - |
| கேகாலை | 21,104,202.71 | - | - | - | - |
| கிளிநொச்சி | 1,708,030.33 | - | - | - | - |
| வவுனியா | 2,175,313.26 | - | - | - | - |
| கல்முனை | 171,028.42 | - | - | - | - |
| **மொத்தம்** | **553,206,929.32** | **4,712,860.69** | **0.00** | **4,175,783.81** | **537,076.88** |

## குறிப்பு (07) - 1995 வீடமைப்புக் கடன் திட்டம்

ரூபா சதம்

| மாவட்டம் | மொத்த வழங்கல் 01.01.2013 | மீதி 01.01.2013 | சீராக்கல்கள் | பெற வேண்டியுள்ள அறவிட வேண்டியுள்ள தொகை | 2013.12.31 உள்ளவாறு மீதி |
|---|---|---|---|---|---|
| கொழும்பு நகரம் (வடக்கு) | 16,140,911.30 | 1,327,739.46 | - | 266,724.77 | 1,061,014.69 |
| கொழும்பு நகரம் (தெற்கு) | 7,339,908.25 | 1,436,498.19 | - | 267,123.39 | 1,169,374.80 |
| கொழும்பு மாவட்ட அலுவலகம் | 285,214,669.62 | 53,784,650.78 | 55,600.25 | 10,070,752.19 | 43,769,498.84 |
| கம்பஹா | 291,140,091.18 | 5,929,153.09 | 8,225,711.12 | 10,371,857.24 | 3,783,006.97 |
| களுத்துறை | 273,617,034.45 | 66,990,400.85 | - | 4,198,921.16 | 62,791,479.69 |
| கண்டி | 497,433,049.82 | 116,633,527.44 | - | 29,261,922.67 | 87,371,604.77 |
| மாத்தளை | 158,671,234.98 | 28,470,469.15 | - | 3,492,844.83 | 24,977,624.32 |
| நுவரெலியா | 229,078,332.63 | 79,743,556.80 | - | 3,428,335.26 | 76,315,221.54 |
| காலி | 189,094,583.06 | 29,933,585.66 | 3,000,000.00 | 6,349,952.57 | 26,583,633.09 |
| மாத்தறை | 258,852,481.16 | 36,779,484.25 | 640,500.00 | 3,692,188.73 | 33,727,795.52 |
| அம்பாந்தோட்டை | 149,881,248.30 | 21,193,504.54 | 3,146,748.73 | 13,545,344.84 | 10,794,908.43 |
| யாழ்ப்பாணம் | 195,052,364.78 | 31,642,055.40 | - | 4,608,092.79 | 27,033,962.61 |
| மன்னார் | 41,429,663.29 | 4,399,765.70 | - | 2,085,089.04 | 2,314,676.66 |
| மாங்குளம் | 8,810,688.75 | 6,938,587.89 | - | - | 6,938,587.89 |
| மட்டக்களப்பு | 146,954,735.56 | 16,656,275.45 | - | 5,868,208.13 | 10,788,067.32 |
| அம்பாறை | 96,095,420.84 | 2,087,495.65 | - | 640,024.94 | 1,447,470.71 |
| திருகோணமலை | 84,478,107.86 | 16,395,980.45 | - | 789,699.74 | 15,606,280.71 |
| குருணாகல் | 401,973,700.93 | 30,042,077.01 | - | 11,969,276.67 | 18,072,800.34 |
| புத்தளம் | 229,425,312.42 | 57,785,586.10 | - | 9,168,046.69 | 48,617,539.41 |
| அனுராதபுரம் | 202,210,176.39 | 7,759,108.84 | - | 7,759,108.84 | - |
| பொலனறுவை | 225,519,894.03 | 13,406,329.43 | - | 2,804,157.58 | 10,602,171.85 |
| பதுளை | 287,399,293.72 | 179,467,789.29 | - | 9,409,421.40 | 170,058,367.89 |
| மொனறாகலை | 147,111,572.72 | 60,034,130.46 | - | 9,338,556.24 | 50,695,574.22 |
| இரத்தினபுரி | 165,812,468.77 | 7,292,132.23 | - | 2,924,582.92 | 4,367,549.31 |
| கேகாலை | 339,178,146.72 | 38,434,967.63 | - | 9,925,338.55 | 28,509,629.08 |
| கிளிநொச்சி | 18,356,684.20 | 8,943,419.39 | - | - | 8,943,419.39 |
| வவுனியா | 109,341,773.83 | 20,212,533.62 | - | 7,478,519.92 | 12,734,013.70 |
பொலன்னறுவை
மாத்தளை
குருநாகல்
மட்டக்களப்பு
கண்டி
அம்பாறை
கம்பஹா
கேகாலை
நுவரெலியா
பதுளை
கொழும்பு
மொனறாகலை
களுத்துறை
இரத்தினபுரி
காலி
அம்பாந்தோட்டை
மாத்தறை

## மாவட்ட அலுவலகங்களின் பெயர் மற்றும் முகவரிகள்

1. மாவட்ட அலுவலகம் - கொழும்பு நகரம் (வடக்கு)
முகவரி: பரிசர மாவத்தை, மாளிகாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி - 011 2445546
தொலைநகல் - 011 2435146
மின்னஞ்சல் - dmccity@nhda.lk

2. மாவட்ட அலுவலகம் - கொழும்பு (நகரம் தெற்கு)
முகவரி: இல. 280/11, எல்விட்டிகல மாடி வீடு, கொழும்பு 08
தொலைபேசி - 011 2679857
தொலைநகல் - 011 2669753
மின்னஞ்சல் - dmmtown@nhda.lk

3. மாவட்ட அலுவலகம் - கொழும்பு மாவட்ட அலுவலகம்
முகவரி: 190, ஹொரண வீதி, கொட்டாவ
தொலைபேசி - 011 2178226
தொலைநகல் - 011 2178224
மின்னஞ்சல் - dmcolombo@nhda.lk

4. மாவட்ட அலுவலகம் - கம்பஹா
முகவரி: வலவ்வத்தை, கம்பஹா
தொலைபேசி - 033 2226017
தொலைநகல் - 033 2234265
மின்னஞ்சல் - dmgampaha@nhda.lk

5. மாவட்ட அலுவலகம் - களுத்துறை
முகவரி: 03வது மாடி, மாவட்ட செயலகம், களுத்துறை
தொலைபேசி - 034 2222298
தொலைநகல் - 034 2222298
மின்னஞ்சல் - dmkalutara@nhda.lk

6. மாவட்ட அலுவலகம் - கண்டி
முகவரி: யட்டிநுவர வீதி, கண்டி
தொலைபேசி - 081 2234967
தொலைநகல் - 081 2223139
மின்னஞ்சல் - dmkandy@nhda.lk

7. மாவட்ட அலுவலகம் - மாத்தளை
முகவரி: கச்சேகரி கட்டடத் தொகுதி, மாத்தளை
தொலைபேசி - 066 2222134
தொலைநகல் - 066 2222134
மின்னஞ்சல் - dmmatale@nhda.lk

8. மாவட்ட அலுவலகம் - நுவரெலியா
முகவரி: ஹாவாஎலிய, நுவரெலியா
தொலைபேசி - 052 2222925
தொலைநகல் - 052 2222925
மின்னஞ்சல் - dmneliya@nhda.lk

9. மாவட்ட அலுவலகம் - காலி
முகவரி: ஈகோற்ஸ் கட்டடம், கோட்டை, காலி
தொலைபேசி - 091 2234373
தொலைநகல் - 091 2234232
மின்னஞ்சல் - dmgalle@nhda.lk

10. மாவட்ட அலுவலகம் - மாத்தறை
முகவரி: புகையிரத நிலைய வீதி, மாத்தறை
தொலைபேசி - 041 2222986
தொலைநகல் - 041 2229257
மின்னஞ்சல் - dmmatara@nhda.lk

11. மாவட்ட அலுவலகம் - அம்பாந்தோட்டை
முகவரி: 42, புதிய வீதி, அம்பாந்தோட்டை
தொலைபேசி - 047 2222013
மின்னஞ்சல் - dmhambantota@nhda.lk

12. மாவட்ட அலுவலகம் - யாழ்ப்பாணம்
முகவரி: கண்டி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222203
மின்னஞ்சல் - dmjaffna@nhda.lk

13. மாவட்ட அலுவலகம் - மன்னார்
முகவரி: பள்ளிமுனை வீதி, உப்புக்குளம், மன்னார்
தொலைபேசி - 023 2222315
தொலைநகல் - 023 2222141
மின்னஞ்சல் - dmmannar@nhda.lk

14. மாவட்ட அலுவலகம் - முல்லைத்தீவு
முகவரி: கண்டி வீதி (A9), மாங்குளம்,(முல்லைத்தீவு)
தொலைபேசி - 021 2062033
தொலைநகல் - 021 2060022
மின்னஞ்சல் - dmmulativu@nhda.lk

15. மாவட்ட அலுவலகம் - மட்டக்களப்பு
முகவரி: கல்லடி, மட்டக்களப்பு
தொலைபேசி - 065 2224473
தொலைநகல் - 065 2227310
மின்னஞ்சல் - dmbatticaloa@nhda.lk

16. மாவட்ட அலுவலகம் - அம்பாறை
முகவரி: தேசிய வீடமைப்பு அதிகார சபை, அம்பாறை
தொலைபேசி - 063 2222045
தொலைநகல் - 063 2222045
மின்னஞ்சல் - dmampara@nhda.lk

17. மாவட்ட அலுவலகம் - திருகோணமலை
முகவரி: மின் உற்பத்தி நிலைய வீதி, திருகோணமலை
தொலைபேசி - 026 2222162
தொலைநகல் - 023 2222503
மின்னஞ்சல் - dmtrinco@nhda.lk

18. மாவட்ட அலுவலகம் - குருணாகல்
முகவரி: இல. 05, மிஹிந்து மாவத்தை, குருணாகல்
தொலைபேசி - 037 2222014
தொலைநகல் - 037 2222014
மின்னஞ்சல் - dmkurunegala@nhda.lk

19. மாவட்ட அலுவலகம் - புத்தளம்
முகவரி: கிராம எழுச்சி, ஆணமடுவ
தொலைபேசி - 032 2263427
தொலைநகல் - 023 2263427
மின்னஞ்சல் - dmputtalam@nhda.lk

20. மாவட்ட அலுவலகம் - அனுராதபுரம்
முகவரி: பண்டாரநாயக்க மாவத்தை, அனுராதபுரம்
தொலைபேசி - 025 2222558
தொலைநகல் - 037 2222649
மின்னஞ்சல் - dmanuradhapura@nhda.lk

21. மாவட்ட அலுவலகம் - பொலனறுவை
முகவரி: புலதிசிகம, ஹிங்குரக்கொட
தொலைபேசி - 027 2246362
தொலைநகல் - 027 2246362
மின்னஞ்சல் - dmpolonnaruwa@nhda.lk

22. மாவட்ட அலுவலகம் - பதுளை
முகவரி: சிகிச்சை நிலைய வீதி, பதுளை
தொலைபேசி - 055 2222113
தொலைநகல் - 037 2223163
மின்னஞ்சல் - dmbadulla@nhda.lk

23. மாவட்ட அலுவலகம் - மொனறாகல
முகவரி: மாவட்ட அலுவலகம், மொனறாகல
தொலைபேசி - 055 2276202
தொலைநகல் - 055 2276202
மின்னஞ்சல் - dmmonaragala@nhda.lk

24. மாவட்ட அலுவலகம் - இரத்தினபுரி
முகவரி: புதிய நகரம், இரத்தினபுரி
தொலைபேசி - 045 2228724
தொலைநகல் - 045 2228996
மின்னஞ்சல் - dmrathnapura@nhda.lk

25. மாவட்ட அலுவலகம் - கேகாலை
முகவரி: அம்பன்பிட்டிய, கலிகமுவ நகரம், கேகாலை
தொலைபேசி - 035 2229737
தொலைநகல் - 035 2229737
மின்னஞ்சல் - dmkegalle@nhda.lk

26. மாவட்ட அலுவலகம் - கிளிநொச்சி
முகவரி: 155, A9 வீதி, கிளிநொச்சி
தொலைபேசி - 021 2285757
தொலைநகல் - 021 2285757
மின்னஞ்சல் - dmkilinochchi@nhda.lk

27. மாவட்ட அலுவலகம் - வவுனியா
முகவரி: பார்க் வீதி, வவுனியா
தொலைபேசி - 024 2222214
தொலைநகல் - 024 2222050
மின்னஞ்சல் - dmvavuniya@nhda.lk

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

| | | |
|---|---|---|
| මගේ අංකය / எனது இல. / My No. ஈஎச்/டீ/என்எச்டீஏ/1/13/8 | මබේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date 2015 ஏப்ரல் 27 |

தலைவர்,

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை

**தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் அதன் துணைக் கம்பனிகளினதும் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் அதிகாரசபையினதும் அதன் துணைக் கம்பனிகளினதும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1979 இன் 17 ஆம் இலக்க வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 29.1 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விபரமான அறிக்கையொன்று அதிகாரசபையின் தலைவருக்கு 2014 நவம்பர் 26 ஆந் திகதி வழங்கப்பட்டது.

1.2 **நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்த ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.3 **கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். என்னால் உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு

மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வு நோக்கெல்லையையும் அளவையும் தீர்மானிப்பதற்கு 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவினது (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்றுணிவு அதிகாரத்தை வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

**முனைப்பழியுள்ள அபிப்பிராயம் - அதிகாரசபை**

இந்த அறிக்கையின் 2.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**முனைப்பழியுள்ள அபிப்பிராயம் - ஒன்றிணைந்த**

இந்த அறிக்கையின் 2.2 மற்றும் 2.3 ஆம் பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் அதன் துணைக் கம்பனிகளினதும் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள் - தொகுதி**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கியில் மொத்தப் பங்கு மூலதனத்தில் 49 சதவீதம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமாக இருந்த போதிலும் வங்கியின் நடவடிக்கைகளில் போதியளவான தாக்கத்தைச் செலுத்துவதற்கு அதிகாரசபைக்கு முடியாமையின் காரணமாக வங்கியின் இறுதி நிதிக்கூற்றுக்கள் அதிகாரசபையின் கணக்குகளுடன் ஒன்றிணைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபையால் அத்தொகுதியில் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் உரிமை மூலதன ஒன்றிணைந்த நிதி நிலைமைக்கூற்றில் உள்ளடக்கப்பட்ட போதிலும், அது தொடர்பான விரிவான தகவல்கள் ஒன்றிணைந்த நிதிக்கூற்றில் குறிப்புக்களாகக் காணபிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தொகுதிக்காகத் தயாரிக்கப்பட்ட நிதிச் செயலாற்றல்கூற்று ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சம்பந்தப்பட்ட தரப்பினரினதும் சம்பந்தப்பட்ட தரப்பாரதும் கொடுக்கல் வாங்கல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள் - அதிகாரசபை

### 2.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 - நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

(அ) நிதிக்கூற்றுக்களில் முகப்பில் காண்பிக்கப்படுகின்ற சகல கூறுகளுக்கும் உரிய போதியளவான வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபையால் ரூபா 131.68 மில்லியன் வெளிநாட்டு மானியம் தொடர்பாக போதியளவான வெளிப்படுத்தல்களைச் செய்தல் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிக்கூற்றுக்களுடன் பகிரங்கப்படுத்தப்படுகின்ற தகவல்களில் வெளிப்படுத்தவேண்டிய பின்வருபவைகள் அதிகாரசபையால் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(i) அதிகாரசபை அமைந்துள்ள இடம், சட்டரீதியான தன்மை மற்றும் அது அமுல்படுத்தப்படுகின்ற வலயம்

(ii) அதிகாரசபையின் செயற்பாடுகளின் தன்மை மற்றும் அதன் பிரதான நடவடிக்கைகளின் விபரம்

(iii) அதிகாரசபையின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்குரிய யாப்புக்கள் தொடர்பான தொடர்பு

### 2.3.2 நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள்

(அ) கணக்கீட்டுக் கொள்கை இலக்கம் 3.3 இன் படி இருப்பு, கிரயம் அல்லது தேறிய தேறக்கூடிய பெறுமதி போன்ற பெறுமதிகளில் குறைந்த பெறுமதிக்கு மீள் கணிப்பீடு செய்ய வேண்டிய போதிலும் இறுதியிருப்பில் உள்ள ரூபா 20.97 மில்லியன் தொகையான 04 வீடுகள் தற்போது தேறிய தேறக்கூடிய பெறுமதி மதிப்பீடு செய்யப்படாமல் 2009 ஆம் ஆண்டின் மதிப்பீட்டுப் பெறுமதியில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கணக்கீட்டுக் கொள்கை இலக்கம் 6.4 இன் படி நிலுவையாக இருந்த வீடமைப்புக் கடன் மீதியைத் தவிர்க்கும் போது ஏனைய சகல கடன்பட்டோரிடமிருந்தும் நிலுவையான கடன்தொகையில் 20 சதவீதம், வயதுப் பகுப்பாய்வைக் கவனத்தில் கொள்ளாது ஐயக்கடன் மற்றும் அறவிடமுடியாக் கடனுக்காக ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், வயதுப்பாகுப் பகுப்பாய்வு கவனத்தில் கொள்ளும் போது ரூபா 846.39 மில்லியன் தொகையான மொத்தக் கடன் மீதி 05 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவையாக இருந்தமையால் அக்கொள்கை கடன் அறவிடும் ஆபத்தினை அடிப்படையாகக் கொண்டிருந்தமையை கணக்காய்வின் போது ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது. மேலும் மேற்கூறப்பட்ட கொள்கையின் பரிகாரம் அந்தக் கடன்பட்டோர்களுக்காக ரூபா 200.80 மில்லியன் நிதிஏற்பாடு செய்யவேண்டிய போதிலும் கணக்குகளில் செய்யப்பட்ட நிதிஏற்பாடு ரூபா 140.67 மில்லியனாக இருந்தது.

(இ) கணக்கீட்டுக் கொள்கை இலக்கம் 6.4 இன்படி மாளிகாவத்தை புகையிரதத் திணைக்களத்தின் (சீஜீஆர்) வீடமைப்புத் திட்டத்திலிருந்து கிடைக்கவேண்டிய ரூபா 58.12 மில்லியன் தொகை செலுத்தவேண்டிய இழப்பீட்டிற்குப் பதிலாக ஈடுசெய்யப்பட்டிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய விரிவான கடன் மீதிப் பட்டியல் மற்றும் செலுத்த வேண்டிய காணி இழப்பீடுகளுக்குரிய விரிவான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக அதற்காகச் செய்யவேண்டிய மேலதிக நிதிஏற்பாட்டின் அளவை மதிப்பிடுவதற்கு கணக்காய்வின் போது முடியாதிருந்தது.

(ஈ) கணக்கீட்டுக் கொள்கை இலக்கம் 10.1.1 இன் படி வீடமைப்பு நோக்கத்திற்காக இழப்பீடு செலுத்தாமல் கைப்பற்றப்பட்ட காணிகளின் மதிப்பீட்டு சந்தைப் பெறுமதி உரிய காணிக் கணக்குகளில் காட்டப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு கணக்கு வைக்கப்படாமையின் அடிப்படையில் விற்பனை செய்யப்பட்ட காணிகளின் மதிப்பீடு செய்யப்பட்ட சந்தைப் பெறுமதி காணி விற்பனைக் கிரயத்தில் உள்ளடக்கப்படாமை காணிகளின் மொத்த இலாப விகிதம் அசாதாரணமாக உயர்வடைவதற்கு காரணமாக இருந்தது. உதாரணமாக மீளாய்வாண்டில் காணி விற்பனைக் கிரயமான ரூபா 259.67

மில்லியனுக்குரிய விற்பனைக் கிரயம் ரூபா 3.93 மில்லியன் ஆனமையால் மொத்த இலாப விகிதம் 98 சதவீதமான உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருந்தது.

### 2.3.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வீடமைப்பு உத்தேசத்திட்டங்களில் மேலும் எஞ்சியிருந்த காணிக் கூறுகள் மற்றும் வீடமைப்பு உத்தேசத் திட்டத்திற்காக பெறப்பட்ட/ கையேற்கப்பட்ட 943 ஹெட்டேயர் காணி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முன்னர் விற்பனை செய்யப்பட்ட வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய மீளாய்வாண்டின் போது ரூபா 18.51 மில்லியன் தொகையான வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட வீடுகளின் கிரயம் மாத்திரம் வீடுகளின் இருப்பிற்கு மாற்றப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய காணிகளின் பெறுமதி கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக வீடுகளின் இருப்பும் கைப்பற்றப்பட்ட காணிகளின் பெறுமதியும் சரியாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) அதிகாரசபையின் அலுவலகக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்ட 29 காணிக் கூறுகளுக்குரிய பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய ரூபா 1,353,185 தொகையான பெறுமதிசேர் வரி கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(உ) அதிகாரசபையால் நிறுத்தி வைக்கப்பட்ட ஜல்தர வீடமைப்புத் திட்டத்தில் இரண்டு வீடுகளின் பெறுமதியான ரூபா 3.42 மில்லியன் தொகை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கிக்குச் செலுத்தவேண்டிய மீதியாக அன்றி பொதுத் திறைசேரிக்குச் செலுத்தவேண்டிய மீதியாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கியின் மிகையூதியப் பங்குப் பெறுமதி ரூபா 276.5 மில்லியன் தொகை மூலதன ஒதுக்கமாகக் காண்பிப்பதற்குப் பதிலாக உள்நாட்டு மானியமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) அதிகாரசபையால் ஜல்தர வீடமைப்புத் திட்டத்திற்காக திறைசேரிக்குச் செலுத்த வேண்டிய ரூபா 17.65 மில்லியன் தொகையான பொறுப்புக்கள் மூலதன ஒதுக்கத்தின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஏ) கடன் சேகரிப்பாளர்களுக்குச் செலுத்திய தரகு, கணக்காய்வுக் கட்டணம், ஐயக் கடன் மற்றும் அறவிடமுடியாக் கடன்கள் போன்றவைகள் நிதிச் செலவினமல்லாத ரூபா 117.73 மில்லியன் தொகையான ஏனைய செலவினங்கள் நிதிச் செலவினத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டின் இறுதியில் பணிக்கொடை ஒதுக்கீடுகளின் பெறுமதியான ரூபா 520.22 மில்லியன் தொகை நடைமுறையல்லாப் பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அப்பெறுமதி நடைமுறைப் பொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) கால்நடை வளச் சபையின் கலகா தோட்ட வீடமைப்புத்திட்டத் திட்டத்திற்காகக் கிடைத்த ரூபா 13.31 மில்லியன் தொகைக்குரிய செயற்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டு 05 வருடங்களைக் கடந்திருந்த போதிலும் கணக்குகளில் தேவையான சீராக்கங்களைச் செய்யாமல் ஏனைய உதவிக் கணக்கின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஓ) வாடகை வீடு மற்றும் நகர வீடமைப்புத் திட்டங்களில் உறுதி வழங்கப்பட்ட வீடுகளின் பெறுமதி கணிக்கப்பட்டு அவற்றை கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி 2006 ஆம் ஆண்டு தொடக்கம் சரியாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது 08 வீடமைப்புத் திட்டங்களில் அவ்வாறு காணி உறுதி வழங்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 85 ஆகும்.

(ஔ) 2005 ஆம் ஆண்டின் போது வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் காணாமல் போன ரூபா 1,940,000 பெறுமதியான 13 மோட்டார் வாகனங்கள் தொடர்பாக போதியளவான ஒதுக்கீடுகள் கணக்குகளில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.3.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகளும் இணக்கஞ் செய்யப்படாத கணக்குகளும்**

(அ) நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள மீதிகள் அதற்குரிய பட்டோலைகளில் குறிப்பிடப்பட்ட மீதிகளுடன் இணக்கஞ் செய்யப்படாதிருந்ததுடன், அதனிடையே ரூபா 10.39 மில்லியன் வேறுபாடு கீழே காண்பிக்கப்படுகின்ற பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

| விடயம் | கணக்கின் படி | பட்டோலையின் படி | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் |
| மக்கள் வங்கி (சலுகைக் கடன் நிகழ்ச்சித் திட்டம் 2013) | 762.77 | 763.29 | 0.52 |
| மக்கள் வங்கி (சலுகைக் கடன் நிகழ்ச்சித் திட்டம் 2011) | 1,127.40 | 1,126.90 | 0.50 |
| மன்னார் பெரிய பள்ளிவாசல் காணியின் பெறுமதி | 0.08 | - | 0.08 |
| இரத்தினபுரி – நொத்தாரிஸ்வத்த காணியின் பெறுமதி | 19.41 | 10.20 | 9.20 |
| கொழும்பு – புழுமென்டல் காணியின் பெறுமதி | - | 0.09 | 0.09 |
| மொத்தம் | 1,909.66 | 1,900.48 | 10.39 |

(ஆ) அதிகாரசபை மாவட்ட அலுவலகங்களுடன் நடவடிக்கைகளை மேற்கொண்ட நடைமுறைக் கணக்குகளுக்கிடையே ரூபா 431,700 தொகையான வேறுபாடு தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

கைப்பற்றப்பட்ட காணிகளின் பெறுமதி ரூபா 212.07 மில்லியன் தொகைக்கும் ரூபா 3.55 மில்லியன் பெறுமதியான பெறுமதிசேர் வரி விடயத்திற்கும் உரிய விரிவான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் மொத்தக் கடன்பட்டோர் மீதியான ரூபா 3,656.48 மில்லியனில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டுவரப்படுகின்ற பெறவேண்டிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,406.6 மில்லியன் தொகையாக இருந்ததுடன் அது மொத்த பெறுமதியில் 66 சதவீதமாகும். இந்தக் கடன்பணத்தை அறவிடுவதற்கு அதிகாரசபை போதியளவான பிரகாரம் நடவடிக்கை எடுத்திருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் ஒப்பந்தக்காரருக்கும், ஏனைய வெளித்தரப்பினருக்கும் மற்றும் உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட்ட ரூபா 82.89 மில்லியன் கூட்டுத்தொகையான முற்பணத்திலிருந்து உரிய செயற்பாடு முடிவடைந்து 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்த ரூபா 80.24 மில்லியன் தொகையை தீர்த்து வைப்பதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் அதிகாரசபையின் கடன்கொடுத்தோர் பெறுமதி ரூபா 1,609 மில்லியனாக இருந்ததுடன் அதில் 02 வருடங்களுக்கும் 05 வருடங்களுக்கும் இடைப்பட்ட கடன்கொடுத்தோர் பெறுமதி ரூபா 29.2 மில்லியன் தொகையாகவும், 05 வருடங்களுக்கு மேற்பட்ட கடன்கொடுத்தோர் பெறுமதி ரூபா 1,057.26 மில்லியன்

தொகையாகவும் இருந்தன. இந்தக் கடன்களை தீர்த்து வைப்பதற்கான எந்தவித வேலைத்திட்டங்களும் கணக்காய்வின் போது அவதானிக்கப்படவில்லை.

(ஈ) ஏனைய 04 நிறுவனங்களிலிருந்து செயற்திட்டத்திற்காக பெறப்பட்ட கடனுக்காகச் செலுத்த வேண்டிய நிலுவைக் கடன் தவணைப் பணம் ரூபா 713.84 மில்லியன் தொகையும் நிலுவைக் கடன்வட்டி ரூபா 512.02 மில்லியன் தொகையும் நீண்ட காலமாக தீர்க்கப்படாதிருந்ததுடன் அந்த நிலுவைக் கடனையும் வட்டியையும் செலுத்தி விடுதலையாகும் நிதித்திட்டமும் காணப்படவில்லை.

(உ) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய காணி இழப்பீடுகளின் பெறுமதி ரூபா 324 மில்லியனாக இருந்ததுடன் அதிகாரசபை உரித்தைக் கையேற்ற திகதியில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக செலுத்த வேண்டிய காணி இழப்பீடுகளின் பெறுமதியான ரூபா 100 மில்லியனைத் தீர்த்துவைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 6.28 மில்லியன் தொகை கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபையிலிருந்து கிடைக்கவேண்டிய முற்பணத்தின் பெறுமதி கூட்டு ஆதன அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் மீதி உறுதிப்படுத்தப்பட்டு நிதிக்கூற்றுக்களில் தேவையான சீராக்கங்களைச் செய்வதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(எ) ஐக்கிய எமீர் அரசாங்கத்தின் ரெட்கிரசன்ட் கழகத்திற்கு 1998 ஆம் ஆண்டின் போது 60 வீடுகளைக் கொண்ட வீடமைப்புத் திட்டத்தை நிர்மாணிப்பதற்காக அதிகாரசபையால் எத்னாவல தோட்டத்தில் வழங்கப்பட்ட 726.35 பேர்ச் காணிக்காக அதிகாரசபைக்குச் கிடைக்கவேண்டிய ரூபா 5,297,604 தொகையில் ரூபா 1,882,604 தொகையை அறவிடுவதற்கு அதிகாரசபை மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையிலும் முன்வந்திருக்கவில்லை.

(ஏ) 2001 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 774,515 காணமல்போன காசு பெறவேண்டிய மீதியாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான ஒறுகொடவத்தையில் அமைந்துள்ள காணியில் கட்டிடத் தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்காக 2005 ஆம் ஆண்டின் போது அதிகாரசபையால் ரூபா 39.9 மில்லியன் செலவு செய்யப்பட்டதன் பின்னர் அதன் நிர்மாண நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருந்த போதிலும் அத்தொகை கிடைக்க வேண்டிய தொகையாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) யாழ்ப்பாண மாவட்ட அலுவலகத்தால் கூட்டுறவு கடன்வழங்கும் சங்க வீட்டுக் கடன் திட்டத்தின் (ரீசீசீஎஸ்) கீழ் வழங்கப்பட்ட ரூபா 5,965,000 பெறுமதியான 1,468 வீட்டுக் கடன்களுக்குரிய கடன் கோவைகள் தொலைந்தமையின் காரணமாக அக்கடன்களை மீள அறவிடும் இயலுமை அதிகாரசபைக்கு முடியாதிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பான எவ்வித நடவடிக்கைகளும் 2013 ஆம் ஆண்டின் போதிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் XIV ஆவது அத்தியாயத்தின் 114 ஆம் பிரிவு மற்றும் 2013 | உழைக்கும் போதே செலுத்தும் வரி உரிய உத்தியோகத்தர்களின் சம்பளத்திலிருந்து கழிக்கப்பட்டு செலுத்தவேண்டிய போதிலும் அவ்வாறின்றி அதிகாரசபையால் |

| | | |
|---|---|---|
| | செப்தெம்பர் 11 ஆந் திகதிய 02/2013 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் போது ரூபா 117,300 தொகை வரிக்காகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவு அதிகாரச்சட்டம் | மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 555.07 மில்லியன் தொகை பணிக்கொடைக்காக ஏற்பாடு மேற்கொள்ளப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு வெளியே மேற்கொள்ளப்பட்ட முதலீட்டின் பெறுமதி ரூபா 34.85 மில்லியன் மாத்திரமாகும். |
| (இ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11(பீ) பிரிவு | பணத்தை முதலீடு செய்யும் போது நிதி, திட்டமிடல் அமைச்சரின் இணக்கப்பாட்டைப் பெறவேண்டிய போதிலும் அதிகாரசபையால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 540.6 மில்லியன் முதலீடு தொடர்பாக அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் நிதிப்பிரமாணம் 104 | 11 வாகனங்களுக்கு ஏற்பட்ட விபத்துக்களுக்காக ரூபா 457,234 தொகையான நட்ட இழப்புக்கள் மற்றும் நட்ட இழப்பு மதிப்பிடப்படாத 12 வாகன விபத்துக்களுக்குரிய அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | சலுகைக்கடன் வழங்கும் ஆலோசனைக் கோவையின் 7.3 மற்றும் 7.4.1 ஆம் பிரிவுகள் | நிர்மாணிக்கப்படுகின்ற அல்லது அபிவிருத்தி செய்யப்படுகின்ற வீடுகள் அமைந்துள்ள காணியின் சட்டரீதியான உரித்தை கடன்காரருக்கு அல்லது அவரது துணைவருக்கு இருக்க வேண்டிய |

| | | |
|---|---|---|
| | | போதிலும் கடனாளிக்கு சட்டரீதியான உரித்தில்லாத ஏனைய தரப்பினருக்கு சொந்தமான காணிகளில் அமைந்துள்ள வீடுகளை அபிவிருத்தி செய்வதற்காக அதிகாரசபையின் இரண்டு உத்தியோகத்தர்களுக்கு ரூபா 975,000 தொகையான கடன்கள் வழங்கப்பட்டிருந்தன. |
| (ஊ) | 2013 ஜூன் 17 ஆந் திகதிய 13/0463/517/010 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம் | அரசாங்க ஊழியர்களுக்கும் மத்தியதர வகுப்பினர்களுக்கும் கொள்வனவு செய்யக்கூடிய நியாயமான விலைக்கு முன் விற்பனை அடிப்படையில் வீடுகளின் விலை தீர்மானிக்கப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபையால் அந்த வீடு ஒன்றின் விலை உயர்ந்த அல்லது மத்திய வருமானத் தரப்பினர்களுக்கு கொள்வனவு செய்ய முடியாத உயர்ந்த பெறுமதியில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.<br>உதாரணம் :- கொழும்பு பாமன்கடை கவிரத்ன பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட வீடொன்றின் பெறுமதி ரூபா 33.2 மில்லியனாக இருந்ததுடன் எல்விடிகல கட்டம் V இன் கீழ் நிர்மாணிக்கப்பட்ட வீடொன்றின் பெறுமதி ரூபா 15 மில்லியனாக இருந்தது. |

## 3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

நிதிக்கூற்றுக்களின் படி 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான அதிகாரசபையின் நிதி விளைவுகள் ரூபா 232,602,241 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 303,405,460 ஆக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதி விளைவுகள் ரூபா 73,803,219 இனால் அதிகரித்திருந்ததுடன் பற்றாக்குறை 23 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. மீளாய்வாண்டையும் முன்னைய ஆண்டையும் ஒப்பீடு செய்த போது கடன்வட்டி வருமானம் ரூபா 327,239,161 இனால் உயர்வடைந்தமை, காணி மற்றும் வீடுகளின் விற்பனை வருமானம் ரூபா 139,732,510 இனால் உயர்வடைந்தமை நிதி விளைவுகளின் அதிகரிப்பிற்கு அடிப்படைக் காரணமாக இருந்தன.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டில் வாடகை வருமானம் 19 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

(ii) வீடு மற்றும் காணி விற்பனை இலாபம் முறையே 42 சதவீதத்தாலும் 50 சதவீதத்தாலும் உயர்வடைந்திருந்தது.

(iii) கூட்டு ஆதனங்களை பழுதுபார்ப்பதற்காக திறைசேரியிலிருந்து பெறப்பட்ட ரூபா 245.27 மில்லியனின் அடிப்படையில் வருமானம் 12 சதவீதத்தால் உயர்வடைந்திருந்தது.

(iv) அதிகாரசபையால் வங்கிக் கடன்களுக்காக வட்டி செலுத்தும் அடிப்படையில் நிதிக் செலவினம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 72 சதவீதத்தால் உயர்வடைந்திருந்தது.

(v) மீளாய்வாண்டில் தேறிய நட்டம் மொத்த வருமானத்தின் 12 சதவீதமாக இருந்தது.

(vi) மீளாய்வாண்டின் இறுதியில் அதிகாரசபையின் நடைமுறை விகிதம் 1:1:12 ஆகவும், விரைவுச் சொத்து விகிதம் 1:1:29 ஆகவும் இருந்தன. எனவே

செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக தேவையான தொழிற்படு மூலதன பற்றாக்குறை அதிகாரசபைக்கு இருந்தமை இதிலிருந்து அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

## 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஜனசெவன விறுகம்மான, தொடர்வீடுகள், உதவி வீடமைப்புக் கடன் மற்றும் சசுணென் செவன வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் வேலை பூர்த்தி செய்யப்பட்ட நிர்மாணங்களின் பௌதீக செயல்முன்னேற்றம் 1 சதவீதத்திற்கும் 15 சதவீதத்திற்குமிடையிலான அளவில் காணப்பட்டது.

(ஆ) ''சகஸ்ர லங்கா'' (முதலீட்டுச் செயற்திட்டம், அரசாங்க தனியார் பங்களிப்பு வீடுகள்) செயற்திட்டத்தின் கீழ் 14 வீடமைப்புத் திட்டங்களுக்கு ரூபா 22,369 மில்லியன் பெறுமதியான 3,152 வீடுகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், வேலை ஆரம்பிக்கப்பட்ட வீட்டுத்திட்டங்கள் 02 ஆக இருந்ததுடன் ரூபா 1,196.5 மில்லியன் பெறுமதியான 02 வீட்டுத்திட்டங்களை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்தன. அவ்வாறே மீளாய்வாண்டின் இறுதியில் ஒரு வீட்டின் நிர்மாணமும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) ''சகஸ்ர லங்கா'' வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் (நேரடியான நிர்மாணம் மற்றும் மீள் குடியேற்றம்)

(i) 60 வீட்டு அலகுகளை ரூபா 250 மில்லியனில் கட்டுவதற்கு மீளாய்வாண்டின் போது திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தக் காரர்களைத் தெரிவு செய்வதிலுள்ள தாமதத்தினால் அதில் எந்த ஒரு வீட்டின் வேலையும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2011 ஆம் ஆண்டின் போது வேலை ஆரம்பிக்கப்பட்டதும் மீளாய்வாண்டின் போது வேலை பூர்த்திசெய்வதற்கும் திட்டமிடப்பட்ட யக்கல சியனே உயன வீடமைப்புத் திட்டத்தின் ஒப்பந்தக்காரருக்கு பணம் செலுத்துவதிலுள்ள தாமதத்தின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியளவில் நிர்மாண நடவடிக்கைகளின் பௌதீக செயல்முன்னேற்றம் 49 சதவீதமாக இருந்தது.

### 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இழப்பீடு செலுத்த வேண்டிய காணி, காணி சுவீகரித்தல் அதிகாரச்சட்டத்தின் 38(அ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையால் உரித்துக் கையேற்கப்பட்டிருந்த போதிலும் பிரச்சினைகளுடன் கூடிய நிலைமையின் அடிப்படையில் சில காணிகள் அதிகாரசபைக்கு கையேற்பதற்கு நீண்டகாலம் எடுத்திருந்ததுடன் அதன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு செலுத்தவேண்டிய இழப்பீட்டுப் பணம் ரூபா 41,958,932 ஆக இருந்ததுடன் அதற்காக செலுத்தவேண்டிய நிலுவை வட்டி ரூபா 52,221,612 ஆகும்.

(ஆ) வீடமைப்புத் திட்டத்தை நிர்மாணிப்பதற்கு முன் உரிய உள்ளூராட்சி நிறுவனத்தின் மூலம் வீடமைப்புத் திட்டம் அங்கீகரித்துக் கொள்ளப்படாமல் வீடுகளை நிர்மாணித்தமையின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் 26 வீடமைப்புத் திட்டங்களின் 1,986 வீட்டு அலகுகளுக்குரிய இணக்கச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளுதல் கேள்விக்குரியதாக இருந்தது. அதன் காரணமாக வீடமைப்புத் திட்டத்திற்குரிய வீடுகளை, வீட்டு உரிமையாளர்களுக்கு கையளிப்பதற்கான முகாமைத்துவ சபை தாபிக்க முடியாமையால் அந்த வீடமைப்புத் திட்டங்களை பராமரித்தல் மற்றும் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளை மேலும் அதிகாரசபையால் செய்ய வேண்டியேற்பட்டிருந்தது. அதன்படி இவ்வாறான வீடமைப்புத் திட்டங்களை பராமரிக்கும் நடவடிக்கைகளுக்காக ரூபா 13.57 மில்லியன் தொகையும், பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக ரூபா 245.6

மில்லியன் தொகையும் மீளாய்வாண்டின் போதும் செலவிடுவதற்கு அதிகாரசபைக்கு ஏற்பட்டிருந்தது. ஆரம்பத்தில் கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவம் கவனம் செலுத்தாதிருந்தமை இதற்கான காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) குருனாகல் மாவட்டத்தில் 507 குடும்பங்களுக்கு சூரிய சக்தி முறைமையை வழங்குவதற்காக 1989 - 1994 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட கடன்தொகையில் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அறவிடவேண்டிய ரூபா 4,104,961 தொகையான மீதியை அறவிடுவதற்கு குறிப்பான வேலைத்திட்டங்கள் அதிகாரசபைக்கு இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) கண்டி மாநகர சபைக்குச் சொந்தமான காணியில் அதிகாரசபையால் நிர்மாணிக்கப்பட்ட 32 வீடுகளைக் கொண்ட மஹியாவ வீடமைப்புத் திட்டத்திற்காக ரூபா 20 மில்லியன் நிர்மாண கிரயமாகச் செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய பணம் கண்டி மாநகர சபையிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு அதிகாரசபைக்கு முடியாதிருந்தது.

(உ) 2010 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட காணி மெய்மையாய்வு அறிக்கையின்படி, அதிகாரசபைக்குரிய 645.66 ஹெக்டேயர் காணி இனங்காணப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அதில் அனுமதியற்ற குடியிருப்புக்கள் 208.75 ஹெக்டேயர் காணியில் இருந்தமை இனங்காணப்பட்டிருந்தது. இவ்வாறே வட மாகாணத்திற்குரிய 05 மாவட்டங்களின் காணிகள் தொடர்பான மெய்மையாய்வும் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) ரூபா 22.52 மில்லியன் கிரயமான ஒதுக்கப்பட்ட 11 வீடுகள் 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக மீளாய்வாண்டின் இறுதியில் மேலும் அறவிடவேண்டியிருந்த ரூபா 47.66 மில்லியன் பெறுமதியான தொகையை அறவிடுவதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(எ) 1991 ஆம் ஆண்டின் போது 15 சதவீத வருடாந்த வட்டி வீதத்தில் சனாதிபதி நிதியத்திலிருந்து பெறப்பட்ட ரூபா 250 மில்லியன் கடன்தொகையில் செலுத்துவதற்கு இணங்கப்பட்ட ரூபா 195 மில்லியன் தொகை 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பதற்கு அதிகாரசபைக்கு முடியாதிருந்தது. முறையாக கடன் தவணைப்பணம் செலுத்தாமையின் அடிப்படையில் அத்திகதியில் நிலுவைக் கடனும் வட்டி மீதியும் ரூபா 286.66 மில்லியனாக இருந்தது. மேலும், எவ்வாறாயினும் செலுத்த வேண்டிய உயர் வட்டி வீதத்தைக் குறைப்பதற்கும் அதிகாரசபை எவ்வித முயற்சியும் எடுத்திருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்படவில்லை.

(ஏ) அதிகாரசபையால் மீளாய்வாண்டின் போது வீட்டு வாடகை வருமானமாக ரூபா 22.61 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கு நேரொத்த வருமானம் ரூபா 38.98 மில்லியனாக இருந்தது. அவ்வாறு குறைந்த வருமான நிலைமையைக் காட்டுவதற்கு வாடகை வருமானம் தற்போதைய மதிப்பீட்டிற்கு ஏற்ப திருத்தப்படாமை, சுற்றாடல் வசதிகளைக் கருத்திற்கொண்டு அதற்கு ஈடுகொடுக்கும் வகையில் வகைப்படுத்தப்பட்ட கட்டண முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டமை போன்றன காரணங்களாக இருந்தன.

**4.3 வரி முகாமைத்துவத்தின் நலிவுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 நவம்பர் 07 ஆந் திகதிய 409032877 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் தேசிய இயந்திர உபகரண நிறுவனத்திற்குரியதாக அதிகாரசபைக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரகாரம், அதிகாரசபையின் பெறுமதிசேர் வரி இலக்கத்தின் கீழ் 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளுக்குரிய செலுத்தவேண்டிய ரூபா 15.33 மில்லியன் வரித்தொகை மற்றும் அதற்குரிய ரூபா 7.12 மில்லியன் தொகையான தண்டப்பணங்களைச் செலுத்துவதற்கு அல்லது தீர்த்து வைப்பதற்கு 2014 ஒக்தோபர் 31 வரையும் அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 22.45 மில்லியன் தொகையான பிற்போட்ட வரிப்பொறுப்புக்களைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் மீள அறவிடுவதற்கு அல்லது ஈடுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்த 2003, 2004 மற்றும் 2005 ஆம் ஆண்டுகளுக்குரிய மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ரூபா 14.38 மில்லியன் தொகையான பெறுமதி சேர் வரித்தொகை மேலும் கிடைக்க வேண்டிய தொகையாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 4.4 செயற்பாட்டு செயற்திறனின்மை

அதிகாரசபையின் அடிப்படைச் செயற்பணியாக இலங்கையில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அடிப்படை வசதிகளைக் கொண்ட பாதுகாப்பான வீடொன்றை உரித்தாக்கிக் கொள்வதாக இருந்த போதிலும் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கும்போது பின்வரும் நலிவுகள் வெளிப்படுத்தப்பட்டமையால் முகாமைத்துவம் அது தொடர்பாக கவனம் செலுத்தாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(அ) 93 ஆம் தோட்ட வீடமைப்புச் செயற்திட்டத்தில் ரூபா 6,195,522 பெறுமதியான வீடொன்றிற்காக 2005 சனவரி 19 ஆந் திகதி ரூபா 1,000,000 முற்பணம் பெறப்பட்டிருந்த போதிலும் அதற்கான விற்பனை உடன்படிக்கைக்கு இணங்க மிகுதிப்பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபைக்குரிய ஹோமாகம ஜல்தர மற்றும் தியவன்னா தோட்டம் போன்ற வீட்டுத்திட்டங்களில் 02 வீடுகள், வீடுகளை ஒதுக்கும் முறையான திட்டத்திற்கு முறையான எவ்வித உடன்படிக்கையுமின்றி மூன்று நபர்களுக்கு முற்பணத் தொகையையேனும் பெற்றுக்கொள்ளாது மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையிலும் குடியிருப்பதற்காக விடுவிக்கப்பட்டிருந்தன.

(இ) கண்டி மாவட்ட செயலகத்தால் 16 வீட்டு அலகுகளைக் கொண்ட கலஹா வீட்டுத்திட்டத்திற்காக 1998 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை ரூபா 2.67 மில்லியன் தொகை செலவிடப்பட்டதன் பின்னர் அதன் நிர்மாண நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்ததுடன் 2004 ஆம் ஆண்டு வரையும் அது தொடர்பாக முறையான வேலைத்திட்டம் ஒன்று ஈடுபடுத்தப்படாமல் செயற்பாடற்றுக் காணப்பட்டமையின் காரணமாக அவை அனுமதியற்ற குடியிருப்பாளர்களால் பலாத்காரமாக கைப்பற்றி இது வரையிலும் அதில் குடியிருந்து வருகின்றனர்.

(ஈ) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வங்கி இணக்கக்கூற்று அறிக்கையின் படி ரூபா 2,135,939 பெறுமதியான தீர்வு காணப்படாத 11 வங்கிப் பதிவுகள் தலைமை அலுவலகத்திலும், 07 மாவட்ட அலுவலகத்திலும் காணப்பட்ட போதிலும் அவற்றைத் தீர்த்து வைப்தற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) தோட்ட வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்காக தேசத்தைக் கட்டியெழுப்பும் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சிலிருந்து 2008 ஆம் ஆண்டின் போது கிடைத்த ரூபா 756,785 தொகை அதிகாரசபையால் மில்லகந்த மற்றும் புரொசெஸ்டர் என்ற தோட்ட வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்காக பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி பொறுப்பிற்கு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் அந்தப் பிரிவினால் உரிய செயற்திட்டம் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. எனினும் அது தொடர்பாக எவ்வித பின்தொடர் நடவடிக்கைகளும் அதிகாரசபையால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 04 வருடங்களுக்கு முன்னர் பூர்த்திசெய்யப்பட்ட 13 வீடுகளையும் 08 கடைகளையும் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் விற்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான இரத்தினபுரியில் அமைந்துள்ள கல்கடுவவத்த என்ற பெயருடைய காணியைக் கையேற்பதற்காக 2000 ஏப்ரல் 19 ஆந் திகதி பெறப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் ரூபா 8.69 மில்லியன் தொகை 2012 மார்ச் 20 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்த போதிலும் பெறப்பட்ட இந்த மதிப்பீடு வருடமொன்றிற்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டமையினாலும் உரிய கொடுப்பனவுகளுக்கு அதிகாரசபைக்கு 12 வருட காலம் கடந்தமையாலும் அந்தக் காணியின் 2012 ஆம் ஆண்டிற்குரிய புதிய மதிப்பீட்டுப் பெறுமதியான ரூபா 145 மில்லியன் தொகையைச் செலுத்துமாறு நகர அபிவிருத்தி அதிகாரசபை அறிவித்திருந்தது. எனினும் அந்தக் காணி கையேற்றல்களோ அல்லது கைவிடல் தொடர்பான இறுதித் தீர்மானத்திற்கு 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதிகாரசபை இணங்கியிருக்கவில்லை.

**4.6 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

2008 தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரையான ஆண்டுகளுக்குரிய கணக்காய்வு அறிக்கைகளின் மூலம் சுட்டிக்காண்பிக்கப்பட்டதன் படி டார்லி வீதியில் அமைந்துள்ள 01 ஏக்கர் 26.5 பேர்ச் இனையுடைய காணி வீடமைப்பு அதிகாரசபை மற்றும் தனியார் கம்பனியுடன் செய்துகொள்ளப்பட்ட கூட்டுத்தொழில் முயற்சி உடன்படிக்கையின் பிரகாரம் வீடமைப்பு அபிவிருத்திச் செயற்திட்டற்காக ஒதுக்கப்பட்ட போதிலும் அந்த கூட்டுமுயற்சி உடன்படிக்கை 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அமுல்படுத்தாமையின் காரணமாக அந்தக் காணி 2008 ஆம் ஆண்டு முதல் விளைவற்றக் காணப்பட்டது.

**4.7 கடன் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டின் இறுதியில் வீடமைப்புக் கடன் நிகழ்ச்சித்திட்டத்தின் கடன்பட்டோர் மீதி மற்றும் மூலதன மீதிகள் முறையே ரூபா 2,531.53 மில்லியன் மற்றும் ரூபா 11,269.34 மில்லியன்களாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் முறையே ரூபா 2,412.31 மில்லியன் மற்றும் ரூபா 8,223.61 மில்லியனாக இருந்தன.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது உள்ளபடியான அறவீடு ரூபா 2,385.75 மில்லியனாக இருந்ததுடன் அது பாதிடப்பட்ட அறவீடுகளில் 74 சதவீதமாக இருந்தது.

(ஆ) அதிகாரசபையால் பாதிடப்பட்ட கடன் அறவீடுகளின் அளவைத் தீர்மானிக்கும் போது மொத்த கடன்பட்டோர் மீதியில் 73 சதவீதமான கடன்பட்டோரின் எண்ணிக்கையே கவனத்தில் கொள்ளப்பட்டமையால் அது கடன் முகாமைத்துவ முறைமையின் நலிவாக இருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது செயற்பாடற்ற கடன்பட்டோர் எண்ணிக்கை மொத்தக் கடன்பட்டோர் எண்ணிக்கையில் 78 சதவீதம் மாத்திரமாகும்.

(ஈ) கடன் சேகரிப்பு தரகுக்காக ரூபா 57.34 மில்லியன் அளவில் செலவினமொன்றைச் செய்திருந்த போிலும் மொத்த கடன்பட்டோர் பெறுமதியில் 03 வருடங்களுக்கு மேற்பட்ட கடன் பெறுமதியில் 76 சதவீத அளவில் இருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது மீளாய்வாண்டின் கடன் அறவீடுகளின் செயல்முன்னேற்றம் 5.8 சதவீதமாக இருந்தது.

(உ) சலுகைக் கடன் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக அதிகாரசபை அரச வங்கிகளிலிருந்து பணத்தைக் கடனுக்குப் பெற்றிருந்ததுடன் வட்டியுடன் மாதாந்த கடன் தவணைப் பணம் (அதிகாரச சபை உரிய பிரகாரம் கடன் பணத்தை அறவிடாதிருந்த போதிலும்) அதிகாரசபையால் குறிப்பிட்ட திகதியில் உள்ளவாறு வங்கிக்குச் செலுத்துவதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. அதன்படி மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு கடனாளிகளால் அதிகாரசபைக்கு கொடுப்பனவுகள் நிலுவையான ரூபா 125.19 மில்லியன் தொகை அதிகாரசபையின் நிதியத்திலிருந்து வங்கிக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

**4.8 அதிகாரசபையின் வளங்களை ஏனைய அரச நிறுவனங்களுக்குக் கையளித்தல்**

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 9.4 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு முரணாக மீளாய்வாண்டின் இறுதியில் வரிசை அமைச்சிற்கும் கல்வி அமைச்சிற்கும் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்ட 19 உத்தியோகத்தர்களுக்கு/ ஊழியர்களுக்குச் செலுத்தப்பட்ட சம்பளம் ரூபா 6.41 மில்லியனாக இருந்தது. அதற்கு மேலதிகமாக வரிசை அமைச்சிற்கு 06 வாகனங்களும் வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) ஏனைய அரச நிறுவனங்களின் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்ட அதிகாரசபையின் ஊழியர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்குமாக 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அதிகாரசபைக்கு அறவிடவேண்டியிருந்த தொகை ரூபா 71.84 மில்லியனாகும். அதில் ரூபா 18.43 மில்லியன் தொகை 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்ததுடன் மேலும் ரூபா 46.69 மில்லியன் தொகை 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**4.9 மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையின் மனிதவளத் திட்டத்தின்படி, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 2,493 ஆகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 1,375 ஆக இருந்தது. எனினும் அத்திகதியில் உள்ளபடியான பதவியணியினர் 2,307 ஆனமையால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை விஞ்சி ஒட்டுமொத்தமாக 932 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இந்த மேலதிக பதவியணியில் நாளாந்த படி செலுத்தும் அடிப்படையில் சேர்க்கப்பட்ட 476 உத்தியோகத்தர்களும் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட 42 உத்தியோகத்தர்களும் இருந்தனர்.

(ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 9.3.1 ஆம் பிரிவிற்கு முரணாக 24 உத்தியோகத்தர்களுக்கு 01 மாதம் முதல் 07 வருடங்கள் வரையிலான காலம் பதில்கடமை மற்றும் கடமைகளின் மேவுகைக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 கூட்டிணைந்த திட்டம்**

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 5.1.2 ஆம் பந்தியின் பிரகாரம் அந்தந்த வருடங்களின் இறுதியில் கூட்டிணைந்த திட்டத்தின் பணிகளை நிறைவேற்றுவது தொடர்பான செயல்முன்னேற்றம் மற்றும் அமுல்படுத்தப்படாத மற்றும் மெதுவாகவுள்ள பிரிவுகள் தொடர்பாக மதிப்பீடு செய்து எஞ்சிய நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபையால் 2013 - 2017 காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தை அமுல்படுத்துவதிலுள்ள நலிவுகளாக போதியளவான பதவியணியினர் இல்லாதிருந்தமை இனங்காணப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் வெற்றிடமாகக் காணப்பட்ட அத்தியவசிய தொழில்திறனாளிகளின் எண்ணிக்கை 08 ஆகும்.

**5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்**

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி 40,169 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரையில் 21,290 வீட்டு அலகுகள் அதாவது 53 சதவீதத்தை அடைந்துகொள்வதற்கு அதிகாரசபைக்கு முடியாதிருந்தது.

**5.3 உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வு தொடர்பாக பின்வரும் அவானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சில மாவட்ட அலுவலகங்கள் சில வருடங்களாக கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருடாந்த கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பொறுப்புக்களின் செயலாற்றல் தொடர்பில் கணக்காய்வில் போதியளவான கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்காக அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 48 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் சேவையில் ஈடுபட்டிருந்த ஊழியர் எண்ணிக்கை 21 ஆகும்.

**5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் செலவினங்களுக்கிடையே கவனத்தில் கொள்ளக்கூடிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5.5 ஆண்டறிக்கை**

அதிகாரசபையால் 2012 ஆம் ஆண்டிற்குரிய ஆண்டறிக்கை மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.6 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

அதிகாரசபைக்குச் சொந்தமான லிபர்டி பிளாசா சுற்றுலா விடுதி ஓவீடீசீ நிறுவனத்திற்கு விற்பனை செய்யும் போது அரசாங்க மதிப்பீடொன்று பெறப்படாமல் அதிகாரசபையின் மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் மாத்திரம் கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும் இந்த சொத்துக்களுக்குரியதாக பின்னர் பெறப்பட்ட அரசாங்க மதிப்பீட்டாளரின் மதிப்பீடு ரூபா 11,520,000 தொகையாகவும், ஓடீடீசீ நிறுவனத்தினால் செலுத்தப்பட்ட தொகை ரூபா 9,000,000 ஆகவும் இருந்தது. இது தொடர்பாக 2012 நவம்பர் 23 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழுவின் கலந்துரையாடல்களுக்கு உள்ளாக்கப்பட்டிருந்ததுடன் அந்த செயற்குழுக்கூட்ட கட்டளையின்படி, தன்னிச்சையான கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புடைய பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2014 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) ஒப்பந்தக் கட்டுப்பாடும் செயல்முன்னேற்ற மீளாய்வும்
(ஆ) முற்பணம்
(இ) பொருட்பதிவேட்டுக் கட்டுப்பாடு
(ஈ) கணக்கீடு
(உ) மனித வள முகாமைத்துவம்

ஒப்பம்:- டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)